குடும்ப நாவல் சிறப்பு வெளியீடு - 12

ரூ. 15

# ஜெய்சக்தி



# என்னுள் கலந்த கவிதை




## 1

''முகூர்த்த நேரமே நெருங்கிடுச்சு'' என்றார் காளமேகம்.

''முகூர்த்த நேரம் நெருங்கறதா? கிட்டத்தட்ட முடியப்போகுது'' என்றார் கஸ்தூரி.

''கஸ்தூரி கலைமானே! கண்ணம்மா! உம் மகளுக்குச் சொல்லும்மா'' என்று கிண்டல் செய்தார் காளமேகம்.

இவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டு சற்றுத் தள்ளி ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தாள் தாரா.

''ஏம்மா மேக்கப் பண்ணினாலும் பண்ணுவாங்க - இப்படியா மூணு மணி நேரம்?''என்றார் காளமேகம்.

''உங்களுக்கு என்னப்பா வந்தது? சிலபேர் அப்படித்தான் நல்லா அலங்காரம் பண்ணிட்டுத்தான் வெளியில போகணும்னு நினைப்பாங்க'' என்றாள் தாரா.

''ஏம்மா நீயும் தான் அலங்காரம் பண்ணினே! அதிகபட்சம் ஒரு பதினைஞ்சு நிமிஷம். நீ என்ன பாக்கறதுக்கு நல்லாயில்லையா? சொல்லப்போனால் நீ இன்னும் நீட்டா் அழகா இருக்கே!'' என்றார் காளமேகம்.

தாரா வாயைப் பொத்தி சைகை காட்டி ''பேசாமல் இருங்கப்பா. காதுல விழுந்தது...காளிங்க நர்த்தனம் ஆடிடுவா!'' என்றாள்.

''ஆமா்ம்மா, அது வேற இருக்கு'' என்று சலித்துக் கொண்டு சின்ன மகளின் எதிரிலே ஒரு நாற்காலியில் போய் அமர்ந்தார் காளமேகம்.

''ஏம்மா இவளுக்கு மாப்பிள்ளை பார்க்கறது பெரிய ரிஸ்கா இருக்கும் போல இருக்கே?'' என்றார்.

கஸ்தூரி மெதுவாக அருகிலே அமர்ந்து கொண்டார். ''ஆமாங்க, பெரிய பணக்காரனாத்தான் பார்க்கணும். அதுவும் அவனோட

சம்பளத்தில் ஒரு பங்கு இவளுடைய மேக்கப்புக்கே கொடுக்கணும்'' என்றார்.

''நம்ம தகுதிக்கு பெரிய பணக்கார மாப்பிள்ளையெல்லாம் எங்கே போய் பார்க்கறது? அதுதான் எனக்கு கவலையா இருக்கு'' என்று பாதி வேடிக்கையும் பாதி விளையாட்டுமாக சொன்னார் காளமேகம்.

''அப்பா, அதெல்லாம் அப்புறம் மாறிக்குவாப்பா அதிகபட்சம் ஒரு குழந்தை பிறக்கிற வரைக்கும் மேக்கப் போட்டுப்பா. அதுக்கப்புறம் மேக்கப் போடறதுக்கு எங்கே நேரம்? அப்படியே போட்டாலும் பாதியை குழந்தை கையை நீட்டி கலைச்சு விட்டுரும்.'' என்று கற்பனையில் மூழ்கினாள் தாரா.

''இதோ பார்றா. உடனே இவ எங்கேயோ போயிட்டா. அடியேங்கறதுக்கு ஆத்துக்காரியைக் காணோமாம். இவ புள்ளைக்கு பேரு வைக்கிற லெவலுக்குப் போயிட்டா'' என்றார் காளமேகம்.

''அப்பா, அப்படியெல்லாம் சொல்லாதீங்க. 'கனவு காணுங்கள்' அப்படின்னு அப்துல் கலாம் சொல்லியிருக்காரு. ஒரு காரியம் நடக்கணும்னா அதுக்கு முன்னால அந்த காரியம் நடந்த மாதிரியே நினைக்கணும்.அது மாதிரி நீங்களும், மீராவுக்கு கல்யாணம் ஆகி அவ குழந்தையோட இருக்கணுமேன்னு நினைங்க. நடந்துரும். சொல்லமுடியாதுப்பா!'' என்றாள்.

காளமேகம் தன் இளைய மகளை அன்புடன் பார்த்தார். ''ஆமாம்மா, உங்கிட்ட இருந்துதாம்மா இதெல்லாம் கத்துக்கணும்''என்றார்.

காளமேகத்திற்கு இரண்டு பேரும் பெண்கள்.

பெரியவள் பெயர் மீரா. சின்னவள் பெயர் தாரா.

இப்பொழுது ஒரு உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்காக கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

எப்போதுமே தாரா எளிமையாக அலங்கரித்துக் கொள்ளுவாள். அழகாகவும் இருப்பாள்.

மீரா - அவளும் அழகுதான். ஆனால், அந்த அழகை இன்னும் ஏனோ வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும் என்று நினைக்கிறவள்.

பெட்டி. பெட்டியாக மேக்கப் சாதனங்களை , வாங்கி



வைத்திருப்பாள்.

மேக்கப் என்று ஆரம்பித்தால் குறைந்தது இரண்டு மணி நேரமாவது ஆகும்.

இன்றைக்கு என்னவோ இரண்டு மணி நேரத்தை தாண்டியும் ஓடிக் கொண்டிருந்தது.

காளமேகமும் கஸ்தூரியும் கையைப் பிசைந்து கொண்டு ஒருவரை ஒருவர் பார்த்தார்கள்.

காளமேகத்திற்கு கடுப்பாகவும் இருந்தது. ஆனால், மகள் மேல் வைத்த பாசத்தால் பெரிதாக ஒன்றும் பேசவும் முடியவில்லை.

திரும்பி இளைய மகளைப் பார்த்தார். முணுமுணுப்பாக அவளிடம் கேட்டார். ''எம்மா தாரா நீ எம்மா மேக்கப் பண்ணிக்கறதில்லை?. அழகாத்தானே மேக்கப் பண்ணிக்கறே? அது எப்படி இரண்டு பேரும் நேர்மாறாக இருக்கீங்க?'' என்றார்.

தாரா புன்னகைத்தாள்.

அப்பாவைப் பார்த்தாள். ''அப்பா! சைக்காலஜிஸ்ட்ஸ் என்ன தெரியுமா சொல்றாங்க? இந்த மாதிரி மேக்கப் பண்றது எல்லாம் ஒரு விதமான அழைப்பு அப்படிங்கறாங்க'' என்று சொல்லிவிட்டு ''ஐ ஆம் சாரி. நான் உங்க கிட்ட இதெல்லாம் பேசறேன்'' என்றாள்.

''பரவாயில்லை பரவாயில்லை. பேசு'' என்றார் அப்பா.

''இது அட்ராக்ஷனை விரும்பறவங்க பண்ணக் கூடிய காரியம்பா. எனக்கு அப்படி அட்ராக்ஷனில் விருப்பம் இல்லை. நான் நானாவே இருக்கேன். அதுக்கேத்த மாதிரி ஒரு நட்போ துணையோ எது அமைஞ்சாலும் சரி. அதனால நான் அதைப்பத்திக் கவலைப்படறது இல்லைப்பா.'' என்றாள்.

காளமேகம் அவளை ஆழ்ந்து பார்த்தார். பல சமயங்களில் இந்த இளைய மகள் பேசுவது அவருக்குப் புரிவது இல்லை. ஆனால், ஏதோ ஆழமான விஷயம் பேசுகிறாள் என்பது மட்டும் புரியும்.

''என்னமோம்மா! நீ சைக்காலஜிஸ்ட்ங்கறே! என்னென்னமோ சொல்றே! ஆனா, உனக்கு இருக்கிற தைரியம் அவளுக்கு இல்லையோன்னு எனக்குத் தோணுது'' என்றார்.

''பாயிண்ட்டை பிடிச்சிங்கப்பா. அவளுக்கு எல்லாரும் தன்னைப் பார்க்கணும்னு ஒரு எண்ணம். அது ஒரு விதமான காம்ப்ளக்ஸ்ப்பா.ஆனா அதனால யாருக்கும் இடைஞ்சல் இல்லை. மேக்கப் தானே பண்ணிக்கறா! பண்ணிட்டுப் போகட்டும். எல்லாரும் ஃபர்ஸ்ட் அவளைப் பார்த்து சூப்பரா இருக்கேன்னு சொல்லணும். சொல்லப்போனா 'இந்தத் தாரா உன் அளவுக்கு நல்லாயில்லை'ன்னு சொல்லிட்டா அவளுக்குத் திருப்தியாயிடும்'' என்றாள்.

மறுபடியும் காளமேகம் மகளை அன்புடன் பார்த்தார்.

''எம்மா, இப்படியெல்லாம் சொல்லும் போது உனக்கு வருத்தமா இல்லையா?''என்றார்.

''எனக்கு என்னப்பா வருத்தம்? மனுஷங்க ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரி. அதுல நம்ம மீரா ஒரு மாதிரி'' என்றாள்.

பிறகு அப்பாவிடம் குனிந்து ''அப்பா, இப்பக் கூட வெளியில வந்துட்டாள்ன்னா ரொம்ப அழகா இருக்கேம்மா. பரவாயில்லம்மா, நீ ரெண்டரை மணி நேரம் உட்கார்ந்தாலும் சூப்பரா வெளியே வந்திருக்கேன்னு சொல்லிடுங்க. இல்லைன்னா மூட் அவுட் ஆயிடுவா!'' என்றாள் தாரா.

கஸ்தூரியும் அப்பாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''ம்... சொல்லித்தானே ஆகணும்? வேற வழி!'' என்றார்கள் பெருமூச்சுடன்.

தாரா புன்னகையுடன் அமர்ந்து கொண்டாள்.

''எம்பா, அவ வர்றதுக்குள்ள ஏதாச்சும் உங்களுக்கு மறுபடியும் ஒரு டோஸ் காஃபி போட்டுத் தரட்டுமா?'' என்றாள்.

''நீயே உன் அப்பாவைக் கெடுக்கறடீ. சும்மா என்ன காஃபி?'' என்றார் கஸ்தூரி.

''இல்லைம்மா, வழக்கமா ஒரு ஒன்பது மணிக்கு காஃபி சாப்பிடுவாங்களே அதுக்காகக் கேட்டேன்'' என்றாள்.

''சரி, சரி போட்டுக் கொடு'' என்றார் கஸ்தூரி.

பிறகு ''இரு. இரு. நீயும் பட்டுப் புடவையெல்லாம் கட்டியிருக்கே, எங்கேயாவது ஏதாவது அடுப்படிக்கிட்டே போயி?'' என்று இழுக்க,



''வேண்டாம்மா. கவலைப்படாதீங்க. நான் துண்டை ஏப்ரன் மாதிரி கட்டிக்கிறேன்'' என்றாள்.

''ஏப்ரன்னா...?'' என்றார் கஸ்தூரி.

''முன்னால துண்டு மாதிரி கட்டிக்கிறேம்மா'' என்று அவளுக்கு ஏற்றாற்போல் விளக்கம் சொல்லிவிட்டு எழுந்தாள்.

அவள் அந்தப் பக்கம் போனவுடனே கஸ்தூரி காளமேகத்தை கவலையாகப் பார்த்தார்.

''ஏங்க இந்தத் தாரா மாதிரி இந்த மீரா இருக்க மாட்டேங்குது. இவளை எப்படிங்க நாம கல்யாணம் பண்ணிக் கொடுக்கப் போறோம்'' என்றார்.

'' எவனாவது வந்து மாட்டுவான். உனக்கு நான் மாட்டலை?'' என்றார் காளமேகம்.

''சொல்லுவீங்க. சொல்லுவீங்க. இந்த கஸ்தூரியம்மா வந்து இந்த காளமேகத்துக்கு மாட்டலேன்னா இந்தக் குடும்பம் இப்படி பொழைக்காது. கீழே நாலு போர்ஷன். மேலே நாலு போர்ஷன்னு வாடகைக்கு விட்டு பேருக்கு ஒரு கடை வச்சுட்டு உட்கார்ந்திருக்கீங்களே இத்தனையும் நடக்குமா? எல்லாம் நான் பானை பிடிச்ச வந்ததுனால தான்'' என்று பொரிந்தார்.

''ஆமாம்பா, அதுல தப்பே இல்லை. பானை பிடிச்சவள் பாக்கியசாலி தான்'' என்றார் காளமேகம் ஆத்மார்த்தமாக.

உண்மைதான்! அவர் ஆரம்ப காலத்தில் வேலைக்குப் போய் சம்பாதித்துக் கொண்டு வரும்பொழுது கட்டுக்கோப்பாக குடும்பம் நடத்தி அதிலே மிச்சம் பிடித்து மிகக் குறைவான விலையில் இந்த நிலத்தை வாங்கிப் போட்டவரும் கஸ்தூரிதான். அதிலே முதலில் ஒரு கடையைக் கட்டி அவரை அமரவைத்து. அதிலே வருகிற வருவாயில் இருந்து மெதுமெதுவாக சேமித்து தானும் நான்கு மாடுகள் வைத்து பால் கறந்து வியாபாரம் செய்து என்று படிப்படியாக இந்தக் குடும்பத்தை உயர்த்தியதில் கஸ்தூரிக்கு பெரும் பங்கு உண்டு. அதனால்தான் கஸ்தூரி என்ன பேசினாலும் காளமேகம் ஒத்துக் கொள்ளுவார்.

இருவரும் மனம் ஒத்த தம்பதியர்கள் என்பதனால் பேச்சு பேச்சாக இருந்தாலும் அவர்களிடையே அந்நியோன்யம் அடிநாதமாக உறவிலே ஓடிக் கொண்டிருந்தது.

இப்போது காளமேகம் கஸ்தூரியிடம் சீரியஸாகவே கேட்டார். ''ஏம்மா கஸ்தூரி, மீராவுக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்து விடலாமா?'' என்று.

''அதைத்தானே நானும் சொல்லிக்கிட்டு இருக்கேன். பார்க்க ஆரம்பிச்சுடலாங்க'' என்றார் அவரும்.

''என்ன மாதிரி மாப்பிள்ளை கேட்பாளோ?'' என்று கிட்டத்தட்ட புலம்பினார் காளமேகம்.

''அவ கேட்கறது என்னங்க? அவளுக்குத் தகுந்த மாதிரி நாமதான் ஒரு மாப்பிள்ளை பார்க்கணும். மொதல்ல அவளுக்குப் பிடிக்காமப் போனாக் கூட பொறுமையா இருந்து அவளைத் திருத்தற மாதிரி மாப்பிள்ளையாத் தான் பார்க்க வேணும்.''

''எந்த மாதிரி மாப்பிளை இப்படி மூணு மணி நேரம் மேக்கப்புக்கெல்லாம் பணம் செலவு பண்ணிட்டிருப்பான்.?''

''முதல்ல கொஞ்சம் அடக்கறவனா இருக்கணும். அப்புறமா அவ கிட்ட அன்பா நடந்து திருத்தணும். என்ன நான் சொல்றது? ஒரு தைரியசாலியாதாங்க பார்க்கணும்'' என்றார் கஸ்தூரி.

கஸ்தூரி சொல்வது கூட நியாயமாகப் பட்டது.

காளமேகத்துக்குப் பொறுமை எல்லை கடந்தது. ''ஏம்மா? நிஜமாவே கல்யாணம் முடிஞ்சிரும்மா!'' என்றார் கைகடிகாரத்தைப் பார்த்தபடி.

இத்தனைக்கும் இன்றைக்கு அவர்கள் போகிற முகூர்த்தத்தைக் காலை ஒன்பது மணிக்கு வைத்திருந்தார்கள். ''நல்ல வேளை... ஐந்து மணி முகூர்த்தம்னா இவ மூணு மணிக்கே எழுந்து மேக்கப் போட ஆரம்பிச்சிருப்பா'' என்றார் அம்மா.

''சரி விடு. அவளுக்கு என்னமோ அதுல இன்ட்ரஸ்ட். எல்லாம் சின்ன வயசுல இருக்கறதுதான். அப்புறம் சரியா போயிடும்'' என்றார் காளமேகம்.



அதே நேரத்தில் மீரா அறைக் கதவைத் திறந்து கொண்டு வந்தாள்.

அம்மாவும் அப்பாவும் அவளைப் பார்த்தார்கள்.

தாரா சொன்னது நினைவுக்கு வரவே காளமேகம் சட்டென்று ''அடடடா...! என்னம்மா இப்படி அசத்தறே?'' என்றார்.

''அப்படியாப்பா?'' என்று மீரா சந்தோஷமானாள்.

நின்று தன்னை இப்படியும் அப்படியுமாக அசைத்துக் காட்டி விட்டு ''அழகா இருக்கேனாம்மா?'' என்றார் கஸ்தூரியிடம்.

''ம்... நல்லா இருக்கு. ஏற்கெனவே நீ அழகுதான். அதுக்கு மேல எதுக்குடி இத்தனை மேக்கப்பு?'' என்றார் கஸ்தூரி.

''அம்மா, என்னதான் அழகா இருந்தாலும் அதுக்கு கூடுதலா செய்ய வேண்டியதை செய்யணும்மா. இல்லைன்னா அந்த அழகு எடுபடாமல் போயிடும். இந்தா உன் சின்ன மகள் இருக்காளே அப்படியே வருவா!'' என்றாள்.

''அவளை எதுக்குடி இப்பப் பேசறே? அவளைப் பேசலைன்னா உனக்கு ஆகாதா?'' என்றார் கஸ்தூரி.

''இல்லை, சொல்லிப் பார்க்கிறேன். திருத்தப் பார்க்கறேன். திருந்த மாட்டேங்கறாளே'' என்றாள் மீரா கவலையாகச் சொல்வது போல.

காளமேகத்துக்கு 'ஆமா. உன்னை மாதிரி அவளும் மூணு மணி நேரத்துக்கு மேக்கப் போடணுமாக்கும்?' என்று கேட்க வேண்டும் போலத் தோன்றியது. ஆனால், கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார்.

''போலாமாப்பா?'' என்றாள்.

''இரும்மா, தாரா காஃபி போட்டுக் கொண்டு வர்றேன்ட்ருக்கா. சாப்பிட்டுட்டுப் போலாம்'' என்றார்.

''ஏம்பா, அங்க போனா காஃபி கொடுப்பாங்களே?'' என்றாள்.

''ஏம்மா, கரெக்டா முகூர்த்த நேரத்துக்குப் போறோம். நேரா பந்தியில போய் உட்கார முடியுமா? ஆசிர்வாதம் பண்ணிட்டு அதுக்கப்புறம் ஏதாவது மொய்யை கிய்யை வச்சுட்டுத்தான் சாப்பிடணும். ஒரு மணி நேரம் ஆயிரும்'' என்றார்.

''இன்னும் ஒரு மணி நேரம் ஆயிடுமா? எனக்குப் பசிக்குமே?''

என்றாள் மீரா கொஞ்சலாக.

''உங்களுக்குப் பிரச்சினை இல்லம்மா. நீங்க ரெண்டு பேரும் நேரா சாப்பிடப் போயிடுங்க. நாங்க கொஞ்ச நேரம் உட்கார்ந்துட்டு அப்புறம் சாப்பிட வர்றோம்'' என்றார்.

மீராவுக்கும் அதுவே சரி என்று தோன்றியது. ''அப்ப சரிப்பா!'' என்றாள்.

கஸ்தூரி ''என்னாச்சு... இவ்வளவு நேரமாவா காஃபி போடறா?'' என்று எழுந்து போகும்போது எதிரிலே தாரா வந்தாள்.

''அம்மா, எல்லாருக்குமே போட்டுட்டு வந்துட்டேன். மீரா உனக்குப் பாரு ஹார்லிக்ஸ் கலந்துட்டு வந்துட்டேன்'' என்றாள்.

''உனக்கும் கொஞ்சம் மூளை இருக்குடி'' என்று மட்டம் தட்டினாள் மீரா.

தாரா ஒன்றும் சொல்லவில்லை.

சிரித்துக் கொண்டாள்.

இப்போதும் கஸ்தூரியும் காளமேகமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மீரா எப்போதும் தாராவை மட்டம் தட்டிக் கொண்டிருப்பாள். ஆனால், தாரா அதை சட்டை செய்யாமல் பொறுமையாக சிரித்துக் கொள்ளுவாள்.

''ஏண்டி... ஒரு நேரமாவது திருப்பிக் கேளேண்டி'' என்பார் கஸ்தூரி.

''போகட்டும்மா. போகட்டும் விடு. அவ யாரு? அக்கா தானே? இங்கே இருக்கற வரைக்கும் தான் இந்த சுதந்திரம் எல்லாம் அவளுக்கு. கல்யாணம் ஆயிடுச்சுன்னா அங்க எப்படி இருக்குமோ? லெட் ஹர் என்ஜாய்.'' என்பாள்.

''அப்படின்னா?'' என்றார் கஸ்தூரி.

''அப்படின்னா 'அனுபவிச்சுட்டுப் போகட்டும்மா' அப்படின்னு அர்த்தம்!'' என்பாள்.

மீரா அவசரமாக ஒரு துண்டை எடுத்துத் தன் மேல் போர்த்திக்



கொண்டு ஹார்லிக்ஸை அமர்ந்து பருகினாள்.

கஸ்தூரியும் காளமேகமும் அமர்ந்து ''ஆஹா, சூப்பர்!'' என்று சிலாகித்துக் கொண்டு தாரா போட்ட காஃபியை அருந்தினார்கள்.

அடிக்கடி குடிப்பதில்லை என்றாலும் இன்றைக்குத் தனக்கும் கூட அரை டம்ளர் காஃபி போட்டுக் கொண்டு வந்திருந்தாள் தாரா.

அவளும் ஒரு பக்கமாக அமர்ந்து காஃபியை அருந்தினாள்.

அப்போது அழைப்பு மணி அழைத்தது.

தாரா எழுந்து போய் கதவைத் திறந்தாள். அங்கே ஒரு இளைஞன் நின்று கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்த உடனேயே மீராவுக்கு குபீரென்று சிரிப்பு வந்தது.

மழுங்க வாரிய தலை. நெற்றியிலே விபூதிக் கீற்று சற்று நீளமாகவே இருந்தது.

சட்டையும் வேட்டியும் அணிந்திருந்தான்.

கையிலே ஒரு சூட்கேஸ் மாதிரி ஏதோ வைத்திருந்தான்.

''இங்கே....'' என்று இழுத்தான்.

முதல் நாள் வந்து வீடு கேட்டு விட்டுப் போன அந்தப் பையன் மறுபடியும் வந்து நின்றான். ''சார் நேத்து வந்திருந்தேன். நீங்க இன்னிக்கு வரச் சொன்னீங்க'' என்றான்.

''ஓகோ. தம்பி இப்படி உட்காருங்க. கொஞ்சம் கடையில வேலை இருக்கு'' என்றார் அப்பா. ''எம்மா, அம்மாவைக் கூப்பிடு'' என்றார்.

கஸ்தூரி வந்தார். ''இந்தா கஸ்தூரி. இந்தத் தம்பி வீடு கேட்டு வந்திருக்கே'' என்றார். ஏற்கனவே மனைவியிடம் பேசி வைத்திருந்தார். இருந்தாலும் மனைவியை முன்னிலைப்படுத்த வேண்டிய இடங்களில் மறக்காமல் முன்னிலைப் படுத்துவார்.

''நீங்க பார்த்து என்ன வேணும்னாலும் செய்ங்க'' என்று சொல்லி விட்டு கஸ்தூரி அவசரமாக உள்ளே போய் விட்டார்.

அப்பாவும் மகளும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக்

கொண்டார்கள்.

உள்ளே சீரியல் ஆரம்பித்து விட்டது என்பதனால் கஸ்தூரி அப்படி ஓடுகிறார் என்பது அவர்களுக்கு தெரிந்தது.

''சரிப்பா, தம்பி உட்காருங்க. ரெண்டாவது மாடியில் இருக்கு. உங்களுக்கு அங்க தண்ணி வசதி, பாத்ரூம் வசதி எல்லாமே இருக்கு. சின்னதா முன்னாடி ஒரு ரூம். உள்ள ஒரு பெட்ரூம் மாதிரி. அந்த முன்னாடி ரூம்ல இருந்தே ஒரு சின்ன நடை மாதிரி ஒரு கிச்சன் இருக்கு. இவ்வளவுதான். வாடகை இரண்டாயிரம்'' என்றார் அப்பா.

அந்தப் பையன் அவரைப் பரிதாபமாக பார்ப்பது போல் பார்த்தான்.

''சார். இரண்டாவது மாடின்னு சொல்றீங்க. ரெண்டாயிரம் அதிகம் சார்'' என்றான்.

காளமேகத்துக்கும் இரண்டாயிரம் அதிகமென்று தெரியும். ஆனால், அப்படி ஆரம்பித்தால்தானே பேரம் படியும் என்பது போல ''ஒரு ஆளாத்தான் இருக்கீங்க. தண்ணியெல்லாம் நிறைய செலவு பண்ண மாட்டீங்களே?'' என்றார்.

''ஒரு ஆளுக்கு எவ்வளவு சார் செலவாயிடப் போகுது. அதுவும் நான் காலையில வேலைக்குப் போயிடப் போறேன். சாயுங்காலம்தான் வரப் போறேன்'' என்றான் அவன்.

''எலக்ட்ரிசிட்டியெல்லாம் பார்த்து யூஸ் பண்ணணும் தம்பி. தனியா அதுக்குன்னு சப் மீட்டர் இருக்குது. சரி ஒரு இருநூற்று ஐம்பது ரூபாய் குறைச்சுக்கலாமே?'' என்றார்.

அந்தப் பையன் ''முதலில் வீட்டைப் பார்க்கலாம் சார்'' என்றான்.

''சரிம்மா, நீ கடையைப் பார்த்துக்க'' என்று சொல்லி விட்டு அந்தப் பையனை அழைத்துக் கொண்டு மேலே போய் வீட்டைக் காண்பித்தார்.

''உனக்காக நான் மேல வரேம்பா. நம்மாளெல்லாம் அடிக்கடி ரெண்டு மாடி ஏற முடியாது'' என்றார் காளமேகம்.

''அது சரிங்க சார். ரொம்ப தாங்க்ஸ்ங்க சார்.'' என்றான் அவன்.

போய் வீட்டை பார்த்த பின் வீடு அவனுக்கு பிடித்திருந்தது.



கான்கிரீட் போட்ட வீடு தான். தனியாகவும் இருந்தது. சுற்றிலும் வெற்றிடமும் நிறைய இருந்தது.

''என்ன தம்பி பிடிச்சிருக்கா?'' என்றார்.

''பிடிச்சிருக்கு சார். நான் ஒரே ஒரு ஆளு. ஆயிரத்து எழுநூத்து ஐம்பது ரூபாய் கொஞ்சம் அதிகம். இன்னும் கொஞ்சம் குறைச்சீங்கன்னா பரவாயில்லை.'' என்றான்.

''எவ்வளவுதாம்பா குறைக்கச் சொல்றே?''.

''சார், ஆயிரம் ரூபாய்க்கு...'' என்றான் அவன்.

''ஆயிரம் ரூபாயெல்லாம் கண்டிப்பா சாத்தியம் இல்லப்பா. ம்...'' என்று யோசித்தவர் ''சரி, உனக்கும் வேண்டாம் எனக்கு வேண்டாம். ஒரு ஆயிரத்து முந்நூறு ரூபாய் கொடுத்துடு'' என்றார்.

''அது போக ஈபி பில் கட்டிடணும். தண்ணிக்கு ஒரு ஐம்பது ரூபாய்'' என்றார்.

''இதெல்லாம் வேற இருக்குல்ல சார்?'' என்றான் அவன்.

''சரிப்பா... என்ன வேலைக்குப் போறே?'' என்று கேட்டார்.

''இங்கே ஒரு கம்பெனியிலே சேர்ந்திருக்கேன் சார். அது இந்த விவசாயப் பொருட்கள் சம்பந்தப்பட்ட கம்பெனி. அது ஏஜென்சி மாதிரி.... இங்கே வாங்கி ஊருக்கு அனுப்புவோம். அது மாதிரி ஒரு வேலை. நேரம் பார்த்து போயிட்டு வருவேன்.''

''அதெல்லாம் சரிதான். அநியாயமா பன்னிரண்டு மணிக்கெல்லாம் வரக் கூடாது''

''இல்லை சார். அதிகபட்சம் எட்டு மணிக்கு வந்துடுவேன்''என்றான் அவன்.

''பாருப்பா, கீழே நிறைய குடித்தனங்கள் இருக்கு. நம்ம வீட்டுல பொண்ணுங்க இருக்காங்க. நாளைக்கு எந்தப் பிரச்சினையும் வராம பார்த்துக்க.'' என்று சொல்லி விட்டு கிடுகிடுவென்று இறங்கி வந்தார்.

''சார்! அப்ப நான் இன்னிக்கே குடி வந்துடறேன் சார்'' என்றான் அவன்.

''உன்னோட சௌகரியம்'' என்று சொல்லி விட்டு இறங்கினார்.

அந்த இளைஞன் அன்றைக்கே குடி வந்து விட்டான்.

அந்த இளைஞன் வந்ததற்குப் பிறகு தங்கள் வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படப் போகிறது என்று அப்போது காளமேகத்துக்கு தெரியவில்லை.

## 2

இரண்டு கைகளையும் பின்னங் கழுத்துக்கு அணையாகக் கொடுத்து தலையணையைச் சற்று உயர்த்தி சாய்ந்து அமர்ந்தான் கல்யாண ராமன்.

லேசான சிரிப்பு முகத்திலே ஓடிக் கொண்டிருந்தது. விட்டத்தை சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். கண்களை தன்னைச் சுற்றி சுழல விட்டான்.

ஒரு சிங்கிள் காட் என்பார்களே அது மாதிரி ஒரு சின்ன ஸ்டீல் கட்டில். அதன் மேல் ஒரு மெத்தை.

அந்த அறையில் தொலைக்காட்சிப் பெட்டியும் கூட இல்லை.

மிகக் குறைவான சாமான்களோடு நகரத்துப் பகுதியிலே இருக்கக் கூடிய ஒரு பிரம்மச்சாரியின் அறையை அது எல்லா விதத்திலும் ஒத்திருந்தது.

மெல்லச் சிரித்துக் கொண்டான்.

அதே நேரத்தில் செல்ஃபோன் ஒலித்தது. "தம்பி, நான் காசிநாத் பேசறேம்பா" என்று அந்தப் பக்கம் குரல் ஒலித்தது.

"அப்பா" என்று அவன் மகிழ்ச்சியாகப் பேசத் தொடங்கினான்.

"எப்படிப்பா போயிட்டிருக்கு?" என்று ஆதரவும் அன்பும் கலந்த அப்பாவின் குரல் அந்தப் பக்கம் இருந்து வந்தது.

"நல்லாப் போயிட்டிருக்குப்பா" என்றான்.

"என் தம்பி, எவ்வளவு நாள் ஆகும்?" என்று கேட்டார் அப்பா.

"ஆறு மாசம் ஆகும்னு நினைக்கிறேம்பா. ஏன்னா ஓரளவுக்கு



நிலைமை சரியாகணும். ஆர்டர்ஸ் பிடிக்கணும்" என்றான்.

"பிடிச்சிடலாம்பா. ஒண்ணும் கவலைப்படாதீங்க." என்றான் ஆறுதல் சொல்லுவது போல.

அப்பா அந்தப் பக்கம் லேசாக ஒரு பெருமூச்சு விட்டார்.

"ஏம்பா..." என்று ஏதோ சொல்லத் துவங்க, "வேண்டாம்பா. ஒரு ஆறு மாசம் என்னைப் பேசாம விட்டுடுங்க. டைம் கொடுத்துடுங்க. ஆறு மாசம் கழிச்சு நானே வந்துடறேன்" என்றான்.

"நீ வர்றது சரிப்பா...!" என்று அவர் இழுக்க "நான் வர்றது... நீங்க நினைக்கிற மாதிரி வருவேம்பா. கவலைப்படாதீங்க!" என்றான்.

"என்னமோப்பா! நீ பார்த்து என்ன செஞ்சாலும் சரி." என்றார் அப்பா அந்தப் பக்கம்.

"அப்பா, அம்மா இருக்காங்களா?" என்றான் அவன்.

"இத பாரு! பக்கத்துல வெயிட் பண்ணி நின்னுட்டு இருக்கா" என்றார்.

"கொடுங்க!" என்றான் அவன்.

"தம்பி, நேரத்துக்கு சாப்பிடறியா அப்பா? சாப்பாட்டுக்கெல்லாம் என்ன பண்றே?" என்று தாய்க்கே உரிய அந்தப் பாசத்தோடு பேசினார் மரகதம்.

"அதெல்லாம் ஒண்ணும் பயப்பட வேண்டியதில்லைம்மா. இங்கெல்லாம் நல்ல மெஸ் இருக்கு. நல்ல ஹோட்டல்ஸ் இருக்கு. அப்படியே போற இடங்கள்ளே அங்கங்கே பார்த்துக்கறேன். அப்பப்ப நானும் செஞ்சு சாப்பிட்டுக்கறேன்" என்றான்.

"செஞ்சு சாப்பிடறியா?" என்றார் அம்மா ஆச்சரியமாக.

"ஆமாம்மா. ஒரு சின்ன சிலிண்டர் ஒண்ணு அரேஞ்ச் பண்ணி வச்சுருக்கேன். நானே குக் பண்ணிக்கறேன். எலெக்ட்ரிக் அடுப்பும் இருக்கு. என்ன உன்னோட கை பக்குவம் தான் மிஸ் ஆகுது" என்றான்.

அம்மா "இதெல்லாம்...!" என்று ஆரம்பிக்க... "தேவையான்னு கேட்காதீங்க. நம்மதான் உட்கார்ந்து பேசித்தானே முடிவெடுத்தோம்.

அப்புறம்தானே வந்திருக்கேன்? அதுக்கப்புறம் என் மனசைப் போட்டு குழப்பிக்கறீங்க? இப்ப தான் அப்பா கிட்ட சொன்னேன். ஆறு மாசம் டைம். அந்த ஆறு மாசத்துல எனக்கும் நினைச்சதெல்லாம் நடக்கும். உங்களுக்கும் நினைச்சதெல்லாம் நடக்கும். கவலைப்படாதீங்க'' என்றான்.

''தம்பி, அதே வீட்டுலதான் இருக்கியா?'' என்றார் அம்மா.

''ஆமாம்மா, இங்க தான் மூணாவது மாடியில ஒரு சிங்கிள் ரூம் இருக்கு. அந்த ரூம்ல இருக்கேன்'' என்றான்.

அம்மா அந்தப் பக்கம் ஏதோ சொல்ல அவன் காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல சிரித்துச் சமாளித்தான். ''அம்மா, எல்லாத்தையும்தாம்மா மேனேஜ் பண்ணிப் பழகணும்'' என்றான்.

''என்னமோப்பா'' என்று அவர் பெருமூச்சு விட்டு விட்டு மேலும் ஏதோ சொல்ல அவன் திறமையாகப் பேச்சை மாற்றி விட்டு சற்று நேரம் பெற்றோரிடம் பேசிவிட்டு ஃபோனை ஆஃப் செய்தான்.

மீண்டும் வசதியாக அந்தத் தலையணை மேல் சாய்ந்து கொண்டான்.

எண்ணம் எங்கெங்கோ ஓடியது. கடைசியாக அந்த கீழ் வீட்டுப் பெண்களிடம் வந்து நின்றது.

மீரா என்னதான் அலங்காரம் செய்து கொண்டு பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் அவனுக்கு ஏனோ மீராவிடம் பேசுவதற்குக் கூட பிடிப்பதில்லை. அதை வெளிப்படையாகக் காட்டாமல் இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு நகர்ந்து விடுவான்.

தாராவும் கூட அப்படித்தான். அவளும் ஒன்றும் நின்று பேசுவதற்கு விரும்புவதில்லை. என்றாலும் கூட அந்தப் பெண்ணிடம் நின்று பேச வேண்டும் என்று அவனுக்கு மனது துடித்தது.

ஆனால் 'குடியிருக்கிற இடத்தில் மரியாதையைக் கெடுத்துக் கொள்ளாதே மகனே' என்று ஆழ்மனது எச்சரித்தது.

தன்னுடைய விருப்பத்திற்கும் ஆழ்மனதினுடைய இந்த அறிவுரைக்குமான போராட்டத்திலே அவன் கொஞ்சம் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டிருந்தான்.



புதிதாக இளம் பெண்களைப் பார்க்கும் பொழுது சில வேளைகளில் ஈர்ப்பு ஏற்படுவதுண்டு. அப்படித்தான் ஈர்ப்பு ஏற்படுகிறது என்று சமாதானம் சொல்லிக் கொள்ளவும் முற்பட்டான். இதற்கிடையிலே 'ஊரில் இருந்து எதற்காக வந்தாய், வந்த வேலையைப் பார்!' என்றது இன்னொரு மனது.

''அதைத்தானேப்பா பார்த்துட்டு இருக்கேன்!'' என்று அவன் பதில் சொல்லிக் கொண்டான்.

சற்று சத்தமாகவே சொல்லிக் கொண்டான் போலும்.

''என்னத்தை பார்த்துட்டு இருக்குறீங்க?'' என்று வந்தாள் கீழ்விட்டு வரிசைகளிலே குடியிருக்கிற ஒரு பெண்மணி. அவன் சட்டென்று எழுந்தான்.

ஃபோனை ஆஃப் செய்வது போல் நடித்து விட்டு ''இல்லைக்கா, ஃபோன்ல பேசிட்டிருந்தேன்'' என்றான்.

''அது என்னமோப்பா! இந்தக் காலத்துப் பசங்க கையை காலை ஆட்டிட்டுப் பேசறீங்க. நம்ம கிட்டதான் பேசறீங்களோன்னு நின்னு வேடிக்கை பார்த்தா செல்ஃபோன்ல பேசிட்டுப் போறீங்க. ஊரு பூரா ஒரே அரைப் பைத்தியமா அலையறீங்கப்பா!'' என்றாள் கீழ் வீட்டுப் பெண்மணி ராஜம்.

அவன் சிரித்தான். ''என்னக்கா, நான் ஃபோன் வச்சிருக்கறதை இப்படி சொல்றீங்க. பேப்பர் போடறவங்கள்ல இருந்து வீட்டு வேலை செய்யறவங்க வரை எல்லாரும் தான் ஃபோன் வச்சிருக்காங்க'' என்றான்.

''ஃபோன் வச்சிருக்கறதை தப்புன்னு சொல்லலைப்பா!'' என்றவள் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு ''இல்லை, இன்னைக்கு நைட்டு நான் டிஃபன் கொண்டு வந்து தர்றேன். அதுக்காகத்தான் சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்'' என்றாள் அவள்.

''உங்களுக்கு எதுக்கு அக்கா சிரமம்? நான் கடையில பார்த்துக்கறேன்'' என்றான் அவன். ''இல்லை தம்பி, என் பையனோட பிறந்த நாளு இன்னைக்கு. வீட்டுல ஸ்பெஷலாவெல்லாம் பண்ணியிருக்கேன். இங்கே எல்லார் வீட்டுலயும் ஆட்கள்

இருக்காங்க. நீதான் பாவம் தனியா இருக்கே. அதனால நான் கொண்டு வந்து தர்றேன்'' என்றார்.

அவன் ''சரிங்க அக்கா!'' என்றான்.

''ஒரு ஏழரை மணிக்கு!'' என்றாள் இராஜம்.

''உங்க வசதி போல அக்கா. அப்ப, நீங்க பாப்பாவுக்கு கேக்கெல்லாம் வெட்ட மாட்டீங்களா?'' என்றான்.

''அதுவும் பண்ணுவோம்'' என்றாள்.

''அப்படின்னா நான் வர்றேனே?'' என்றான் அவன்.

''இல்லை பரவாயில்லை. நீ வரேன்னுட்டு எதையாவது கிஃப்ட்டை வாங்கிட்டு வருவே. அப்புறம் நான் போடற சாப்பாட்டுக்கு கிஃப்ட் கொடுத்த மாதிரி ஆயிடும்'' என்றாள் ராஜம்.

அவள் அப்படி வெளிப்படையாகப் பேசுவதை பார்த்து சிரிப்பு வந்தது.

குபீரென்று சிரித்தான். ''அப்படியெல்லாம் இல்லைக்கா. உங்க பையனோட பிறந்த நாள் கொண்டாடணும்னு - அதை எங்கூட ஷேர் பண்ணிக்கணும்னு நினைக்கறீங்க இல்லையா? அப்ப ஏன் நானே அங்க வந்து கலந்துக்க கூடாது?'' என்றான்.

''ரொம்ப நல்லதாப் போச்சு. ஏழு மணிக்கு கேக் வெட்டறோம். நீயும் வந்து அங்க சாப்பிட்டுட்டு வரணும்.'' என்றாள்.

''சரிங்க, அக்கா'' என்றான்.

உண்மையாகவே ஏதாவது ஒரு பரிசுப் பொருள் கொண்டு போகலாம் என்று நினைத்தான். ராஜம் அப்படிப் போட்டு உடைத்ததற்குப் பிறகு பரிசுப் பொருள் கொண்டு போனால் நன்றாக இருக்காது. உடனே கிளம்பி வெளியிலே வந்து அந்தத் தெருவிலே இருந்த பேக்கரியிலே கொஞ்சம் ஸ்வீட் வகையறாக்கள் வாங்கிக்கொண்டு வந்தான்.

ஏழு மணி வாக்கில் அவனும் தயாராகி கீழே போனான்.

இந்த வரிசை வீடுகளில் எந்த வீட்டிற்குள்ளும் அவன் நுழைந்து பார்த்ததில்லை. இன்றைக்குத்தான் நுழைந்து பார்த்தான்.



வீடுகள் ஓரளவுக்கு வசதியாக இருந்தன!

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு ஹால், இரண்டு பெட்ரூம், ஒரு சமையல் அறை என்று ஒரு வீட்டுக்குத் தேவையான எல்லா வசதிகளுடன் தான் இருந்தன.

ஹாலிலே கேக் வெட்டுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

அந்த வீடுகளில் இருக்கக் கூடியவர்களில் வீட்டுக்கு ஒருவர் போல ஒரு ஏழு எட்டு பேர் வந்திருந்தார்கள்.

எல்லோரும் அவரவர்கள் கையிலே ஒரு சின்ன பரிசுப் பொருளை வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவனும் தான் வாங்கிக் கொண்டு வந்திருந்த ஸ்வீட், பழங்கள் வகையறாவை அந்தக் குழந்தையிடம் கொடுத்து விட்டு ஒரு பக்கமாக அமர்ந்தான்.

உண்மையில் அன்றைக்குத்தான் அந்தக் குடித்தனங்களில் இருக்கிற பலபேரிடத்தில் அவன் பேசினான். ''நீங்கதான் மேலே வந்திருக்கிற தம்பியா? உங்க பேரு என்ன?'' என்று கேட்டார்கள்.

சொன்னான். அவர்களும் தங்கள் தங்கள் பெயர்களைச் சொன்னார்கள். ஆனால், முதல் முறை என்பதால் அத்தனை பேர்களும் அவன் மனதிலே பதியவில்லை.

மெதுவாக ஒருவரிடம் ''வீட்டுக்காரங்க எப்படி?'' என்று கேட்டான்.

''தங்கமானவங்க. அப்பா... இந்தக் காலனியிலே இந்த வீட்டுல தான் இவ்வளவு நிம்மதியா இருக்க முடியுது. பக்கத்து வீட்டுகள்ல அந்தப் பக்கத்துல குடியிருக்கறவங்கள எல்லாம் கேட்டுப்பாரு. புலம்பித் தள்ளுவாங்க. ஆனால் இவங்க எல்லா வசதியும் செஞ்சு கொடுத்திருக்காங்க. என்ன அந்த பெரிய பொண்ணு தான் கொஞ்சம் மிரட்டுவா!'' என்றார் பக்கத்து வீட்டு சபேஷனோ நடேசனோ. ஏதோ ஒரு பெயர் சொன்னார்.

''ம் ஹூம்'' என்றான் அவன்.

''ஆமாம்பா, அந்த வீட்டுல மத்த மூணு பேரும் ஒரு மாதிரி. இந்த

ஒரு பொண்ணுதான் கொஞ்சம் மிரட்டும். அதுவும் நல்ல பொண்ணுதான். அப்பப்ப கொஞ்சம் மிரட்டும். அவ்வளவுதான்'' என்றார்.

புதிதாக வந்தவனிடம் தான் வார்த்தைகளை விடுகிறோமோ என்று அச்சம் தோன்றி விட்டது போலும்.

அவன் சிரித்துக் கொண்டான்.

கொஞ்ச நேரத்தில் கலகலப்பாகியது. சரியாக கேக் வெட்டுகிற நேரத்தில் தாராவும் அவள் தாயும் வந்தார்கள்.

தாரா அந்தக் குழந்தைக்கு ஒரு விளையாட்டுப் பொருள் வாங்கிக் கொண்டு வந்திருந்தாள்.

சற்றுக் கழித்து மீரா வந்தாள்.

மீரா வருவதற்கு முன்பு வரையிலும் தாராவிடம் எல்லோரும் கலகலப்பாக பேசியதையும் அவள் தாயிடம் சகஜமாக பேசியதையும் அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

மீரா வந்தவுடன் எல்லோரும் மேலோட்டமாகப் புன்னகைப்பதையும் பேருக்குப் பேசி விட்டு ஏதோ அவரவர்களுக்குள் பேசுவதற்கு விஷயம் இருப்பது போல மும்முரமாக ஒதுங்கிக் கொள்வதையும் பார்த்தான்.

இவன் இங்கிருப்பதைப் பார்த்த உடனே மீராவின் முகம் மாறியது. அது மலர்ச்சியா தளர்ச்சியா என்று தெரியவில்லை. மெல்ல ''நீங்க?'' என்றாள்.

''ராஜம் அக்கா வந்து இன்வைட் பண்ணினாங்க!'' என்றான் அவன்.

''அப்படியா?'' என்றாள்.

தாரா அவனிடத்தில் பேசவில்லை. ஆனால், மெல்லத் தலையசைத்து விட்டு ஒரு புன்னகை உதிர்த்து விட்டு தாயுடன் போய் அமர்ந்து கொண்டாள். ஆனால், கல்யாண ராமனுக்கு ஏனோ தன்னிடம் வந்து பேசிய மீராவின் வார்த்தைகளை விட தாராவின் அந்தப் புன்னகை மிகவும் குளிர்ச்சியாக இருந்தது போல தோன்றியது.

உடனே தன்னை உசுப்பிக் கொண்டான் - 'இது ஏதுடா வம்பு?'



என்பது போல.

''ஹாப்பி பர்த்டே டு யூ'' என்று எல்லோரும் பாடுகிற குரல் கேட்டது.

அவனும் திரும்பி அந்தக் குழந்தையை பார்த்தபடி அமர்ந்தான்.

மற்றவர்கள் எல்லாம் ஸ்வீட் காரத்துடன் கிளம்பி விட, ராஜம் ''நீ இரு, தம்பி, இரு தம்பி!'' என்று அவனை இருக்க விட்டாள்.

அன்றிரவு அங்கே அவனுக்கு - கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்குப் பிறகு இனிமையான வீட்டுச் சாப்பாடு கிடைத்தது.

கூடவே ஒரு சகோதரியும் கிடைத்தாள் என்று தான் சொல்ல வேண்டும்.

''தம்பி, நான் கொஞ்ச காலம் வெளியூர்ல இருந்திருக்கேன். ஹாஸ்டல்ல இருந்திருக்கேன். அப்பவெல்லாம் வீட்டு சாப்பாட்டுக்கு எவ்வளவு ஏங்குவோம் தெரியுமா? இவருந்தான் வெளியூர்ல வேலை செஞ்சிருக்காரு. எங்களுக்கு கல்யாணம் ஆன புதுசுலயே பிரிஞ்சிருந்திருக்கோம். இப்பதான் ஒரே இடமா டிரான்ஸ்பர் வாங்கி இங்கே இருக்கோம். இது கொஞ்சம் கசகசப்பான ஏரியாவா இருந்தாலும் குழந்தையை விட்டுட்டுப் போறதுக்கு... மத்த எல்லாத்துக்கும் பாதுகாப்பு இருக்கு. தம்பியை கீழ் வீட்டுல பார்த்துப்பாங்க. அவ்வளவு ஏன் ஹவுஸ் ஓனர் அம்மா கூட பார்த்துப்பாங்க. தாரா இருந்தா நல்லா பார்த்துக்கும். எல்லாம் உத்தேசித்துதான் - எங்க இரண்டு பேருக்குமே நல்ல சம்பளம் இருக்கு. இருந்தாலும் கூட - இங்கே குடியிருக்கோம்'' என்றாள்.

''அப்படிங்களா அக்கா!'' என்று கேட்டுக் கொண்டான்.

''இவருதாம்பா சொல்லிட்டே இருந்தாரு. பாவம், அந்தத் தம்பி வெளியூர்ல இருந்து வந்து இங்க இருக்குது. அடிக்கடி ஏதாவது டிஃபன் கொடு. சாப்பிடக் கொடுன்னு சொல்லிட்டே இருப்பாரு.''

''ஒண்ணும் பிரச்சினை இல்லைக்கா'' என்றான் அவன்.

''ம்ஹூம். அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. நான் அடிக்கடி உனக்கு ஏதாவது செஞ்சு கொடுத்தா நீ சந்தோஷமா சாப்பிடணும் சரியா?'' என்றார் மனைவி.

''ஆமாம்பா, வேத்து மனுஷங்கன்னு நினைக்காதே. நாமெல்லாம் மனுஷங்க. ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செஞ்சுக்கணும்'' என்றார்.

''சரிங்க!'' என்று அன்றைக்கு அவர்கள் வீட்டிலே இரவு உணவை முடித்துக் கொண்டு மகிழ்ச்சியாக மாடிக்கு வந்தான் கல்யாண ராமன்.

சற்று நேரம் தன்னுடைய தொழில் தொடர்பாக பேச வேண்டியிருந்தது.

ஒரு பத்து பேரிடம் ஃபோனில் பேசி விட்டு, மாடியிலேயே சற்று நேரம் நடந்து விட்டு படுக்கையில் படுப்பதற்காக வந்தான்.

லேசான தலையசைப்புடன் கூடிய தாராவின் அந்த வசீகரமான புன்னகை விஸ்வரூபம் எடுத்தாற் போல அவன் கண்ணுக்குள்ளே கலந்து உள்ளே உள்ளே இறங்கியது.

## 3

ஏழு எட்டு மாதங்கள் வேகமாக ஓடி விட்டது.

தடாலடி மாற்றங்கள் ஒரே நாளில் கூட வரலாம் என்பதை மீராவின் திருமணமும் நிரூபித்தது.

ஏதோ திருமணத்தில் பார்த்தோம் என்று கிருஷ்ண பிரசாத்தின் வீட்டினர் சம்பந்தம் பேச வந்த பொழுது எல்லாருக்கும் மகிழ்ச்சி. ஏனென்றால் மீராவின் எல்லா எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ற வகையில் அந்தக் குடும்பம் அமைந்திருந்தது.

பணக்கார சம்பந்தமாக வேண்டும், அழகானவராக இருக்க வேண்டும் என்று மீரா எதையெல்லாம் விரும்பினாளோ அதெல்லாம் அவளுக்கு அமைந்திருந்தது.

எல்லாவற்றைக் காட்டிலும் தன் அழகுக்கு ஒரு ராஜ குமாரன் வந்து கொத்திக் கொண்டு போவான் என்று அவள் மனத்தில் ஆழப் பதிந்திருந்தது போலவே இந்தத் திருமணமும் நிகழ்ந்திருந்ததால்



அவளுக்கு நெஞ்சு கொள்ளாத மகிழ்ச்சி.

'நான் சொன்னது நடந்தது பார்!' என்று தாராவிடம் நிரூபித்து விட்டோம் என்ற பெருமை.

தாரா, ஆனால் இப்படியெல்லாம் யோசிக்கவில்லை.

சகோதரியின் திருமணம் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்காக அவள் எல்லா விதத்திலும் ஒத்துழைத்தாள். ஓடி ஓடி வேலை செய்தாள்.

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மட்டும் கொஞ்சம் கவலை கூடிப் போனது. ஒருபுறத்திலே மீராவுக்கு இவ்வளவு அருமையான இடம் அமைந்தது பற்றி மகிழ்ச்சி.

அது திடீரென்று நடந்தது.

அன்றைக்கு ஒரு நாள் திருமணத்திற்குப் போய் விட்டு வந்தார்கள்.

அந்தத் திருமணம் முடிந்து, மூன்று நான்கு மாதங்கள் போயிருக்கும்.

திடீரென்று ஒரு நாள் கிருஷ்ண பிரசாத்தின் தாய் திருமகள் அவரது வீட்டிற்கு வந்தார்.

''உங்களுக்கு தெரியுமா? சுத்திமுத்தியும் பார்த்திங்கன்னா நாங்க உங்களுக்கு தூரத்துச் சொந்தம்!'' என்றார்.

அவர்கள் ஏதோ உறவு முறையாக வந்திருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டு விழுந்து விழுந்து உபசரித்தார்கள்.

பெரிய பம்பு செட் கம்பெனி ஒன்று அவர்களுக்கு இருந்தது. நான்கைந்து நிறுவனங்கள் இருந்தன. அப்படிப்பட்ட ஒரு பெண்மணி தங்கள் வீட்டிற்கு தேடி வந்திருக்கிறார்ரே என்று அவர்களுக்கு ஆச்சரியம்.

அந்த நேரத்தில் மீரா வீட்டில் இருந்தாள்.

வழக்கம் போல லேசான மேக்கப்பில் இருந்தாள். வந்திருப்பது பெரிய பணக்காரம்மா என்று தெரிந்தவுடனே அவளும் கொஞ்சம் உபசரித்தாள்.

திருமகள் நேரடியாகவே விஷயத்துக்கு வந்தார்.

''உங்களுக்கு தெரியுமில்லே எங்க வீட்டுக்காரர் தயாபரன்...!'' என்று ஆரம்பிக்க,

''ஐயோ அவரைத் தெரியாமலா?'' என்று வேகவேகமாகச் சொன்னார் காளமேகம்.

''நானும் அவருமா பேசிமுடிச்சுட்டுத்தான் இங்கே வந்திருக்கேன்'' என்றார்.

அம்மாவும் அப்பாவும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துக் கொண்டார்கள்.

''சொல்லுங்க, என்ன விஷயம்னு சொன்னாத்தானே தெரியும்?'' என்று இழுத்தார்கள்.

''அது ஒண்ணும் இல்லை. எங்களுக்கு இரண்டே பசங்க. உங்களுக்குத் தெரியுமில்லே!'' என்றார் மறுபடியும்.

''ஆமாம். உங்க பெரிய பையன் கூட கல்யாணத்துக்கு வந்திருந்தாரு.''

''பெரிய பையன் மட்டுமல்ல - சின்னப் பையனும் வந்திருந்தான். அவனுக்குத்தான் பொண்ணு பார்த்துட்டு இருக்கோம்'' என்று இழுத்தார்.

''அப்படிங்களா! சரிங்கம்மா. உங்க தகுதிக்கு ஏற்ப யாராவது பொண்ணு இருந்தா கண்டிப்பா சொல்றேன்'' என்றார் காளமேகம்.

திருமகள் சிரித்து விட்டார்.

''தகுதி என்னங்க தகுதி? நான் எதுக்கு வந்தேன்னு நீங்க புரிஞ்சுக்கலை'' என்றார். அப்பொழுதுதான் காளமேகத்திற்கும் கஸ்தூரிக்கும் லேசா க உறைத்தது.

ஒருவேளை தங்கள் வீட்டுப் பெண்ணைக் கேட்டு வந்திருக்கிறார்களோ என்று ஓரத்திலே நப்பாசை தோன்றியது. ஆனால், உடனடியாக அப்படியெல்லாம் கனவு கண்டு விடக்கூடாது என்று எண்ணிக் கொண்டவர்களாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அதே நேரத்தில் மீரா பதவிசாக பலகாரம் எடுத்து வைத்துவிட்டு



காபியும் கொண்டு வந்து கொடுத்தாள்.

வந்திருப்பவர் பெரிய பணக்கார வீட்டுப் பெண்மணி என்பதால் இந்தப் பதவிசு என்பது கஸ்தூரிக்கும் காளமேகத்துக்கும் புரிந்தது.

உள்ளூர சிரித்துக் கொண்டார்கள்.

அவர் சிரித்துக் கொண்டே ''என்னம்மா படிச்சிருக்கே?'' என்றார்.

''நான் டிகிரி முடிச்சிருக்கேன் மேடம்'' என்றாள் அவள்.

''மேடமெல்லாம் இல்லை, சும்மா அம்மான்னு கூப்பிடு'' என்றார் அவர்.

அவள் மறுபடியும் ''டிகிரி முடிச்சிருக்கேன்மா'' என்றாள்.

''அப்படியா, உட்காரேன்'' என்றார்.

''இல்லைம்மா. நீங்க பெரியவங்க பேசறீங்க. பேசுங்க.'' என்று சொல்லிவிட்டு அவள் தன் அறைக்குள் போய் அமர்ந்து கொண்டாள். ஆனால், காதைத் தீட்டிக் கொண்டு அமர்ந்தாள்.

''நான் நேரடியாக விஷயத்துக்கு வரேனே?'' என்றார் திருமகள்.

'என்ன வரப் போகிறதோ?' என்று கஸ்தூரியும், காளமேகமும் ஆவலாக காத்துக் கொண்டிருந்தார்கள்.

''உங்க பெரிய பொண்ணு இவ தானே? மீரா தானே? இப்பப் போனாளே அவ தானே?'' என்றார் அவள்.

''ஆமாம்! இவ தான் பெரிய பொண்ணு!'' என்றார் காளமேகம்.

''இந்தப் பொண்ணை பெண் கேட்டுத்தான் வந்திருக்கேன்!'' என்றார்.

அவர்கள் இரண்டு பேரும் திகைத்துப் போனார்கள்.

அவர் தன்னுடைய செல்ஃபோனை எடுத்து யாருக்கோ அழைப்புக் கொடுத்து விட்டு செல்போனை ஆஃப் செய்தார்.

அடுத்த இரண்டு நிமிடங்களில் காரில் இருந்து டிரைவர் பழம், பூ என்று ஒரு ஐந்தாறு தட்டுக்களை எடுத்துக் கொண்டு வந்தார்.

திருமகளே எழுந்து அதையெல்லாம் வாங்கி டீப்பாயின் மேலே கடை பரப்பினார்.

கஸ்தூரியும் காளமேகமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''இல்லை, தடால்னு தட்டெல்லாம் தூக்கிட்டு வரப்படாதுன்னு கார்ல வச்சுட்டு வந்தேன். ரெடி பண்ணி வச்சுட்டு வந்தேன்'' என்றார்.

காளமேகம் கஸ்தூரியைப் பார்த்துப் பேந்தப் பேந்த விழித்தவராக ''திடீர்னு வந்திருக்கீங்க. எங்களுக்கு மீறின இடம். என்ன சொல்றதுன்னு தெரியலை!'' என்று இழுத்தார்.

''நீங்களும் ஒண்ணும் ரொம்ப வசதி வாய்ப்பு இல்லாதவங்க இல்லையே? நீங்க நடுத்தரக் குடும்பம் தானே? உங்களுக்கும் வீட்டு வாடகை வருது. அங்கே இங்கேன்னு இடங்களெல்லாம் வச்சிருப்பீங்க'' என்றார்.

''அதெல்லாம் இருக்கும்மா!'' என்றார் காளமேகம்.

''அப்புறம் என்ன யோசிக்க வேண்டியிருக்கு?'' என்றார்.

கஸ்தூரியும் காளமேகமும் தனியாகப் போய் ஓரிரு நிமிடங்கள் பேசினார்கள்.

மீரா குறுகுறுவென்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'பெரிய இடமாக வந்திருக்கிறது. விட்டு விடப் போகிறார்களே!' என்று அவளுக்குத் தோன்றியது.

திரும்ப வந்தார்கள்.

''நீங்க ஜாதகத்தைப் பத்தி யோசிக்கறீங்களோ? நீங்க யாரோ புரோக்கர் கிட்ட கொடுத்திருந்தீங்கள்லே. அவருகிட்ட இருந்து வாங்கி நான் ஜாதகமெல்லாம் பார்த்துட்டேன்'' என்றார்.

அவர்களுக்குப் பேசுவதற்கு எதுவுமே இருக்கவில்லை.

''இல்லைம்மா. நாங்க அதிகபட்சம் ஒரு அம்பது பவுன்...'' என்று இழுக்க -

''அது போதும். அது போதும். எங்க பெரிய மருமகளும் அவ்வளவுதான் போட்டுட்டு வந்திருக்கா.எங்களுக்கு வேணுங்கற சொத்து இருக்கு. இன்னொண்ணு தெரியும்ல. இப்போதைக்கு என் மகனுக்கு வேலை இல்லை. ஆனா, ஏகப்பட்ட சொத்து கிடக்கு. அவன்



வேலைக்குப் போய்தான் சம்பாதிக்கணும்கற அவசியம் இல்லை.அவன் சொந்தமாத்தான் ஏதாவது பண்ணணும்னு ஏற்பாடு பண்ணிட்டு இருக்கான். அதெல்லாம் உங்களுக்கு தெரியுமில்லே?''

காளமேகத்துக்கு அதெல்லாம் ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. இருந்தாலும் தலையை உருட்டினார். பிறகு கஸ்தூரி தன்னிடம் கூறிய ஆலோசனை போலவே ''அம்மா, எங்களுக்கு ஒரு வாரம் டைம் கொடுங்கம்மா!'' என்றார்.

''அதெல்லாம் இல்லை. இரண்டு நாள்தான் டைம். அதுவும் சம்மதம்னு சொல்றீங்க. சரியா?'' என்றவர் -

மீராவை அழைத்து அவள் கையிலே ஒரு தட்டில் பட்டுப் புடவை குங்குமம் பழமெல்லாம் வைத்துக் கொடுத்து விட்டு ''இது யாரு வேண்ணா யாருக்கு வேண்ணா கொடுக்கலாம். அதனால தடுக்காதீங்க'' என்று சொல்லிவிட்டு தட்டில் வைத்து கொடுத்துவிட்டு நகர்ந்தார்.

அந்த இரண்டு நாட்களும் தீவிர ஆலோசனை நடந்தது.

தாரா ஆனால் பட்டும் படாமல் தான் இருந்தாள். கஸ்தூரி தனியாக தாராவிடம் கேட்டார். ''ஏண்டி ஒண்ணுமே வாயைத் திறக்க மாட்டேங்கறே?'' என்றார்.

''இல்லம்மா... இது நீங்க, அப்பா, மீரா முடிவு பண்ண வேண்டிய விஷயம்.. நான் ஏதாவது சொல்லி மீரா அக்காவுக்கு கோபம் வந்துடுச்சுன்னா? எதுக்கு வம்பு?'' என்றாள்.

''அதுவும் சரிதாண்டி. ஆனா, அவ எதையுமே யோசிக்க மாட்டேங்கறாடி. பையனுக்கு வேலை இல்லைங்கறாங்க. ஆனால், பரவாயில்லை. அவங்களுக்கு நிறைய சொத்து இருக்கு. அதைப்பத்தி ஏன் யோசிக்கறீங்க அப்படிங்கறா! பையனோட ஃபோட்டோ கொடுத்திருக்காங்க. வீடியோ கொடுத்திருக்காங்க. பையன் நல்லாதானே இருக்கான் அப்படிங்கறா.''

தாரா புன்னகைத்தாள். ''அப்புறம் என்னம்மா? அக்காவுக்கு பிரியம்னா செஞ்சிடுங்க'' என்றாள்.

''நீ என்னடி சொல்றே?''

''நான் என்னம்மா சொல்றதுக்கு இருக்கு? அக்காவுக்குப் பிடிச்ச மாதிரியான ஒரு இடம் வந்திருக்கு. நிஜமாவே ஒரு ராஜகுமாரன் அவளைக் கொத்திட்டு போக வந்திருக்கான்னு வச்சக்கோங்களேன். அப்புறம் என்ன?'' என்றாள்.

அப்பாவும் அம்மாவும் மறுபடியும் ஒரு முறை கலந்தாலோசித்து விட்டு இரண்டு நாட்களில் சம்மதம் சொன்னார்கள்.

அதற்குப் பிறகு எல்லாமே வேகமாக நடந்து முடிந்தது. இதோ இப்பொழுது கிருஷ்ண பிரசாத்தும் மீராவும் தங்களுடைய வீட்டிற்கு புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

காளமேகமும் தன் பங்குக்கு குறை வைக்காமல் ஒரு லாரி நிறைய கட்டில் பீரோ என்று பொருட்கள் வாங்கித்தான் அனுப்பினார்.

திருமகள் கூட ஃபோன் செய்து ''இங்கே வேணுங்கறது கிடக்கு. நீங்க இதெல்லாம் எதுக்கு அனுப்பறீங்க?'' என்று கேட்டார்.

''இல்லம்மா. இது எங்க கடமை. நாங்க அனுப்பறோம்'' என்று சொல்லி விட்டு பொருட்களையெல்லாம் அனுப்பினார்கள்.

கிருஷ்ண பிரசாத் ஒரு காரை ஓட்ட அந்தக் காரிலே போய் மீரா அமர்ந்தாள்.

இன்னொரு காரிலே அவர்களுடைய அண்ணன் அண்ணி, தாய், தந்தையர்கள் எல்லோருமே வந்தார்கள்.

இந்தத் திருமணத்தில் மீராவுக்கும் தாராவுக்கும் ஒரு ஆச்சரியமான விஷயம் என்ன வென்றால் தயாபரன் அதிகமாக பேசுவதில்லை.

அவசரமாக வந்து விட்டு அவசரமாக போய் விடுவார். ஆனால், அவரைக் கலந்து ஆலோசிக்காமல் திருமகள் எதையும் செய்வதில்லை என்பது மட்டும் அவர்களுக்கு தெரிந்திருந்தது.

பெண்ணை விட்டு விட்டு வரவேண்டும் என்பதற்காக தாராவும், காளமேகமும், கஸ்தூரியும் ஒரு வாடகைக் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

இந்தத் திருமணத்திலும் சரி, திருமண நிகழ்வுகளிலும் சரி கல்யாண ராமன் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டு பாடுபட்டான்.

அவர்கள் வாடகைக் காரில் ஏறப் போகிற சமயத்திலே கல்யாண



ராமன் ஒரு காரை எடுத்துக் கொண்டு வந்தான். ''அங்கிள், இந்தக் கார்ல ஏறுங்க. அவங்க வீட்டுக்கெல்லாம் வாடகைக் கார்ல போனா நல்லா இருக்காது. இது என்னோட ஃப்ரெண்டோட காரு. நான் டிரைவ் பண்றேன்'' என்று அவர்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்டான்.

கல்யாண ராமன் இப்பொழுது எல்லாரைக் காட்டிலும் கஸ்தூரிக்கு மிகவும் பிரியமானவனாக ஆகிவிட்டான்.

குடும்ப கவலைகளையெல்லாம்கூட சில நேரத்தில் அவனிடம் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தார். ''தெரியலை தம்பி, நம்ம பொண்ணு தான் அங்க போய் எப்படி இருப்பாளோ என்னமோ தெரியலை. இவ நினைச்சுட்டு இருக்கா - பணக்கார வீடுன்னா பெரிய கனவு உலகம்னு. அங்கே போனாத்தானே எது எப்படின்னு தெரியும். பெரிய குடும்பமா இருக்காங்க. எனக்கு பயமாத்தான் இருக்கு'' என்று புலம்பிக் கொண்டே வந்தார்.

கல்யாண ராமன் முன்னாலே இருந்த கண்ணாடி வழியாக தாராவைப் பார்த்து சிரித்தான். பிறகு சொன்னான் ''பயப்படாதீங்க அம்மா, எல்லா வீட்டுக்கும் பொண்ணுங்க போகும் போது அப்படித்தான் இருக்கும். அப்புறம் எல்லாம் சரியாகி விடும். நீங்களே பார்த்து ஆச்சரியப்படற மாதிரி மீரா குடும்பம் நடத்தப் போறாங்க பாருங்களேன்.''

காளமேகத்திற்கு உள்ளூர அந்தப் பயம் இருந்தது. ஆனால், அவர் எதையும் பேசிக் கொள்ள வில்லை.

மீரா அப்பொழுது உற்சாகத்தின் உச்சியில் கணவருடன் போய்க் கொண்டிருந்தாள்.

கிருஷ்ண பிரசாத் அதிகமாகப் பேசுவது இல்லை. 'பேசுவது இல்லை என்றால் என்ன? அழகானவனாக இருக்கிறான். அந்தஸ்தானவனாக இருக்கிறான். இப்படி ஒரு கணவன் கிடைப்பதற்கு நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும்' என்று எண்ணிக் கொண்டேதான் போனாள்.

ஆனால், அவளுக்கு அப்போது தெரியவில்லை - கணவன் வீட்டிலே தனக்கு ஒரு பேரிடி காத்திருக்கிறது என்று.

## 4

மெல்ல மெல்லத்தான் அந்த வித்தியாசம் புரிந்தது மீராவுக்கு.

வீடு கடல் போல பெரிதாக இருந்தது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அறையும் எல்லா வசதிகளும் கூடியதாக இருந்தது.

அவர்கள் படுக்கை அறைக்கு முன்னாலே சின்ன ஹால். பக்கத்திலே ஸ்டடி ரூம் என்று ஒரு ரூம், பால்கனி என்று அதுவே ஒரு தனி பங்களாவைப் போல இருந்தது.

எல்லாம் நன்றாகத்தான் இருந்தது. ஆனாலும், ஏதோ ஒன்று அவளுக்கு நெருடலாக இருந்தது.

திருமணமாகி ஒரு வாரத்துக்கு மேல் ஆகியிருந்தது. எண்ணி எண்ணிப் பார்த்தாலும் கணவன் இதற்குள்ளாக ஒரு நூறு வாக்கியங்களுக்கு மேல் பேசியிருக்க மாட்டான்.

மற்றதெல்லாம் சரியாக நடந்தது. வேலைகளெல்லாம் நன்றாகத்தான் நடந்தன. ஆனால், அவளிடம் பேசுவது மிகவும் குறைவாக இருந்தது.

பேசுவது குறைவாக இருந்தது என்றாலும் அவளுக்கு எந்தக் குறையும் வைக்கப்படவில்லை. நல்ல கணவனாகவே நடந்து கொண்டான்.

அவளுடைய தேவைகளை கவனித்துக் கொண்டான். என்றாலும், அவளிடம் அவனால் மனம் விட்டுப் பேச முடியவில்லை. ஏதோ ஒரு திரை போட்டாற் போல ஒரு கோடு போட்டு விட்டான் என்பது புரிந்தது.

எங்கே பிரச்சினை என்பது அவளுக்கு புரியவே இல்லை.

கிருஷ்ண பிரசாத்தின் அம்மா திருமகள் மட்டும் தான் கொஞ்சம் வெளிப்படையாக அன்பைக் காட்டினார்.

மற்றவர்கள் எல்லோரும் அமர்த்தலாகத்தான் இருந்தார்கள்.



லேகாவுக்கு இரண்டு குழந்தைகளாம். இரண்டு குழந்தைகளும் ஹாஸ்டலில் இருந்தார்கள்.

திருமண சமயத்தில் ஒன்றிரண்டு நாட்கள் வந்திருந்ததோடு சரி. அதற்குப் பிறகு எப்பொழுது போனார்கள் என்று கூட மீராவுக்கு தெரியவில்லை.

மீராவும் அவள் கணவனும் அவளுடைய அம்மா வீட்டிற்குச் சென்றிருந்த பொழுது, குழந்தைகள் கிளம்பிப் போய் விட்டார்களாம்.

பெரும்பாலும் கிருஷ்ண பிரசாத் மற்றவர்களோடு உணவு அருந்துவதற்காக வருவதில்லை. அப்பா காலையிலே எட்டரை மணிக்கெல்லாம் அரக்கப் பரக்க போய் விடுகிறார்.

அதற்குப் பிறகு ராம் பிரசாத் சாப்பிட வருகிறான். அப்பொழுது லேகா வந்து அவனுக்கும் பரிமாறி விட்டு தானும் சாப்பிடுகிறாள். அத்தையிடம் நன்றாகப் பேசுகிறாள்.

அந்த நேரத்திற்கு மீரா ஒரு முறை இறங்கிப் போயிருந்தாள். அக்கா என்று இவள் ஆசையாகப் போனாள்.

லேகா அவளைத் திரும்பிப் பார்த்த விதமே ஏதோ புழுவைப் பார்க்கிறாற்போல இருந்தது.

சட்டென்று தன்னைத் தடைப் படுத்திக் கொண்டாள் மீரா.

''வாம்மா, நீயும் சாப்பிடு'' என்று திருமகள்தான் அழைத்தார்.

லேகா மரியாதைக்குக் கூட சாப்பிடுங்கள் என்று சொல்லவில்லை. லேசான ஒரு புன்னகையுடன் தலை அசைத்து விட்டு திரும்பிக் கொண்டாள்.

ராம் பிரசாத் அதை விட பிரமாதமாக நடந்து கொண்டான். திரும்பியும் கூட பார்க்கவில்லை. 'இனி இந்த வீட்டிலே நீயும் ஒரு ஜந்துவாக ஒரு ஓரமாக இருந்து விட்டுப் போ' என்பது போல அவன்பாட்டுக்கு லேகாவிடம் தன் பேச்சைத் தொடர்ந்தான்.

இன்னைக்கு பேங்குக்குப் போய் இதை முடிச்சுடு; அதை முடிச்சுடு என்று மனைவியிடத்தில் சொல்லிக் கொண்டிருந்தான்.

திருமகள்தான் ''வாம்மா!'' என்றார் மறுபடியும்.

என்னதான் கல்வியறிவில் அவள் பெரிய சுடராக இருக்கவில்லை

என்றாலும்கூட தான் இந்த இடத்தில் விரும்பப் படாத பொருளாக இருக்கிறோம் என்பது புரிந்தது.

அசடு வழிய சிரித்து விட்டு. ''பரவாயில்லைங்க அத்தை. பெரிய அத்தான் சாப்பிட்டுட்டு போகட்டும். அப்புறம் வர்றேன்'' என்று சொல்லிவிட்டு தன்னுடைய அறைக்குப் போய்விட்டாள்.

கணவனிடத்தில் போய் சொல்லலாம் என்று போனாள். அவன் இறுக்கமான முகத்தை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

''நான் குளிச்சிட்டு வர்றதுக்குள்ளே எங்க போனே?'' என்றான்.

''இல்லை.... கீழே போனேன். லேகா அக்காவும் பெரிய அத்தானும் சாப்பிட்டுட்டு இருந்தாங்க...''என்று இழுத்தாள்.

'ம்' என்று உறுமினான்.

பிறகு ''இங்கே பாரு மீரா, தேவையில்லாம வீட்டுக்குள்ள அங்கே இங்கே போகாதே. நான் சாப்பிட போகும் போது நீ வந்தீன்னா போதும். அப்படி உனக்கு பசிச்சதுன்னா இதோ இந்த பெல் அடிச்சீன்னா சமையல்காரங்க இங்கேயே கொண்டு வந்து கொடுத்துடுவாங்க'' என்றான்.

வீட்டில் என்ன நடந்திருக்கும் என்பது அவனுக்கு ஓரளவு புரிந்திருந்தது என்று மீராவுக்கு தெரிந்திருந்தது. அதற்கு மேல் புகார் சொல்லுவது நாகரிகமாக இருக்காது என்று விட்டு விட்டாள்.

அதைப் போல அன்றைக்கு மறுநாள் ஒரு விஷயம் நடந்தது. அன்றைக்கு ஏனோ ஒன்பது மணிக்கே சாப்பிடப் போகலாம் என்று கிளம்பினான் கிருஷ்ண பிரசாத். மீராவுக்கு அங்கே என்ன வேலை? ஒரு வேலையும் இல்லை.

காலையில் எழுந்து நேரத்தில் குளித்து விட்டு பூஜை அறையில் போய் ஒரு கும்பிடு போட்டு விட்டு மீண்டும் தன்னுடைய அறைக்கு வந்து விடுவாள்.

தான் கொண்டு வந்திருந்த விதவிதமான சுடிதார்களில் ஒன்றை எடுத்து மாட்டிக் கொள்ளுவாள். பிறகு அவர்களுடைய போர்ஷனுக்குள்ளாகவே அங்கேயும் இங்கேயும் நடமாடிக் கொண்டிருப்பாள்.



அவன் ''நான் வெளியே போய்விட்டு வருகிறேன்'' என்று கிளம்பிப் போவான் - காலை பத்து மணிக்கு மேல். எங்கே போகிறான் என்று தெரியாது. சொல்லவும் மாட்டான்.

பிற்பகல் உணவு நேரத்திற்கு வருவான். சாப்பிட்டு விட்டு சற்று நேரம் ஓய்வு எடுப்பான். பிறகு மாலையில் மறுபடியும் கிளம்பி விடுவான். ஒருவாரமாக இந்த நாடகம் தான் நடந்து கொண்டிருந்தது.

இடையிலே ஒரு நாள் ''ஏங்க... எங்க அம்மா வீட்டுக்கு...?'' என்று இழுத்தாள் மீரா...

''போயிட்டு வா. அம்மா கிட்ட சொன்னா கார் அரேஞ்ச் பண்ணுவாங்க. போயிட்டு வா'' என்றான்.

அவன் சொன்ன விதத்திலேயே தான் அவளுடன் வரப் போவதில்லை என்பதை சொல்லி விட்டான்.

அதற்குப் பிறகு மீராவுக்கும் போக வேண்டும் என்ற ஆர்வம் போய்விட்டது.

முதல் முதலாகப் போகும் போது கணவனோடு சென்று இறங்கினால் நன்றாக இருக்கும் என்பது அவளுடைய எதிர்பார்ப்பு.

பலதையும் யோசித்தபடி கணவனோடு இறங்கி வந்தாள் மீரா.

அப்பொழுது திருமகளும் கிருஷ்ண பிரசாத்தின் தந்தையும் பேசிக் கொண்டிருந்தது அவர்கள் காதிலே விழுந்தது.

''இதோ பாரு. திரு. சும்மா என்னை தொந்தரவு பண்ணாதே!'' என்று சொல்லிக் கொண்டிருந்தார் அப்பா.

''ஏங்க... இது என்னங்க நியாயம்?. ஒரு பெரிய சாம்ராஜ்யம் மாதிரி தொழில் இருக்கு. அதுல ஏதாவது ஒண்ணுல உங்க பையன கூப்பிட்டுக்கங்கன்னா இதுக்குப் பேரு தொந்தரவா?'' என்று சற்று கோபமாக கேட்டுக் கொண்டிருந்தார் திருமகள்.

கடைசிப் படியில் கால் வைக்கப் போன மீராவின் கையை பிடித்து சற்று ஒதுக்கமாக நின்று கொண்டான் கிருஷ்ண பிரசாத்.

''இங்க பாரு திரு..! எதுவானாலும் சரி. அப்படியே தூக்கி கையில கொடுத்தா அதோட மதிப்பு தெரியாது. உன்னோட மகனை சின்னதா

ஏதாவது ஒண்ணு செய்யச் சொல்லு. அது ஒரு சின்ன பெட்டிக் கடையானாலும் சரி. செஞ்சு அவன் நிரூபிக்கட்டும். அதுக்கப்புறம் நான் ஹெல்ப் பண்றேன்'' என்றார்.

''ஆமா, அப்படி அவனுக்கு செஞ்சுக்கத் தெரிஞ்சதுன்னா இது நாள் வரைக்கும் பேசாம இருப்பானா?'' என்றார் திருமகள்.

''அப்புறம் எதுக்கு அதுக்குள்ளே அவனுக்குக் கல்யாணம் பண்ணி வச்சே?'' என்றார்.

''என்னங்க இப்படிப் பேசறீங்க? இந்த மாதிரிப் பொண்ணு கிடைக்குமா?''

''கல்யாணத்தைப் பண்ணினாலாவது அவனுக்குப் பொறுப்பு வரும் அப்படின்னு யோசிச்சேன். வந்திருச்சா?'' என்றார் தயாபரன்.

''அதுசரி, ஒரு வாரத்துக்குள்ளே என்ன திடீர்னு வானத்தில இருந்தா குதிக்கும்?'' என்றார் திருமகள்.

அவர் கிண்டலாக சிரித்தார். ''செய்யறவன் உடனே செய்வான். செய்யாதவன் தான் நாளைக்கு நாளைக்குன்னு காரணம் சொல்லிட்டு இருப்பான்.''

கிருஷ்ண பிரசாத்தின் முகத்தில் அவமான உணர்வு தெரிந்தது.

மீரா அவன் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.

''ஏங்க, அவன் என்ன வேலைக்குப் போகமாட்டேன்னா சொல்றான். அவனுக்கு வேலை கிடைக்க மாட்டேங்குது. நீங்க உங்க கம்பெனியில ட்ரெயினிங் கொடுங்க'' என்றார் திருமகள்.

''இங்கே பாரு, திரு, முதலாளியோட மகன்னு கொண்டு போய் நிறுத்தினேன்னா அதுக்குண்டான ஆளுமை வேணும். கமாண்ட் வேணும். உன் மகனுக்கு அது இருக்கா? இவன் போய் அங்க எதையாவது சொதப்பி விட்டான்னு வச்சுக்கோ. எல்லாம் லேக்ஸ் கணக்குல கோடிக் கணக்குல போயிட்டு இருக்குது. இல்லை, உன் பெரிய மகனை மாதிரி - அவன்பாரு கம்ப்யூட்டர் இன்ஜினியரா வேலைக்குப் போறான்ல - அந்த மாதிரியாவது ஏதாவது ஒரு வேலைக்குப் போகச் சொல்லு.''

திருமகள் பெருமூச்சு விட்டார்.



''இதோ பாருங்க, நீங்க பண்றதும் சரியில்லை; அவன் பண்றதும் சரியில்லை. ஒண்ணும் இல்லல. இன்னைக்கு காலைல மருமகப் பொண்ணு ஆசையா இறங்கி வந்தது. லேகா என்னமோ பேசறதுக்கே யோசிக்கிறா! உங்க பெரிய மகன் அதை விட!'' என்றார் திருமகள் புகார் சொல்லுவது போல.

''ஆமாம், அப்படித்தான் இருப்பாங்க. ஒரு ஆம்பளைன்னா ஒரு குடும்பத்தை கட்டிக் காக்கற அளவுக்கு ஏதாவது ஒரு விதத்துல தயாராகணுமில்லே. இவனுக்கே நாம சோறு போடணும். இவன் இன்னொருத்தியை கல்யாணம் பண்ணிட்டு வந்திட்டானே. அப்பவே ராம் பிரசாத் சொன்னான். 'வேண்டாம்பா அவன் ஸ்டெபிலைஸ் ஆகட்டும்' அப்படின்னு. அந்தக் கோபம் அவனுக்கு'' என்றார்.

திருமகள் பெருமூச்சு விட்டார். ''இருக்கட்டுங்க. அதையெல்லாம் வந்த பொண்ணு முன்னாடியா காட்டணும்'' என்றார் திருமகள்.

''என்ன பெரிய வந்த பொண்ணு. பெரிய லேண்ட் லார்ட் வீட்டுல இருந்தா கூட்டிட்டு வந்திருக்கே... இல்லை டாட்டா பிர்லா வீட்ல இருந்து கல்யாணம் பண்ணிட்டு வந்திருக்கியா அப்படின்னு கேட்கறான் உன் பெரிய மகன்'' என்றார்.

''அவன் கேட்கிறானா? இல்லை நீங்க கேட்கறீங்களா?'' என்றார் திருமகள் கோபமாக.

அப்பா ஒரு பெருமூச்சு விட்டார். பிறகு சொன்னார். ''திரு, நீ என்னைப் புரிஞ்சுக்கிட்டது இவ்வளவுதானா? நான் வேணுங்கறது அவனுக்கு சம்பாதிச்சு வச்சிருக்கேன். ஆனா, அதுக்காக அவன் உட்கார்ந்து சாப்பிடக் கூடாது. ஒரு சொத்தைக் கையில கொடுத்தா அதை நிர்வாகம் பண்ணவாவது தெரிஞ்சிருக்கணுமில்லே. அதுக்காகத்தான் நான் இப்ப அவனை முட்டி மோதி வரட்டும்னு சொல்றேன் புரிஞ்சுக்கோ.''

''..........................''

''எனக்கு அந்த மருமகளைப் பத்தியெல்லாம் ஒரு கம்ளெய்ண்டும் கிடையாது. என்னைக்கு அவ நம்ம வீட்டு மருமகளாயிட்டாளோ மருமகள்தான். அதுல சந்தேகம் இல்லை. என்னோட கோபமெல்லாம் இவன் மேலதான்.'' என்றார்.

திருமகள் முகத்தில் லேசான மலர்ச்சி தோன்றியது. "நல்ல வேளை. நீங்களும் சேர்ந்துட்டு அந்தப் பிள்ளையை கேவலப்படுத்துவீங்களோன்னு நினைச்சேன்".

"என்ன நீ... இவ்வளவுதான் என்னை புரிஞ்சுக்கிட்டதா? அது நம்ம மருமகப்பா. அவளை நான் ஏன் கேவலப்படுத்தறேன். ஆனா, அதுக்காக ரெண்டு பேரையும் உட்கார வச்சுட்டு சாப்பாடு போடலாமா?" என்றார்.

திருமகள் மறுபடியும் கோபமாக "என்னங்க ,என்னமோ சாப்பாட்டுக்கு இல்லாத மாதிரி பேசிட்டு இருக்கீங்க?" என்றார்.

"அட, பார்த்தியா! மறுபடியும் நான் சொல்றத நீ புரிஞ்சுக்க மாட்டேன்னு பேசற. ஏழு தலைமுறைக்கு வேணுங்கற அளவுக்கு சாப்பாட்டுக்கு இங்கே இருக்கு. ஆனா அவன் கையால பத்து பைசா சம்பாதித்து அந்தப் பொண்ணுக்கு கொடுத்தாதான் அவனுக்கு பெருமை. அது அவனுக்குப் புரியணும் இல்லை?" என்றார்.

திருமகள் பெருமூச்சு விட்டார். "சரிங்க. அவனுக்கு கொஞ்சம் டைம் கொடுங்க. அவன் ஏதாவது பண்ணுவான்"

"சரி,சரி, பண்ணட்டும். அதைத்தானே நானும் எதிர்பார்க்கறேன். நானெல்லாம் ஆரம்பிக்கும் போது யாரு எனக்கு என்ன கொடுத்தாங்க?"

"அதுக்காக..? நீங்க அவனுக்கு சப்போர்ட் பண்ண மாட்டிங்களா?" என்றார்.

"இங்க பார். அவசியம் வரும்பொழுது சப்போர்ட் பண்றேன். அவன் ஏதாவது முயற்சி எடுக்கட்டும். அது நியாயமான முயற்சின்னு ப்ரூஃப் பண்ணட்டும். சப்போர்ட் பண்றேன்".

"பரவாயில்லை. இதையாவது சொன்னீங்களே?" என்றார் திருமகள்.

"சரி, இப்ப எனக்குப் போகணும். போர்ட் மீட்டிங் இருக்கு பத்தரை மணிக்கு" என்று அவசரமாக கிளம்பினார் தந்தை.

ஒரு ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டிருந்த கிருஷ்ண பிரசாத் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.



மனைவியை திரும்பிப் பார்த்தான். "ரூமுக்குப் போகலாம் வா" என்றான்.

"ஏங்க? பசிக்குதுன்னு சொன்னீங்க?" என்றாள் அவள் ஆதுரத்தோடு.

"வயிறு நிறைஞ்சிருச்சு" என்று இழுத்துக் கொண்டு போனான்.

அந்தக் குடும்பத்தில் இந்தப் பிரச்சினையின் வீரியம் முதல் முறையாக மீராவுக்குப் புரிந்தது. தன் வீட்டில் ராணியைப் போல் எல்லோரையும் மிரட்டிக் கொண்டிருந்தது நினைவுக்கு வர - சோர்ந்து போன முகத்துடன் அவனைப் பின்தொடர்ந்தாள்.

மேற்கொண்டு என்ன செய்வதென்று அவளுக்கும் புரியவில்லை.

எத்தனையோ நாட்கள் தான் தாராவை அவமானப் படுத்தியதெல்லாம் இப்போது அவளுக்கு நினைவுகுகு வந்தது.

அவளுக்கு அவமானப்படுவதின் வலி முதல் முதலாகப் புரிந்து ஆழமாக இறங்கியது.

## 5

"கல்யாண் தம்பி! மத்தியானம் சாப்பாட்டுக்கு இங்க வந்திடு. உனக்கும் சேர்த்து காளான் பிரியாணி செஞ்சிருக்கேன்" என்றார் கஸ்தூரி.

லேப்டாப்பை கையில் வைத்துக் கொண்டு மும்முரமாக அதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கல்யாண ராமன் புன்னகைத்தான்.

"அம்மா கோபிச்சுக்காதீங்கம்மா. ரொம்ப ஒரு முக்கியமான வேலையா இருக்கேன். ஒரு பெரிய பார்ட்டி கூட இங்கிருந்து டிஸ்கஷன்ல இருக்கேன். இரண்டு மணிநேரத்துக்கு குறையாம கீழ இறங்க முடியாதும்மா!" என்றான்.

"ஓகே... சரி நீ வேலையைப் பாரு" என்று சோர்வாகச் சொல்லுவது போல சொல்லி விட்டு ஃபோனை ரிசீவர் தொட்டிலில்

வைத்தார் கஸ்தூரி.

கல்யாண ராமன் இப்பொழுது கிட்டத்தட்ட அந்தக் குடும்பத்தில் ஒருவனைப் போல ஆகிவிட்டான்.

மீராவின் கல்யாணத்தின் போது அவனாகப் பொறுப்பு எடுத்துக் கொண்டு காரியங்களை செய்து தந்ததில் அந்தக் குடும்பம் மகிழ்ந்து போயிருந்தது. ''இருக்கட்டும்மா. உங்களுக்கு ஒரு மகனோ மருமகனோ இருந்தாங்கன்னா செய்ய மாட்டாங்களா?'' என்று சொல்லிக் கொண்டே காளமேகத்தினுடைய பொறுப்பில் பாதிக்கு மேல் அவன் கையில் எடுத்துக் கொண்டான்.

அதற்காக அந்தக் குடும்பத்தில் எல்லை மீறிப் பழகுவதோ வேறு எந்த விதமான சலுகையும் எதிர்பார்ப்பதோ எதுவும் இல்லாமல் மிகவும் இயல்பாக இருந்தான். கிட்டத்தட்ட எல்லா போர்ஷன்காரர்களும் கூட கல்யாண ராமனை தங்கள் வீட்டில் ஒருவனைப் போல நினைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

ராஜம்தான் முதலில் அவனோடு பழக ஆரம்பித்தாள். அவனுடைய கண்ணியமான நடத்தையும், பொறுப்பான பேச்சும், எல்லை தெரிந்து - எவ்வளவு தூரத்தில் நிற்க வேண்டுமோ அவ்வளவு தூரத்தில் நிற்பதுமாக இருக்கும் அவனை எல்லோருக்கும் பிடித்துப் போய் விட்டது.

அதுவும் மீராவின் கல்யாணத்தில் அவன் பொறுப்பு எடுத்துக் கொண்டு எல்லாவற்றையும் செய்ததை பார்த்த உடனே குடித்தனக்காரர்களும் கூட இணைந்து கொண்டு காரியம் ஆற்றினார்கள்.

அதில் ஒரு குடித்தனக்காரர் கேட்டார், ''ஏன் தம்பி! குடித்தனக்காரங்கன்னா இதெல்லாம் செய்யணும்னு இருக்கா. எதுக்கு நீங்க இப்படி வெட்டியா அலையறீங்க?'' என்று.

அப்போது அவன் சொன்னான்: ''என்ன சார் இப்படி பேசறீங்க? நாம எல்லாம் ஒரே இடத்துல இருக்கோம். நம்ம ஹவுஸ் ஓனர் வீட்டுல கல்யாணம் நடக்குது. அவங்க நம்மளுக்கு எல்லா வசதிகளும் பார்த்து பார்த்து செய்யறாங்க. மத்த வீடுகள்ள மாதிரி அதை அங்க வைக்காத இதை இப்படி பண்ணாத என்று ஏதாவது தொந்தரவு கொடுக்கறாங்களா?



எவ்வளவு பண்பாடோட நடந்துக்கறாங்க. அவங்க வீட்டுல ஆம்பளைப் பையன் இல்லை. நாம தான் ஹெல்ப் பண்ணனும். நாம தான் உதவி செய்யணும்'' என்றான். இதை எதிர்பாராத விதமாக கேட்டுக் கொண்டிருந்த கஸ்தூரியும், காளமேகமும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்துக் கொண்டார்கள். அதனால், கல்யாண ராமன் பொறுப்பு எடுத்துக் கொண்டு செய்வதை அவர்கள் எந்த விதத்திலும் தடுக்கவும் இல்லை.

இப்பொழுது அவர்கள் குடும்பத்தில் எல்லோருடனும் நெருங்கிப் பழக ஆரம்பித்து விட்டான். அவ்வளவு ஏன் தாரா கூட இப்பொழுது அவனிடம் இயல்பாக பேச ஆரம்பித்திருந்தாள். 'விளையாட்டாகக் கூட பேச ஆரம்பித்திருந்தாள்.

கல்யாண ராமன் மும்முரமாக தன்னுடைய வாடிக்கையாளரோடு இன்டர் நெட் மூலமாக பேசிக் கொண்டிருந்தான்.

ஒரு வழியாக பெரியதொரு ஒப்பந்தம் முடிவானது.

நேரம் போனது தெரியவில்லை. திரும்பிப் பார்த்தால் மணி ஒன்றரை ஆகி இருந்தது.

'சரி, வெளியே போய் சாப்பிட்டுக் கொள்ளலாம்' என்று கிளம்பும் பொழுது அவனுடைய அறைக் கதவு தட்டப்பட்டது.

''யாரு? வாங்க'' என்றான்.

கதவைத் திறந்தான்.

எதிர்பார்க்கவே இல்லை. தாரா அங்கே சிரித்த முகத்துடன் கையில் பாத்திரத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

''அடடா, பெரிய பிசினஸ் மேன் ஆயிட்டீங்க போல இருக்கு - சாப்பிடக் கூட நேரம் இல்லாத அளவுக்கு?'' என்றாள்.

அவன் புன்னகைத்தான். ''ஆமாங்க தாரா, நிஜமாவே ஒரு முக்கியமான பார்ட்டி. பெரிய பார்ட்டி. இது வந்து ஒரு பெரிய டர்னிங் பாயின்ட் மாதிரி எனக்கு இருக்கும். அதனால தான்...'' என்று இழுத்தான்.

''நீங்க இப்படி சொல்லிட்டீங்க. அம்மா அங்கே ஒரே புலம்பல். அந்தப் பையனை -' என்னாலயும் மாடி ஏறி போக முடியாது அப்படின்னு. அதைப் பாத்துட்டு அப்பா, 'தாரா நீயாவது கொண்டு

போய் கொடுத்துட்டு வாம்மா' அப்படின்னு சொல்லிட்டாருன்னா பாருங்களேன்.''

''அதானே பார்த்தேன். நீங்க அக்கறைப்பட்டு எடுத்துட்டு வந்தீங்களோன்னு நினைச்சேன்'' என்றான்.

''ஹலோ, ஹலோ, எனக்கும் கொஞ்சம் அக்கறை இருந்துச்சு. அதனாலதான் வந்தேன். இல்லைன்னா ஏதாவது ஒரு சாக்கு சொல்லி தப்பிச்சிருப்பேன்ல?''

''இல்லை, நான் வேற விதமா நினைச்சேன்.''

''என்னது?'' என்றாள் அவள்.

''இல்லை, நீங்க செஞ்சிருக்கீங்களோ என்னமோ? பரிசோதனைக்கு நாம கிடைச்சோம் போல இருக்கே அப்படின்னு நினைச்சேன்.''

அவள் முறைத்தாள்.

''நான் தான் செஞ்சேன். ஆனா என்னோட சமையலைப் பத்தி உங்களுக்குத் தெரியலை.''

அவன் சிரித்தான். ''சரி முடிவு பண்ணிட்டீங்க. நாங்க ஒண்ணும் செய்யறதுக்கு இல்லை. குடுங்க'' என்று வாங்கிக் கொண்டான்.

''குடுக்கறது மட்டும் இல்லை சார், சாப்பிடறீங்களான்னு பார்த்துட்டுவேற வரணுமாம். அம்மாவோட ஆர்டர்'' என்றாள் தாரா.

அவன் கடகடவென்று சிரித்தான்.

''அன்புத் தொல்லை போல இருக்கே'' என்றவள். 'சரி' என்று சுற்றும் முற்றும் பார்த்தான். தனக்கு அளவாக - சின்னதாக - வேண்டுமானா ப் மடித்துக் கொள்ளுகிறமாதிரி ஒரு டேபிள் வாங்கி வைத்திருந்தான்

அதன் மேல் தாரா உரிமையாக தான் கொண்டு வந்திருந்த ஹாட் பாக்ஸை வைத்தாள்.

கூடவே அதற்கு ராய்தா என்று சொல்லப்படுகிற தயிர் பச்சடி வேறு தயாராக இருந்தது.

''ம் ஹூம்! கலக்கறீங்கப்பா'' என்றான் அவன்.

''சாப்பிடுங்க. அப்பப்பதானே வீட்டு சாப்பாடு சாப்பிடறீங்க?''



என்றாள் அவள் அக்கறை நிறைந்த முகத்துடன்.

''சரிங்க, நீங்க இப்படி உட்காருங்க. நீங்க நின்னுட்டே இருந்தீங்கன்னா, நான் எப்படி சாப்பிடறது?''

''சரி'' என்று அவளும் ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள்.

இருந்த இன்னொரு சேரில் அவன் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தான்.

சற்று நேரம் மௌனமாகக் கழிந்தது.

இருவருக்குமே அந்த மௌனம் அசௌகரியமாக இருந்ததால் மெதுவாகப் பேச ஆரம்பித்தான் கல்யாண ராமன்.

''எங்க தாரா... இப்ப உங்களுக்கு ரூட் கிளியர் ஆயிடுச்சு போல.'' என்றான்.

''போங்க சார். எல்லாரும்தான் கல்யாணத்தைப் பத்தியே பேசறாங்கன்னா நீங்களுமா?''

''ஆமாங்க. உங்க மாதிரி ஏஜ்காரங்கன்னாலே பெத்தவங்களும் சரி மத்தவங்களும் சரி இதைத்தான் ஆரம்பிப்பாங்க.''

''ஏன் உங்க மாதிரி ஏஜ் காரங்ககிட்ட பேச மாட்டாங்களா?''

''எங்களை மாதிரி ஏஜ் காரங்ககிட்டயும் பேசறாங்க. அதனால தானே தப்பிச்சு ஓடி வந்துட்டோம்'' என்றான் கல்யாண ராமன்.

''ஓகோ, தப்பிச்சுட்டுத்தான் இங்க வந்திருக்கீங்களா?'' என்றாள் தாரா.

''அப்படித்தான் வச்சுக்கோங்களேன்'' என்றான் அவன்.

''நீங்களெல்லாம் ஆம்பளைங்க. ஏதோ பிசினஸ் காரணத்தை சொல்லி தப்பிச்சுக்கறீங்க. நாங்க என்ன காரணத்தைச் சொல்லிட்டு தப்பிச்சுக்கறது?'' என்றாள் தாரா

''அது கொஞ்சம் கஷ்டம் தான்'' என்று அவன் சீரியஸாக சொன்னான்.

''அப்படி நினைக்காதீங்க. அதுக்கும் நாங்க வழி கண்டுபிடிச்சுடுவோம்ல''.

''ஓஹோ, ஆல்டர்நேட்டிவ் வேற வச்சிருக்கீங்களா?'' என்று அவன் சுவாரசியமானான். ''சொல்லுங்க. என்னென்ன திட்டம் வச்சிருக்கீங்க?''

''நிபந்தனை போட்டுடுவோமே?'' என்றாள் தாரா.

''ஓகோ நிபந்தனை வேறயா? எப்படி... மணமகன் எதிரில வந்து உட்கார்ந்த உடனே நீங்க ஒரு நாலு கேள்வி கேட்பீங்க. அதுக்கு அவன் பதில் சொல்லணும். சரியா சொன்னா ஓ.கே. அப்படியா?'' என்றான்.

''அய்யோ, அய்யோ,'' என்று அவள் தலையில் அடித்துக் கொண்டாள்.

''நாலு கேள்விக்கு பதில் சொன்னால் அவன் கேரக்டர் தெரிஞ்சுக்க முடியுமா? அப்படியெல்லாம் தெரிஞ்சுக்க முடியாது. அதெல்லாம் சினிமாவுலதான் ஒத்து வரும்.'' என்றாள்.

''அப்ப வேற என்ன நிபந்தனை?'' என்றான்.

அவன் வேண்டும் என்றேதான் கிண்டுகிறான் என்பது அவளுக்குப் புரிந்திருந்தது.

ஆனாலும், அவனிடத்தில் இப்படியெல்லாம் பேசுவது அவளுக்கும் பிடித்துத்தான் இருந்தது.

வேறு யாராவது இப்படிப் பேசினால் பட்டென்று பதில் கொடுத்தோ அல்லது நாகரீகமான முறையில் ஏதோ ஒரு பதில் சொல்லியோ தப்பித்து விடுவாள்.

இந்தக் கல்யாண ராமனிடத்தில் மட்டும் தான் ஏன் இப்படி பதில் சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்பது அவளுக்கே புரியவில்லை.

இருந்தாலும் தொடர்ந்து வாயடிக்கத்தான் செய்தாள்.

''சொல்லுங்கம்மா என்ன நிபந்தனை?'' என்று கேட்டான்.

தாரா சொன்னாள். ''இங்க பாருங்க கல்யாண ராமன் சார். எங்க அம்மா அப்பாகிட்ட சொல்லியிருக்கேன். பணக்கார மாப்பிள்ளையே கூடாது அப்படின்னு சொல்லியிருக்கேன். போதும். எங்க அக்காவைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்ததே போதும். அவ தான் பணக்கார மாப்பிள்ளை எதிர்பார்த்தாள். கல்யாணம் பண்ணிக்கிட்டா!'' என்று நிறுத்தினாள்.



அவள் பேசிய விதத்திலேயே மீரா அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை என்பது அவனுக்கு புரிந்தது. ஆனால், எப்பொழுது அவள் சொல்லவில்லையோ அப்பொழுது குடைந்து குடைந்து கேட்கக் கூடாது என்று எண்ணிக் கொண்டவனாக, புரியாதவன் போல,

''சரி, அடுத்த நிபந்தனையைச் சொல்லுங்க'' என்றான்.

''இரண்டாவது நிபந்தனை என்ன தெரியுமா?'' என்றாள்.

''சொல்லுங்க,''

''இந்த சொத்து முழுக்க எங்க அக்காவுக்குத்தான் போகும். என்னா, நான் பிறந்த வீட்டில் இருந்து எந்த சொத்துமே எதிர் பார்க்கமாட்டேன். அது மாதிரி என்னோட சொத்தை எதிர்பார்க்காத மாப்பிள்ளையா இருக்கணும்'' என்றாள்.

கல்யாண ராமன் இந்த நிபந்தனைகளை உள்வாங்கிக் கொண்டான் என்பது அவளுக்குப் புரிந்தது.

கொஞ்சம் சிந்தனை மயமாக இருந்தான்.

''என்னங்க ரொம்ப யோசிக்கறீங்க?'' என்றாள் தாரா.

அவன் ஒரு பெருமூச்சு விட்டான். ''இல்லைங்க தாரா... நான் ஒரு ப்ரொபோசல் பார்த்து வச்சிருந்தேன். உங்களுக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கும்னு தோணுச்சு. ஆனா இந்த நிபந்தனை எல்லாம் ஒத்து வருமான்னு தெரியலை.''

உள்ளூர தாரா சிரித்துக் கொண்டாள்.

கல்யாண ராமன் ஏதோ ஒரு திட்டத்தோடுதான் கேட்டிருக்கிறான் என்பது அவளுக்கு புரிந்திருந்தது போலவும் இந்த நிபந்தனைகளைச் சொல்லி தான் வெற்றி அடைந்து விட்டதாக அவள் ஒரு பெருமிதம் கொண்டது போலவும் உள்ளே அவனுக்கு ஒரு எண்ணம் தோன்றியது.

கல்யாணராமன் இடது கையால் தனது பின்னந் தலையில் நீவி விட்டுக் கொண்டான்.

அந்த நிமிடத்தில்தான் தாராவுக்கு ஒன்று புரிந்தது.

'இந்த கல்யாண ராமன் உண்மையிலேயே அழகாக இருக்கிறான். கம்பீரமாகக் கூட இருக்கிறான். ஆனால் இவனை நம்பி எத்தனை பேர்

இருக்கிறார்களோ. ரொம்ப பொறுப்பாக இருக்கிறானே' என்று எண்ணிக் கொண்டாள்.

அவளது பார்வையைக் கவனித்த கல்யாணராமன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

அப்போது தாரா அந்தக் கேள்வியைக் கேட்டாள். ''ஏன் சார்? உங்க வீட்டுல நிறைய மெம்பர்ஸ் இருக்காங்களா? நீங்க தான் பொறுப்பா எல்லாத்தையும் பார்த்துக்கணுமா?'' என்று கேட்டாள்.

அவன் புன்னகைத்தான். ''அப்படித்தான்னு வச்சுக்கங்களேன்.''

''அப்ப சரி. எப்படியும் நீங்க கல்யாணம் பண்ணிக்க கொஞ்ச நாள் ஆகும்.''

அவன் 'ஆமாம்' என்றும் சொல்ல வில்லை, 'இல்லை' என்றும் சொல்லவில்லை.

மையமாக தலையசைத்தான்.

பேசிக் கொண்டே அவள் கொண்டுவந்திருந்த காளான் பிரியாணி முழுவதையும் சாப்பிட்டு முடித்தான்.

''ரொம்ப அருமையா இருந்ததுங்க, ரொம்ப தாங்க்ஸ்'' என்று பாராட்டிச் சொன்னான்.

''இப்பவே பாத்திரத்தைக் கொண்டு போயிடறீங்களா?'' என்றான்.

''ஆமாம், கொடுங்க'' என்று அவள் வாங்கிக்கொண்டாள்.

''ஓகே சார்! ரெஸ்ட் எடுப்பீங்களா..?'' என்றாள்.

''ஆமாங்க. இந்த மாதிரி சாப்பிட்டுட்டு தூக்கம் வேற போட்டா அவ்வளவுதான். ஃபேட் ஏறிடும். நாளைக்கு நம்மளுக்கு வர்ற பொண்ணுக்கு பிடிக்காம போனாலும் போயிடும்'' என்றான் அவன்.

''பொண்ணுக்குப் புடிக்கறது மட்டும் இல்லை சார். வெயிட் போடாம இருந்தீங்கன்னா உங்க உடம்புக்கே நல்லது'' என்று அவள் சிரித்தாள்.

கலகலவென்று அவள் சிரிப்பதைத் தன்னையும் அறியாமல் ரசித்துக் கொண்டிருந்த கல்யாண ராமன் ''எப்படியோ ஒரு அருமையான புரொபோஸலை இழந்துட்டீங்க'' என்றான்.

அவள் அவனை ஓரக்கண்ணால் பார்த்து விட்டு சொன்னாள்.



''எதுங்க அருமையான புரொபோஸல்? என்னோட சொத்தை எதிர்பார்த்து வரக்கூடிய புரொபோஸல் எப்படிங்க அருமையான புரொபோஸலா இருக்கும்?'' என்றாள்.

''அப்படிப் போடுங்க. செமையா அடிச்சீங்க ஒரு பாயிண்ட்'' என்று அவன் சிரித்தான்.

''சரிங்க... உங்க சொத்தை வேண்டாம்னு சொல்லிட்டு வரக்கூடிய புரொபோஸல்னா ஏத்துப்பீங்களா?'' என்றான் - இரண்டு கையையும் தலைக்கு மேலே தூக்கி பிடரியில் கொண்டுவைத்தபடி.

அவள் புன்னகைத்தாள்.

''மேலிடம்னு ஒண்ணு இருக்குங்க. அவங்க முடிவு பண்ணிப்பாங்க'' என்று சொல்லிவிட்டு. ''நான் வர்றேன்'' என்று நகர்ந்தாள்.

அப்படிப் போகும்போது அவளுக்குத் தோன்றியது. 'இந்தக் கல்யாணராமன் ஏதோ சொல்ல வந்தார், ஆனால் நிறுத்திக் கொண்டார்' என்று.

கல்யாணராமனும் அதே சமயத்தில் - சொல்ல நினைத்ததை சொல்லியிருக்கலாமோ என்று எண்ணிக் கொண்டான்.

அதற்கான காலமும் வந்தது. அப்போது பிரச்சினைகளும் வந்தது.

## 6

''வீட்டுல யாரும் இல்லையா?'' என்று குரல் கொடுத்துக் கொண்டே வந்தாள் மீரா.

குரலில் அளவற்ற மகிழ்ச்சி தெரிந்தது.

கணவன் வீட்டுக்குப் போய் மூன்று மாதங்கள் ஓடியிருந்தது.

இடையிலே ஒன்றிரண்டு முறை வந்திருந்தாள். ஆனால், இவ்வளவு மகிழ்ச்சியோடு அவள் ஒரு நாளும் வரவில்லை.

நல்ல வேளையாக அவள் வந்த நேரத்தில் அம்மா, அப்பா, தாரா எல்லோருமே வீட்டில் இருந்தார்கள்.

விடுமுறை நாளாகவும் போயிற்று.

''வா வா, வாடி மீரா!'' என்று அம்மா ஆசையுடன் வரவேற்றார்.

''இதோ வந்தாச்சு'' என்று கையில் கொண்டு வந்திருந்த பையை நீட்டினாள்.

அதிலே இனிப்பு, கார வகைகள், பழங்கள் என்று நிறைய இருந்தது.

''எதுக்குடி இதெல்லாம்? நாங்கதான் உனக்குக் கொண்டு வந்து தரணும்'' என்றார் அம்மா. ''இதுவரைக்கும் அப்படித்தாம்மா இருந்தது. இனிமே நானும் உங்களுக்கு இப்படியெல்லாம் கொண்டு வந்து தருவேன்'' என்றாள்.

தாரா தன் தாயை ஆச்சரியமாக திரும்பிப் பார்த்தாள்.

''ஆமாடி, என்ன பார்க்கறே?'' என்றாள் மீரா.

''இல்லைக்கா. இன்னிக்குத்தான் நீ ரொம்ப சந்தோஷமா வந்திருக்கே. பார்க்கறதுக்கே சந்தோஷமா இருக்கு'' என்றாள்.

மீரா நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். ''உன்னோட ஸ்பெஷல் காஃபி போட்டுத் தரமாட்டியாடி?'' என்றாள்.

''இப்ப இதோ ரெண்டு நிமிஷத்துல போட்டுத் தரேன். ஃபில்டர்ல கூட போட்டு வச்சது இருக்கு'' என்று சொல்லி விட்டு ஓடினாள்.

சொன்னது போலவே விரைவாக சூடான காஃபியோடு வந்தாள்.

அதற்குள்ளாக அம்மாவின் அருகில் ஸோஃபாவில் அமர்ந்திருந்தாள் மீரா.

அப்பா கூட எதிரே ஆர்வமாக பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்.

நீண்டதொரு பெருமூச்சு விட்டு விட்டு மீரா சொன்னாள்.

''முதல்ல ஒரு மடக்கு காஃபி குடிச்சுக்கறேன். ரொம்ப நாள் ஆச்சுடி உன் காஃபியை சந்தோஷமா சாப்பிட்டு'' என்றபடி ஒரு மடக்கு அருந்தினாள். பிறகு ''அம்மா, நம்ம கல்யாண ராமனுக்குத்தான் நன்றி சொல்லணும்'' என்றாள்.

''கல்யாண ராமனுக்கா? எதுக்குடி?'' என்றார் அம்மா.



மீரா ''அம்மா, இத்தனை நாளும் நான் வெறுங்கையை வீசிட்டுத்தான் வந்திருக்கேன். ஏன் தெரியுமா? நானே அங்க தண்டச் சோறு மாதிரி தான் ஃபீல் பண்ணினேன். என்ன தான் சொத்து இருந்தாலும் எங்க வீட்டுக்காரருக்குன்னு ஒரு சம்பாத்தியம் இருக்கலை. அப்படி இருக்கையில் அங்க சாப்பிடறதே என்னமோ தொண்டைக் குழியிலே இறங்காமத்தான் இருந்தது. சாப்பிடலைன்னா அது ஒரு பிரச்சனை ஆகுமே அப்படின்னு வேண்டா வெறுப்பா தான் சாப்பிட்டேன். எது வேணும்னாலும் எங்க மாமியார்கிட்ட தான் போய் கேட்கணும். ஏன்னா இவரு கிட்டதான் காசு இருக்காதே. அதனால நான் எதுவுமே வாங்கிக்கலை தெரியுமா?'' என்றவள் குபீரென்று சிரித்தாள்.

தாராவும் அம்மாவும் அவளை வியப்பாக பார்த்தார்கள். அப்பா கூட.

''ஆமாடி, தாரா. இந்த மூணு மாசமா மேக்கப் போடறதுக்கு கூட நான் எதுவுமே வாங்கலைன்னா பார்த்துக்கயேன்'' என்றாள்.

தாரா புன்னகைத்தாள்.

தன்னைத் தானே கேலி செய்து கொள்கிற பக்குவம் அக்காவுக்கு இப்பொழுது வந்திருப்பதை உணர்ந்து கொண்டாள்.

மூன்று மாதங்கள் அவளுக்கு கடுமையான பாடங்களை போதித்திருக்கிறது என்பது அவர்களுக்குப் புரிந்தது.

''ஆமாம், இங்க வந்து சொன்னா சங்கடப் படுவீங்க. அதனால தான் நான் எதுவுமே சொல்லிக்கலை. பெரிய பணக்கார வீடு வேணும்னு ஆசைப்பட்டுப் போனேன். ஆனால், அங்கேயும் உழைப்பு இருந்தா தான் மதிப்புன்னு புரிஞ்சுகிட்டேன்'' என்றாள்.

''சரிடி, அதையெல்லாம் விடு, இப்ப நீ சாப்பிடு'' என்றாள் அம்மா.

''சாப்பிடறேன் அம்மா, உனக்கு எப்ப பாரு மத்திய பிரதேசத்தைப் பத்தித் தான் கவலை'' என்றாள்.

உடனே தாரா சிரித்தாள். ''அதான் உத்திரப் பிரதேசம் வேலை செய்ய ஆரம்பிச்சிடுச்சல்ல? அப்புறம் என்ன? மத்திய பிரதேசம் தான் பார்க்க வேண்டிய விஷயம்'' என்றாள்.

எப்பொழுதுமே தாரா அப்படியெல்லாம் அவளைக் கேலி செய்தால்

கோபித்துக் கொள்கிற சகோதரி இப்போது ரசித்துச் சிரித்தாள்,

''ஆமாடி. உனக்கு ஒரு நேரம்.''

''அப்புறம். சொல்லுக்கா. முழு விஷயத்தையும் சொல்லு. கல்யாண ராமனுக்கு எதுக்கு தாங்க் பண்ணனும்?'' என்றாள் தாரா ஆவலுடன்.

''அதான்டி... கல்யாண ராமன் இங்க ஒரு ஏஜென்ஸி எடுத்திருக்காராம். அவங்க ஊருக்கு இங்கிருந்து சப்ளை பண்ற மாதிரி ஏஜென்ஸி. அதுல எங்க வீட்டுக்காரரையும் பார்ட்னரா சேர்த்துக்கிட்டாரு'' என்றாள்.

''இதையெல்லாம் பத்தி அவன் ஒண்ணுமே சொல்லலையே?'' என்றார் கஸ்தூரி.

''அதாம்மா விசேஷம், நல்ல பையன்மா அவரு. எதைப் பத்தியும் யாருக்கிட்டயும் சொல்றது இல்லை. ஆனா மத்தவங்களுக்குத் தெரியாம நிறைய நல்லது செஞ்சுக்கிட்டு இருப்பாரு''.

''அப்படியா? இப்படிமனுஷங்களையெல்லாம் இந்தக் காலத்துல பார்க்கறதே அபூர்வம்டி.'

''தொடர்ந்து கேளு'' என்றாள் மீரா.

''அப்புறம் என்ன ஆச்சு'தெரியுமா?'' என்று ஒரு இடைவெளி விட்டாள்.

அவர்கள் சஸ்பென்ஸ் தாளாதவர்கள் போல அவளை ஆர்வமுடன் பார்த்தார்கள்.

''குட், இப்படித்தான் ஆர்வமா கவனிக்கணும்'' என்று சொல்லி சிரித்தவள் மேலே தொடர்ந்தாள். ''அதுக்கு டென் லாக்ஸ் டெபாசிட் வேணுமாம். ஆனா, அதுக்கு அவரு என்ன சொல்லிட்டாரு... கண்டிப்பா அம்மாகிட்ட அப்பாகிட்ட கேட்க மாட்டேன். நானே அரேஞ்ச் பண்ணிதான் செய்வேன் அப்படின்னாரு''

''ஏண்டி... எங்ககிட்ட வந்து கேட்டிருக்கலாமில்லே?'' என்றார் கஸ்தூரி.

''நான் சொன்னேனே. அதுவும் கூடாதுன்னுட்டாரு உங்க



மாப்பிள்ளை. உங்க அம்மா அப்பாகிட்ட வாங்கினா என்ன? எங்க அம்மா அப்பாகிட்ட வாங்கினா என்ன? அப்படிங்கறாரு'' என்றாள்.

''சரி என்னதான்டி பண்ணினீங்க? ஏன் அப்படி மாப்பிள்ளை நினைக்கறாரு. அவ்வளவு சங்கடப் படற அளவுக்கு என்னதான் நடந்தது?'' என்றார் அம்மா.

''அதை ஏன் கேட்கறே? அவங்க அப்பா ஒரு நாள் அவங்க அம்மாகிட்ட சொன்னதை கேட்டுட்டோம். நான் எதைக் கொண்டு வந்தேன்?எனக்கு யார் என்ன சப்போர்ட் குடுத்தா? பெரிய சாம்ராஜ்யமே வச்சிருக்கேன். ஆனா, இவனுக்குக் கொடுத்தா நாளைக்கு கட்டிக் காப்பாத்துவான்னு என்ன நிச்சயம்? ஒரு சின்ன பெட்டிக் கடையாவது என்கிட்ட பைசா வாங்காம உன் கிட்ட பைசா வாங்காம சொந்த முயற்சியில ரெடி பண்ணச் சொல்லு. அப்புறம் பார்த்துக்கலாம்னு சொல்லிட்டாரு'' என்றாள் மீரா.

''அது ஒரு வகையில நியாயம் தாம்மா.'' என்றார் காளமேகம்.

உடனே தாரா அப்பாவை முறைத்தாள். ''சும்மா இருங்கப்பா. அவர் என்ன - வேணும்னா பண்ணிட்டிருந்தார்? அவருக்கு ஜாப் கிடைக்கல. ஒரு புஷ் கொடுத்திருக்கலாம்ல?'' என்றாள்.

மீரா இப்பொழுது தங்கையினுடைய தலையை கலைத்து விட்டுச் சொன்னாள். ''புஷ் கொடுத்திருக்கலாம்டி. இப்ப அது வேணாம்னு தான் தோணுது. ஏன்னா அவங்க அண்ணா அவரைக் கொண்டே படிச்சு அவரைக் கொண்டே வேலை வாங்கி நல்லா இருக்காராம்.

அதைக் கம்பேர் பண்ணித்தான் இவங்க அப்பா சொல்றாரு. அதனால இவரும் தன்னைக் கொண்டே தான் முன்னேறணும்னு முடிவு பண்ணினாரு'' என்றாள்.

''அதெல்லாம் சரிக்கா, பத்து லட்ச ரூபாய்க்கு என்ன பண்ணினாரு?'' என்று கேட்டாள் தாரா.

''என்ன பண்ணினாரு? நான் ரொம்ப வற்புறுத்தினதுனால என்னோட நகையை வாங்கிகிட்டாரு. கடனாத்தான். அப்படி இப்படின்னு ஒரு ஃபைவ் லாக்ஸ் அவரு புரட்டினாரு. ஃபைவ் லாக்ஸ் கல்யாண ராமன் காரெண்ட்டி போட்டு பாங்குல லோன் வாங்கிக்

கொடுத்தாரு'' என்றாள்.

''அடேயப்பா, இத்தனை நடந்திருக்கு, சொல்லவே இல்லை இந்தப் பையன்'' என்றார் கஸ்தூரி சந்தோஷமாக.

''என்னம்மா இப்படியெல்லாம் திட்றே?'' என்றாள் மீரா ஆச்சரியமாக.

''நீ வேறடி. இப்ப அவன் நம்ம குடும்பத்துல ஒருத்தன் மாதிரி ஆயிட்டான். எல்லா நேரமும் நம்ம வீட்டுலதான். தெரியுமா உனக்கு?'' என்றார்.

''அப்படியா... ரொம்ப சந்தோஷம்மா. எங்க கல்யாணத்தப்பவே அவரு அலைந்தது பார்த்து எனக்கு ரொம்பப் பிடிச்சது'' என்றாள் மீரா.

''சரிக்கா, எப்படியோ உன்னோட ப்ராப்ளம் செட்டில்ட். அப்ப ஷோரும் எல்லாம் எங்க பார்த்திருக்காங்க?'' என்றாள்.

''அதெல்லாம் கல்யாண ராமன் ஏற்கெனவே ஒண்ணு பார்த்து வச்சிருந்தாரு. அங்க ஆரம்பிச்சுக்கறோம். இப்ப எங்க வீட்டுல இவரு வந்து இங்க இருந்து பார்த்துப்பாரு. கல்யாண ராமன் அவங்க ஊருக்குப் போயிட்டு அப்பப்ப வருவாராம். அப்படி ஒரு ஏற்பாடு.''

''அது சரி. இப்ப வீட்டுல எப்படி?'' என்று கேட்டார் அம்மா.

''பெரிசா ஒண்ணும் டிஃபரன்ஸ் இல்லை. அவங்க அப்பாவுக்கு உள்ளூர சந்தோஷம்தான். அவங்க அம்மாகிட்ட சொல்லிட்டிருந்தாரு, 'பரவாயில்லைடி. ரோஷக்காரன்தான். ஜெயிச்சுட்டான்னா பரவாயில்லை' அப்படின்னு சொல்லிட்டிருந்தாரு. ஆனால், அவங்க அண்ணிக்கு இப்பதான் கொஞ்சம் எங்க மேல மரியாதை வந்திருக்கு.''

இப்போது மீரா சொல்வதைக் கேட்டதற்கு பிறகுதான் அவள் எத்தனை விதமான அனுபவங்களைப் பெற்றிருக்கிறாள் என்பது தாராவுக்கும் அம்மா அப்பாவுக்கும் தெரிந்தது.

''பாவம்டி, பிள்ளை இவ்வளவெல்லாம் கஷ்டப்பட்டிருக்கா. ஒரு வார்த்தை கூட நம்ம கிட்ட சொல்லலையே'' என்றார் கஸ்தூரி.

தாரா புன்னகைத்தாள். ''அம்மா, அக்கா முழுக்க முழுக்கக் குடும்பத் தலைவியாயிட்டான்னு அர்த்தம். எப்போ அவ வீட்டுக் கஷ்டத்தை தூக்கிட்டு உங்ககிட்ட புலம்பலையோ அப்ப அவளாலே தாங்க



முடியும் அப்படிங்கற அளவுக்கு அவளுக்கு தன்னம்பிக்கை வந்துடுச்சுன்னுதானே அர்த்தம்?''

''ஆமாண்டி, பாவம்டி புள்ளை!'' என்று அம்மா கன்னத்தை வழித்து எடுத்தார்.

''அதுக்கு இல்லைம்மா, நான் ஏதோ பெரிய இடத்துல சந்தோஷமா இருக்கேன்னு நீங்க நினைச்சிட்டிருக்கீங்க. நானும் பெரிய இடம்னா உண்மையிலே பெரிய இடமா இருக்கும்னு நினைச்சுக்கிட்டு போனேன். பெரிய இடம்தான். ஆனா, அங்கேயும் மதிப்பு கிடைக்கணும்னா அதுக்குன்னு சில வேலை செய்யணும் அப்படிங்கறது எனக்கு புரிஞ்சிடுச்சு.''

''சரிக்கா, அப்ப இந்த மாசம் மேக்கப் திங்க்ஸ் வாங்குவியா?'' என்று கேட்டாள் தாரா கிளுகிளுவென்று சிரித்தபடி.

மீரா, புன்னகைத்தாள். ''இல்லடி. நான் மேக்கப் திங்க்ஸ் எல்லாம் குறைச்சுக்கப் போறேன். ஏன்னா அவரு இன்கம்னு ஓர்அளவுக்கு வீட்டுக்குக் கொடுத்தாதான் மரியாதை இருக்கும். அது போக ஃப்யூச்சரும் பிளான் பண்ணணும். அவரு சொல்லிட்டாரு. அவங்க அப்பாகிட்ட எதுவும் எதிர்பார்க்க மாட்டாராம், எங்களைக்கொண்டே நாங்களே நல்லா வரணும் - அப்படின்னு சொல்லிட்டாரு'' என்றாள்.

''அது சரி. அதுக்கு நீ என்ன பண்ணப் போறே?'' என்றாள் தாரா.

''பின்னே? என் பங்குக்கு ஏதாவது செய்யணுமில்லே? என்னையும் அடுத்த மாசத்துல இருந்து ஆஃபீஸுக்கு வரச் சொல்லிட்டாரு. அங்க உட்கார்ந்து மேற்பார்வை பார்த்துக்கிட்டா இவரு போக வேண்டிய இடங்களுக்கு போயிட்டு வருவாரில்லே?'' என்றாள்.

''அப்படிப் போடு, அக்கா... என்னக்கா இது மூணு மாசத்துல இப்படித் தலைகீழ் மாற்றம்?'' என்று கேலி செய்தாள் தாரா. ஆனால், அந்த கேலியில் மகிழ்ச்சி நிறைந்திருந்தது.

காளமேகம் இத்தனைக்கும் வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை. பெருமிதமாக பார்த்துக் கொண்டிருந்தார்.

''என்னப்பா, நீங்க ஒண்ணுமே சொல்லலை?'' என்று கேட்டாள் தாரா.

''என்னம்மா. சொல்றதுக்கு இருக்கு. அக்கா வாழ்க்கையை கத்துக்கறா. இனிமேல் அக்காவைப் பத்தி கவலைப்படவேண்டியதில்லை. நாம யாருக்காவது நன்றி சொல்லணும்னா கல்யாண ராமனுக்குத்தான் நன்றி சொல்லணும்'' என்றார்.

''ஆமாடி, எப்படி நன்றி சொல்றதுன்னே எனக்குத் தெரியலை'' என்றார் கஸ்தூரி.

''எப்படி? தடபுடலா ஒரு விருந்து வைங்க'' என்றாள் தாரா.

''அது சரி, கல்யாண ராமன் ரொம்ப வசதியானவரோ?'' என்று கேட்டாள் தாரா மீராவிடம்.

''இல்லை இல்லை, அவரும் பிலோ மிடில் கிளாஸ்தானாம். அவரும் பேங்க் லோன் போட்டுத்தான் இதைப் பண்ணியிருக்காராம், அவரும் இப்படித்தான் செல்ஃபா இம்ப்ரூவ் பண்ணணும்; முன்னுக்கு வரணும்னுதான் இங்கே வந்திருக்காராம்.'' என்றாள்.

''பரவாயில்லைம்மா, இரண்டு பேரும் எப்படியோ ஃப்ரெண்ட்ஸ் ஆயிட்டாங்க, இனிமே ரெண்டு பேருமே முன்னேறிடுவாங்க'' என்றார் கஸ்தூரி ஆசையுடன்.

''ஆமாம்மா, ஆனா எங்க பிரச்சினை எப்படி அவருக்குத் தெரிஞ்சது? அதான் எனக்குப் புரியலை'' என்றாள் மீரா.

'' எப்படித் தெரிஞ்சிருக்கும்? நான் தான் ஒரு நாள் புலம்பிட்டிருந்தேன்'' என்றார் கஸ்தூரி.

''என்னம்மா சொன்னே அவருகிட்டே?'' என்றாள் மீரா சற்றே கவலையுடன்.

''ஒண்ணும் சொல்லலை. 'மீரா, கல்யாணத்துக்குப் பிறகு பணக்கார வீட்டுல இருக்கா. சந்தோஷமா இருக்காளோ இல்லையோ? ஒண்ணுமே தெரியலை. எதுவுமே அவ காண்பிச்சுக்க மாட்டேங்கறா. ஆனா மாப்பிள்ளை வேலை இல்லாமத்தான் இருக்காரு. என்னதான் வசதி இருந்தாலும் வேலைன்னு ஒண்ணு இருந்தா நல்லா இருக்கும்ல? அது கொஞ்சம் கவலையாத்தான் இருக்கு' அப்படின்னு சொல்லிட்டு இருந்தேன்'' என்றார்.



மீராவுக்கு புரிந்தது. பெற்றோர்களுக்கு தான் அந்த வீட்டில் மகிழ்ச்சியாக இல்லை என்பது ஓரளவுக்கு புரிந்துதான் இருந்திருக்கிறது என்பது புரிந்தது. ஆனாலும் தன்னிடம் அதைக் காட்டிக் கொள்ளாமல், வருத்தப்பட்டுக் கொண்டு இருந்திருக்கிறார்கள் என்பது புரிந்தது.

''விடுக்கா, அதெல்லாம் எதுக்கு பேசிட்டு. இப்ப ஆக வேண்டிய வேலையைப் பார்ப்போம். உனக்கு பிடிச்ச அயிட்டம் என்ன செய்யலாம் சொல்லு!'' என்றாள்.

''என்னடி எனக்கு பிடிச்ச அயிட்டம்? வத்தக் குழம்பு, அப்பளம்'' என்றாள் மீரா.

''ஓகே... வத்தக் குழம்பு, அப்பளம்....'' என்று மெனு போட்டுக் கொண்டு ''அந்தக் கல்யாண ராமனுக்கு கூட இதெல்லாம் பிடிக்கும்'' என்று அம்மா ஒரு லிஸ்ட் சொல்ல போட்டுக் கொண்டார்கள்.

கல்யாண ராமனுக்கு ஃபோன் செய்து சாப்பாட்டுக்கு வந்து விடு என்று சொல்லி விடலாம் என்று கஸ்தூரி திட்டம் போட்டுக் கொண்டிருக்கையிலே மீரா ஒரு காரியம் செய்தாள்.

''ஏய், தாரா!''என்று அழைத்தாள்.

அடுக்களைக்குப் போக எழுந்த தாரா நின்றாள்.

''எல்லாத்துக்கும் சாரிடி''என்றாள் தழுதழுத்த குரலில்.

''அக்கா!''என்றாள் தாரா திகைத்துப் போய்.

''ஆமாடி, அவமானத்தோட வலி என்னன்னு எனக்கு அந்த வீட்ல முழுக்கப் புரிஞ்சதுடி. நான் உன்னை எப்படியெல்லாம் அவமானப் படுத்தியிருக்கேன், எல்லாத்தையும் பொறுத்துகிட்டியேடி. மன்னிச்...''என்று அவள் முடிப்பதற்குள்ளாக தாரா அவளைக் கட்டிக் கொண்டாள்.

''நீ என் அக்காடி. இப்படியெல்லாம் பேசாதடி.'' என்று தழுதழுத்தாள்.

அம்மாவும் அப்பாவும் நெகிழ்ந்து போய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது ஃபோன் ஒலித்தது.

காளமேகம் ரிசீவரைக் கையில் எடுத்தார்.

''ஹலோ, நாங்க கல்யாண ராமனோட வீட்ல இருந்து பேசறோம். கல்யாண ராமனோட தாத்தா பேசறேன்'' என்று அந்தப் பக்கம் இருந்து குரல் வந்தது.

''சொல்லுங்க சொல்லுங்க'' என்றார் காளமேகம் உற்சாகமாக.

''நீங்க காளமேகமா?'' என்று அந்தப் பக்கம் இருந்து குரல் கேட்டது.

''ஆமாம், ஆமாம்'' என்றார்கள் அவர்கள்.

''சரி, நாங்க ஒரு விஷயமா கோயம்புத்தூர் வரலாம்னு இருக்கோம். உங்க வீட்டுக்கும் வரணும்'' என்று வர வேண்டிய அந்த விஷயத்தைச் சொன்னார்கள்.

''அப்படியா, ரொம்ப சந்தோஷம். வாங்க வாங்க'' என்று முகம் முழுக்க உற்சாகம் பொங்கச் சொன்ன காளமேகம் ரிசீவரை வைத்து விட்டு குடும்பத்தினரை பார்த்தார்.

''என்ன விஷயங்க?'' என்றார் கஸ்தூரி.

விஷயத்தைச் சொன்னார் காளமேகம்.

தாரா திகைத்துப் போய் பார்த்தாள்.

## 7

''எனக்கு அப்பவே தெரியும்!'' என்று கலகலவென்று சிரித்துக் கொண்டிருந்தார் ராஜம்.

''இந்தப் பயலுக்கு இந்தப் பொண்ணை பிடிச்சிருக்கு அப்படின்னு எனக்குத் தோணுச்சு'' என்றார் ராஜம்.

கஸ்தூரி வியப்பாக ராஜத்தை பார்த்தார்.

''ஆமாங்க, எனக்குத் தோணுச்சு. ஆனா நம்ம வீட்டு அய்யா தான் குடி வரும் போதே கண்டிஷன் போட்டாராமே! பிள்ளைங்களெல்லாம் இருக்கு - பார்த்து நடந்துக்கணும் - அப்படின்னு'' என்றார்.



''சரி, சரி, இந்தக் கேசரி நல்லா இருக்கான்னு பாருங்க'' என்று கிளறி எடுத்துக் கொண்டே பேச்சை மாற்றினார் கஸ்தூரி.

காளமேகம் வந்து எட்டிப் பார்த்தார். ''என்னப்பா எல்லாம் ரெடி ஆயிடுச்சா?'' என்றார்.

''என்னத்தை ரெடி ஆகறது? எல்லாம் பார்த்த பொண்ணுதானே? புதுசாவா மாப்பிள்ளை வந்து பார்க்கப் போறாரு'' என்று மறுபடியும் கேலியில் இறங்கினார் ராஜம்.

''அது சரிம்மா. அவரு புதுசு இல்லை. ஆனா அவங்க ஊர்ல இருந்து வர்றாங்களே அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி அவங்களெல்லாம் புதுசில்லே?'' என்றார் காளமேகம்.

''ஆமா, ஆமா, ஆனால், ஒரு நாள்கூட இந்தக் கல்யாண ராமன் தாராவைப் பிடிச்சிருக்குன்னோ, தாரா மேல தனக்கு இன்ட்ரஸ்ட் இருக்குன்னோ சொல்லவேயில்லை தெரியுமா?'' என்றார் ராஜம்.

''அதாம்மா, எனக்கும் ஆச்சரியமா இருக்கு'' என்றாள் மீரா.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கையிலேயே தாரா எட்டிப் பார்த்தாள்.

''அம்மா, எனக்கு இப்பக் கல்யாணம் வேண்டாம்மா'' என்றாள்.

கஸ்தூரி ''இப்பக் கல்யாணம் வேண்டாமா? இந்த மாப்பிள்ளை வேண்டாமா?'' என்றார்.

''மாப்பிள்ளையெல்லாம் உங்க இஷ்டம். நான் இந்த மாப்பிள்ளை வேணும் அந்த மாப்பிள்ளை வேணும் அப்படியெல்லாம் சொல்ல மாட்டேன்'' என்றாள்.

''ஏன்?'' என்றார் கஸ்தூரி.

''போம்மா, இப்பத்தான் மீராக்கா போய் ஆறு மாசம்தான் ஆச்சு, நானும் போயிட்டேன்னா நீங்க ரொம்ப லோன்லியா ஃபீல் பண்ணுவீங்க. இன்னும் ஒரு வருஷம் போகட்டும்மா'' என்றாள்.

''அது பார்த்துக்கலாம்டி, இன்னைக்கேவா முடிவு செய்யப் போறோம், அவங்க வரட்டும், பார்க்கட்டும், உன்னைப் பிடிக்கட்டும்.மேற்கொண்டு மற்ற விஷயங்கள் எல்லாம் பேசுவோம். பேசினதுக்கு அப்புறம் முடிவு செய்வோம்டி'' என்றார் கஸ்தூரி.

''இப்படித்தான் சொல்லுவீங்க. அப்புறம் அவங்க ரொம்ப அவசரப்படுத்தினாங்கடி. என்ன பண்றதுடின்னுவீங்க. இப்படியே கேள்வி மேல கேள்வி போட்டு என் லைஃபை கேள்விக்குறியா ஆக்கிடாதீங்க!'' என்றாள் தாரா.

''ஏண்டி, கல்யாண.ராமன் மாதிரி ஒரு மாப்பிள்ளை கிடைச்சா உன் லைஃப் எதுக்குடி கேள்விக்குறி ஆகுது?'' என்றாள் மீரா.

''பேசுவடி, உங்களுக்குப் பார்ட்னர் இல்லே? அதனால பேசுவே!'' என்றாள்.

''விஷயம் என்னன்னா கல்யாண ராமன் உங்க குடும்பத்தை பத்தி அடிக்கடி தாத்தா பாட்டிக்கிட்ட சொல்லுவாராம். அப்படித் தாரா பத்தி மீராவைப் பத்தி யெல்லாம் சொல்லியிருப்பாரு போல இருக்கு. அதைக் கேட்டு கேட்டு அவங்க தாத்தா, பாட்டிக்கு தாராவை ரொம்ப பிடிச்சுப் போச்சாம். இதுதான் நடந்தது'' என்றார் ராஜம்.

''ஓஹோ!''

''கல்யாண ராமனுக்கே அவங்க புறப்படறதுக்கு முன்னாடிதான் சொல்லியிருக்காங்க.''

''அதெல்லாம் கல்யாண ராமன் லேசுப் பட்ட ஆள் இல்லை. சத்தம் இல்லாம காய் நகர்த்தி இருப்பாரு'' என்றாள் மீரா.

''இருந்தாலும் இருக்கும். அவனை நம்ப முடியாது'' என்றார் ராஜம்.

அவர்கள் வீட்டிலே குடியிருக்கிற மற்ற குடித்தனக்காரர்கள் கூட அவ்வப்போது வந்து கேலி செய்து விட்டுப் போனார்கள். ''வீடு பிடிக்கிறேன் வீடு பிடிக்கிறேன்னு கடைசியில வீட்டுக்காரப் பொண்ணையே பிடிச்சிட்டாரு'' என்றார்கள் கேலி போல.

காளமேகம் புன்னகைத்தார்.

''இல்லை, இல்லை, அந்தப் பையன் ரொம்ப நல்ல பையன். டீசன்டான பையன். அப்படியெல்லாம் அவன் ஐடியா பண்ணியிருக்க மாட்டான்'' என்றார்.

''ஏங்க மாப்பிள்ளைன்னு வந்து பார்க்கப் போறாங்க. அவன் இவன்னு பேசிட்டிருக்கீங்க'' என்றாள் ராஜம்.



இப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கிற நேரத்திற்குள்ளாகவே கல்யாண ராமன் கிருஷ்ண பிரசாத்துடன் ஒரு காரில் வந்து இறங்கினான்.

இன்னொரு காரிலே கல்யாண ராமனுடைய தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா நால்வரும் வந்து இறங்கினார்கள்.

தாரா எளிமையாக அலங்கரித்துக்கொண்டு அவர்களுக்கு வணக்கம் சொன்னாள். செய்து வைத்திருந்த பலகாரங்களை அவர்களுக்குப் பரிமாறினார்கள்.

கல்யாண ராமனின் தாத்தா நன்றாக நெற்றியில் மூன்று பட்டையாக விபூதி வைத்து அதன் நடுப்பட்டையில் நடுவிலே குங்குமம் வைத்துக் கொண்டு களையாக இருந்தார்.

''கல்யாண ராமன் இந்த வீட்டுல குடியிருந்துட்டு பொண்ணு கேட்கறானேன்னு நினைச்சுக்காதீங்க. அவன் உங்க குடும்பத்தைப் பத்தி சொன்னதிலிருந்து உங்க குடும்பம் பிடிச்சுப் போய் நாங்களும் இப்படி யோசிச்சோம்'' என்றார் தாத்தா.

கலசலிங்கம் என்பது அவருடைய பெயர். பாட்டி காமாட்சி.

அம்மாவும், அப்பாவும் கொஞ்சம் அமைதியாகவே இருந்தார்கள்.

தாத்தாவும் பாட்டியும் தான் கலகலப்பாக பேசினார்கள். ''நீங்க பார்த்திருப்பீங்க. பையன் ஆறேழு மாசம் இங்க தான் இருக்கான். அவனுடைய குணமெல்லாம் எப்படின்னு பார்த்திருப்பீங்க. ஜாதகம் எல்லாம் நாங்க பார்த்துட்டோம்'' என்றார்.

''ஜாதகம் பார்த்துட்டீங்களா?'' என்று ஆச்சரியமாகப் பார்க்க, மீராவும், கிருஷ்ண பிரசாத்தும் குறும்பாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

எல்லோருக்கும் இது மீராவினுடைய வேலை என்பது புரிந்தது.

''ஓஹோ, நீதான் இங்கிருந்து ஜாதகத்தைக் கொடுத்தியா?''

''இல்லையே! நான் இங்கிருந்து ஜாதகம் எடுக்கவேயில்லை. நான் ஒரு ஜெராக்ஸ் எடுத்துட்டேன்'' என்றாள் அவள்.

எல்லாரும் சிரித்தார்கள்.

''ஏன்னா எங்க ஊரு பக்கம் எல்லாம், ஜாதகத்துக்கு முக்கியத்துவம் கொடுப்போம். எனக்கு பெரிசா நம்பிக்கை இல்லை. பிள்ளை மெயினா குணம் நல்லா இருந்தா சரி. இருந்தாலும், பார்க்கணும்னு பார்த்துட்டோம். பொருத்தம் எல்லாம் நல்லாத்தான் இருக்கு'' என்றார்.

கல்யாண ராமன் வாயே திறக்கவில்லை.

தாரா அவனைப் பார்த்தாள். லேசான புன்னகையுடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு வெளியே பார்க்க ஆரம்பித்தான்.

கிருஷ்ண பிரசாத் தான் ''இல்லைங்க. ரொம்ப நல்லவரா இருக்கறாரு. இப்படி ஒரு பையன் இந்தக் காலத்துல கிடைக்கறது கஷ்டம். அதனால தான் நம்ம குடும்பத்துக்கே ஏற்பாடு பண்ணிடலாம்னு நானும் மீராவும் யோசிச்சோம். கல்யாண ராமனுக்கே சொல்லலை. அவனுக்கே தெரியாமதான் நாங்க அவங்க பெரியவங்க கிட்ட சொன்னோம்'' என்றான் கிருஷ்ண பிரசாத்.

தாரா தன் தாயை அழைத்துக் கொண்டு போய் பிடிவாதமாக சொல்லி விட்டாள்.

''அம்மா, எல்லாருக்கும் பிடிச்சிருந்தாலும் சரிம்மா, கல்யாணம் உடனடியாங்கறதுக்கு நான் ஒத்துக்கமாட்டேன். அட்லீஸ்ட் ஆறு ஏழு மாசமாவது ஆகணும்'' என்றாள்.

கஸ்தூரி காளமேகத்திடம் முணுமுணுத்தாள். இரண்டு பேருமாக வெளியே வந்து, ''இல்லை... இப்பதான் பெரிய பொண்ணு கல்யாணம் முடிச்சோம். அதுவும் இல்லாம சின்னப் பொண்ணு கொஞ்சநாள் எங்களோட இருக்கணும்னு பிரியப்படறா.''

''அதனால என்னம்மா ஏழெட்டு மாசம் கழித்து கல்யாணம் வச்சுக்கலாம். ஒண்ணும் பிரச்சினை இல்லை'' என்றார் கலசலிங்கம்.

எல்லாக் கேள்விகளுக்கும் அவர் தயாராக விடை வைத்திருந்ததைப் பார்த்தவுடன் அவர்களுக்கு செய்வதற்கு ஒன்றும் இல்லாமல் போய்விட்டது.

''நீங்க எல்லாம் வேண்ணா இன்னைக்கு இங்க ரூம்லயே தங்கிட்டு...'' என்று இழுத்தார் காளமேகம்.



''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். மேல்மாடியில அந்த ஒரு ரூமே போதும் எங்களுக்கு. நாங்க இன்னிக்கு சாயங்காலம் கிளம்பிடுவோம்'' என்றார்.

''முடிவாயிருச்சுன்னாத்தான் கை நனைக்கணும். நீங்க ஒரு ரெண்டு நாளு பேசி முடிவு பண்ணி சொல்லுங்க'' என்றபடி விடைபெற்றுக் கொண்டார்கள்.

கிருஷ்ண பிரசாத்தும், கல்யாண ராமனும் அவர்களுக்கு நல்ல ஹோட்டலில் இருந்து உணவு வாங்கிக் கொடுத்து முறையாக உபசரித்து அனுப்பி வைத்தார்கள்.

''பயங்கரமான ஆளுய்யா நீ'' என்று சிரித்தான் கிருஷ்ண பிரசாத்.

''ரொம்ப தாங்க்ஸ் கிருஷ்ணா'' என்றான் கல்யாண ராமன்.

''வெறும் தாங்க்ஸ் எல்லாம் இல்லை. ஒழுங்கா கவனிச்சுடணும். பெரிய அளவுல கவனிச்சுடணும்'' என்றான்.

''கண்டிப்பா. உனக்குப் பிடிச்சிருக்கான்னு தாராகிட்ட கேட்டிருப்பேன். ஆனா, குடி வந்தப்பவே தாராவோட அப்பா கண்டிஷன் மாதிரி சொன்னாரு. எங்க வீட்டுல ரெண்டு பொண்ணுங்க இருக்கு. இந்த போர்ஷன்லயும் நிறைய பொண்ணுங்க இருக்காங்க. பார்த்து நடந்துக்கணும்' அப்படின்னு.

அதனால தான் எப்படிக் கேட்கறதுன்னு ரொம்ப யோசிச்சிட்டு இருந்தேன்'' என்றான்.

''அவ்வளவுக்கும் மீறி நீ ஒரு ஐடியா பண்ணிட்டியா இல்லையா?'' என்றான் கிருஷ்ண பிரசாத்

''என்னப்பா பண்றது! நீயே சொல்லு. தாரா மாதிரி ஒரு பொண்ணு - ஆறு மாசமா பார்த்துட்டு இந்தப் பொண்ணு நம்ம வீட்டுக்கு வந்தா நல்லாயிருக்குமேன்னு நினைக்காம இருக்க முடியுமா?'' என்றான்.

''அது என்னமோ நிஜம்தாம்பா. மீராவைப் பார்த்த உடனே எனக்குப் பிடிச்சது. அது மாதிரிதான்'' என்றான் கிருஷ்ண பிரசாத்.

''சரிப்பா, இன்னும் ஆறு மாசம் டைம் இருக்கு. அதுக்குள்ளேயாவது

கொஞ்சம் ரொமான்ஸ் பண்ணு'' என்றான் கிருஷ்ண பிரசாத்.

கல்யாண ராமன் பெருமூச்சு விட்டான். ''எங்கே?தாரா அதுக்கெல்லாம் இடங்கொடுக்குமான்னு தெரியலை. ரொம்ப கிட்டக்கயும் போயிர முடியாதுன்னுதான் நினைக்கிறேன்.''

கிருஷ்ணா சிரித்தான். ''அதாம்பா சுகம். சொல்லவே முடியாது. இந்தப் பொண்ணுங்க எப்ப சான்ஸ் கொடுக்கும்னே தெரியாது. அதனால வாட்ச் பண்ணிட்டே இரு. இதுதாம்பா ரொம்ப அருமையான நேரம். கிட்டத்தட்ட முடிவாகி, கல்யாணம் வரைக்கும் இருக்கிற நேரம் இருக்கு பார்த்தியா, அந்த நேரத்துல பார்க்கறதுல பேசறதுல இருக்கற சுகம், அதே தனிதான்'' என்றான்.

கல்யாண ராமன் சிரித்தான்.

''அனுபவம் பேசுதாக்கும்?''

''நீ வேறப்பா. எங்கேப்பா அனுபவம்? அப்ப நான் ரொம்ப டென்ஷன்ல இருந்தேன். மீராவைக் கேளு. கல்யாணம் ஆன புதுசுல பாவம் நான் ரொம்ப கஷ்டப் படுத்திட்டேன்.''

''ஏன்?'' என்றான் கல்யாண ராமன்.

''நாமளே செட்டில் ஆகலை. நமக்கே வேலை இல்லை. கல்யாணத்தை வேற பண்ணி வச்சாங்க. ஒரு ஹோட்டலுக்கு கூட்டிட்டுப் போங்க, ஒரு சினிமாவுக்கு கூட்டிட்டுப் போங்க, அவ்வளவு வேண்டாம் செலவே இல்லாம ஒரு கோயிலுக்கு கூட்டிட்டுப் போங்கன்னா கூட அங்க போய் இரண்டு முழம் பூ வாங்கிக் கொடுக்கறதுக்கு கூட என்னோட காசு இல்லை. ரொம்ப வருத்தமா இருந்தேன். நீ வந்தே. ரொம்ப தாங்க்ஸ்பா'' என்றான்.

கல்யாண ராமன் ''அதை விடுப்பா. நானும் ஒரு நம்பிக்கையான ஆளு இங்கே வேணும்னு நினைச்சேன். நீ கிடைச்சே. ரெண்டு பேருக்கும் உதவிதான். நான் ஒண்ணும் உனக்கு பெரிசா உதவி செஞ்சுடலை. நீதான் எனக்கு உதவி செஞ்சிருக்கிறே'' என்று அவன் அதை அலட்சியப்படுத்தினான்.

இந்த மாதிரிப் பண்புகள் தான் கல்யாண ராமனுக்கும் கிருஷ்ண



பிரசாத்துக்கும் இடையே ஒரு நட்பை ஏற்படுத்தி இருக்கிறது.

''சரி, விடு. நண்பர்களா இருந்து இன்றைக்கு சகலபாடிகள் ஆயிட்டோம்!'' என்றான் கிருஷ்ணா.

''ஆமாம்பா, ஆனா, நாம சகலபாடிகள்ங்கறதை மறந்துடுவோம். நண்பர்கள், பார்ட்னர்ஸ்ங்கறதை மட்டும் நினைவு வச்சுக்குவோம். எல்லா விஷயங்களும் நாம உட்கார்ந்து பேசலாம், விவாதம் பண்ணிக்கலாம். வியாபாரம் வேற. நட்பு வேற என்பதை புரிஞ்சுக்கலாம்'' என்றான் கல்யாண ராமன்.

''அதென்னவோ நிஜம்தாம்பா. என்னால உனக்கு எந்தப் பிரச்சினையும் வராது'' என்றான் கிருஷ்ண பிரசாத்.

''ரொம்பத் தாங்க்ஸ்ப்பா'' என்று மகிழ்ச்சியுடன் தன்னுடைய அறைக்குப் போனான் கல்யாண ராமன்.

கிருஷ்ணாவினால் பிரச்சினைகள் வராது என்பது ஒருபக்கம். வேறு ஒரு விதமாக பிரச்சினை காத்துக் கொண்டிருந்தது.

போய் காலை நீட்டி ஓய்வெடுக்கலாம் என்று நினைத்துக் கொண்டு அவன் படுக்கை அறைக்குப் போகும் போது 'உள்ளே வரலாமா?' என்று குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தான்.

காளமேகமும் கஸ்தூரியும் நின்று கொண்டிருந்தார்கள்.

வெறுமனே நின்று கொண்டிருக்கவில்லை. முகத்தில் கவலையை அப்பிக் கொண்டு நின்று கொண்டிருந்தார்கள்.

''வாங்க, அங்கிள்'' என்றான் அவன் பரபரப்பாக.

''இல்லை தம்பி! உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்'' என்றார்கள்.

அவன் காது கொடுத்து கேட்க ஆரம்பித்தான்.

கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல ஒரு பெரிய கதை அவர்களிடத்திலே இருந்து கிளம்பியது.

## 8

அழகான சிறிய கிராமம்!

போகும் வழியெல்லாம் பச்சைப் பசேலென்று இருந்தது. வழக்கம் இல்லாத வழக்கமாக தாராவையும் கூட அழைத்துக் கொண்டு போனார்கள்.

முதலில் அவள் வரத் தயங்கினாலும், சிறிய கிராமம், அழகான ஊர். அங்கே உறவினர்கள் வீட்டில் தங்கிக் கொள்ளலாம் என்றெல்லாம் கல்யாண ராமன் தரப்பில் இருந்து சொல்லப்பட்டதால் அவளும் பெற்றோர்களுடன் கிளம்பினாள்.

ஒரு பெரிய வேன் எடுத்துக் கொண்டு அதிலே பயணம் செய்தார்கள்.

மணமகனின் வீட்டிற்குத் திருமணத்திற்கு முன்பாக பெண் வீட்டார் ஒரு முறை போவது என்ற வழக்கத்திற்காக இப்பொழுது அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள்.

தாரா, தானும் வருவதற்கு ஒத்துக் கொண்டதற்கு ஒரு காரணம் இருந்தது.

கல்யாண ராமனைத் தெரியும். பழகியிருக்கிறோம். ஆனால், உண்மையில் அவர்கள் எளிமையான குடும்பம் தானா. திடீரென்று ஏஜென்ஸி என்கிறார்கள். ஐந்து லட்சம், பத்து லட்சம் என்று மீராவின் கணவருக்கு வங்கி லோன் ஏற்பாடு செய்து கொடுக்கிறான்.

அதனால், அவளுக்குள்ளே லேசான சில கேள்விகள் இருந்தன. அதோடு எல்லோரும் விருப்பப்பட்டதாலும் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தாள்.

உறவினர்களைத் தவிர அந்தக் குழுவிலே ராஜமும் இடம் பெற்றிருந்தாள். கிட்டத்தட்ட ராஜத்தை தன்னுடைய சகோதரியைப் போல எண்ண ஆரம்பித்து விட்டான் கல்யாண ராமன்.



மீராவும் கிருஷ்ண பிரசாத்தும் பின்புற இருக்கையில் அமர்ந்துகொள்ள பெற்றோர்கள் எல்லாம் முன்னாலே அமர்ந்து கொண்டார்கள்.

சற்று நேரம் சென்றதற்குப் பிறகு "கல்யாண் தனியா இருக்கான். நான் போய் அவன் கூட உட்கார்ந்துக்கறேன்" என்று கிருஷ்ண பிரசாத் கல்யாண ராமனுக்கு துணையாகப் போய் உட்கார்ந்து கொண்டான்.

ராஜத்தின் கணவர், மீராவின் பெற்றோர்கள் தவிர ஒன்றிரண்டு நெருங்கிய உறவினர்கள் என்று அந்தக் குழு பயணித்துக் கொண்டிருந்தது.

கோயம்புத்தூரிலிருந்து கிட்டத்தட்ட பத்து மணி நேரம் பயணம் செய்ய வேண்டியிருந்தது.

தஞ்சாவூருக்கு அருகிலே ஒரு கிராமம். முந்தைய அளவுக்கு இப்போது விவசாயம் இல்லை. இருந்தாலும் எங்க ஊரு பசுமையான ஊருதான் என்று சொல்லிக் கொண்டு வந்தான் கல்யாண ராமன்.

தஞ்சாவூரில் இருந்து அரை மணி நேரப் பயணத்தில் அந்தக் கிராமம் இருந்தது.

மாலையில் போய்ச் சேர்ந்தவுடன் அவர்களையெல்லாம் ஒரு வீட்டிலே தங்க வைத்தார்கள். அந்த வீடே தோட்டத்து வீடாக இருந்தது.

தொட்டிக் கட்டு வீடாகவும் இருந்தது.

எல்லோருக்கும் எல்லா விதமான வசதிகளும் இருக்கிறதா என்று பார்த்துவிட்டுவந்த கல்யாண ராமன் மீராவிடம் பேசிக் கொண்டிருந்த தாராவிடம் வந்தான்.

மீரா புரிந்து கொண்டவள் போல கொஞ்சம் நகர்ந்து நின்று கொண்டாள்.

"தாரா, இப்ப ஒண்ணும் தெரியாது. இருட்டு நேரம். காலையில ஊரைச் சுத்திப் பார்க்கலாம். எங்க ஊர் ரொம்ப அழகா இருக்கும்.

ஒவ்வொரு நூறடிக்கும் குளமெல்லாம் இங்க இருக்கு.

தஞ்சாவூரைப் பொறுத்த வரைக்கும் தடுக்கி விழுந்தா குளம் இல்லைன்னா கோயில்ன்னு சொல்லுவாங்க. அது மாதிரி எங்க ஊர்லையும் நிறைய கோவில்கள் இருக்கு'' என்றான் கல்யாண ராமன்.

அவள் வெட்கத்துடன் தலையாட்டினாள்.

''அப்புறம் இன்னொரு விஷயம்'' என்றான்,

''ம்...'' என்றாள் தாரா.

''இதுவரைக்கும் நேரடியான வாய்ப்பு கிடைக்கலை. ஆனா, எல்லாத்தையும் ஃபிக்ஸ் பண்றதுக்கு முன்னாடி ஒரு தட்வையாவது உங்கிட்ட கேட்டுடணும்னு நினைச்சேன். அதனால கேட்கறேன். இந்தத் திருமண ஏற்பாடுகளை மேற்கொண்டு புரொசீட் பண்ணலாமில்லே?'' என்றான்.

அவள் தரையைப் பார்த்துக் கொண்டு சொன்னாள். ''நான்தான் சொல்லிட்டேனே. எங்க அம்மா அப்பா பார்த்து எது செஞ்சாலும் சரி என்று''

கல்யாண ராமன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். ''இருந்தாலும் இப்படி ஒரு நெத்தியடி அடிச்சிருக்க வேண்டாம்'' என்றான்.

அவள் சற்றே அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்க்க ''என்னதான் பொறுப்பான பொண்ணு - அம்மா அப்பாவுக்கு அடங்கின பொண்ணு - அப்படின்னு இருந்தாக்கூட ஒரு ஓரத்துல கொஞ்சமே கொஞ்சம் உங்களை பிடிச்சிருக்குன்னு சொல்லக் கூடாதா?'' என்றான்.

அவள் மறுபடியும் தரையைப் பார்த்துக் கொண்டு ''அதை நான் சொல்லணுமாக்கும். அதை எங்க பேரண்ட்ஸ் கிட்ட சொல்லலைன்னா இவ்வளவு புரொசீட் பண்ணியிருப்பாங்களா?'' என்றாள்.

''இத பாருடா மறுபடியும்!'' என்றான் அவன் சலிப்புடன்.

அவள் மறுபடியும் அவனைக் கேள்விக் குறியாக பார்த்தாள்.

''உங்க பேரண்ட்ஸ் கிட்ட சொல்லியிருப்பே.சொல்லாம அவங்க புரொசீட் பண்ணியிருக்க மாட்டாங்க. இல்லாட்டி இந்த அளவுக்கு வருவாங்களா? இருந்தாலும் எனக்கும் காது குளிர ஒரு வார்த்தை



சொல்லக் கூடாதா? தேவியார் பார்த்து கருணை வைக்கக் கூடாதா?'' என்றான்.

அவள் மெல்லப் புன்னகைத்தாள். ''பிடிச்சுத் தான் இருக்கு'' என்றாள்.

''போனாப் போகுது. இந்தாடா வச்சுக்கங்கற மாதிரி பிடிச்சுத் தான் இருக்கா?'' என்றான் அவன் லேசான கடுப்புடன்.

அவளும் சற்று கடுப்புடன் நிமிர்ந்து பார்த்தாள். ''பின்னே என்ன? டூயட் பாடணுமா?'' என்றாள்.

''ஹை! அதுக்கெல்லாம் வாய்ப்பு இருக்கா? சரின்னு சொல்லு. இங்க நிறைய வாழைத்தோப்பு இருக்கு. கரும்புக் காடு இருக்கு போயிடலாம். நீ பாடவேண்டாம்ப்பா. ஒரு டேப்ரெக்கார்டர் வச்சுடலாம். அது கத்திட்டு கிடக்கும். தெரிஞ்ச மாதிரி கையைக் காலை ஆட்டலாம்'' என்றான்.

அவள் சிரித்து விட்டாள். ''இப்படி யெல்லாம் மேதாவிலாசத்தைக் காட்டணுமாக்கும்?'' என்றாள்.

''இது இதைத்தான் எதிர்பார்த்தேன்!''

''ஹலோ, நான் இப்ப உங்களை மட்டம் தட்டினேன்'', என்றாள் தாரா.

இப்பொழுதுதான் மெதுவாக பேச ஆரம்பிக்கிறாள் என்பது புரிய,

''உனக்கு விஷயம் தெரியலை'' என்றான்.

''என்ன விஷயம்?''.

''உரிமைக் காரங்க மட்டம் தட்டினா அதுல ஒரு சுகம் இருக்கு. அது தெரியுமா?'' என்றான்.

அவள் இதை எதிர்பார்க்கவில்லை என்பதால் ''அய்யே, போதுமே!'' என்றாள்.

''போதவே போதாது. இப்பதான் ஆரம்பம். ஏதோ ரெண்டு வார்த்தை முத்து மாதிரி உதிர்த்தியே அதுவே போதும். என்ன சொல்லு? காலையில போயிடலாமா? அஞ்சு மணிக்கு வந்துடறேன். எல்லாருக்கும் சுடுக்கா கொடுத்திட்டு போயிட்டு வந்துடலாமா? ஒரு

சின்ன டூயட் பாடிட்டு வந்தர்லாமா?'' என்றான் கல்யாண ராமன் ஆர்வமாக.

''இதோ வந்துட்டேம்மா'' என்று அவள் யாரோ பின்னால் இருப்பது போல குரல் கொடுக்கவும் அவன் வெடுக்கென்று திரும்பிப் பார்த்தான்.

யாரும் வந்திருக்க வில்லை.

''போடாங்கறே! சரி, சரி'' என்று அவன் சிரித்துக் கொண்டே நகர்ந்தான்.

''இதோ பாருங்க'' என்றாள் அவள்.

திரும்பி வந்தான்.

''நான் ஒண்ணும் போடா வாடான்னெல்லாம் சொல்லலை. போங்கன்னுதான் சொன்னேன்.''

அவன் சிரித்துக் கொண்டே நகர்ந்தான்.

சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்த மீராவுக்கு லேசாக காதில் விழுந்தது. புன்னகைத்துக் கொண்டு திரும்பி வந்தாள்.

தாரா இப்பொழுது மீராவை முறைத்தாள்.

''பெரிய இவ! டிப்ளமேட்டிக் மீட்டிங். ஏற்பாடு செஞ்சு கொடுக்கறியாக்கும்''.

''இல்லடி பாவம், கல்யாண் உங்கிட்ட பேசணும்னு ரொம்ப தவியா தவிக்கிறாரு. நீ ஆனா புரிஞ்சுக்காம!'' என்றாள்.

''எல்லாம் புரியுது. அம்மா, அப்பா ஏதாவது நினைச்சுட்டாங்கன்னா'' என்றாள்.

''ஐய்யோ ஐய்யோ, அதெல்லாம் அந்தக் காலம்டி. இந்தக் காலமெல்லாம் அப்படி இல்லை. பெத்தவங்களே நம்பர் வாங்கிக் கொடுத்துடறாங்க'' என்று மீரா அறிவுரை சொன்னாள்.

''போதும், போதும், நீ அதுக்கு மேலே!'' என்று தாரா நகர்ந்து விட்டாள்.

மறுநாள் கல்யாண ராமன் வீட்டில் அவர்களுக்கு விருந்து.



ஆனால், அவர்கள் வீட்டிற்கு நேரடியாக தாரா செல்லவில்லை.

அவள் இந்த வீட்டிலேயே இருந்து கொள்ள அவளுக்கு மட்டும் உணவு அனுப்பி வைக்கப்பட்டது.

கஸ்தூரியும் காளமேகமும் விசாரித்த வரையில் அவர்கள் மிகவும் சாதாரண குடும்பம் என்பது போலத்தான் தெரிந்தது.

பெரிய பணக்காரர்களுக்கான தோற்றமோ வசதியோ அந்த வீட்டில் இருக்க வில்லை. மிகவும் எளிமையாகத்தான் இருந்தது.

அவர்கள் இப்படி விசாரிக்க வேண்டியதற்கான காரணமும் இருந்தது. தாரா அதைத்தான் நிபந்தனையாக போட்டிருந்தாள். பெரிய பணக்கார வீடாக இருக்கக் கூடாது என்றாள்.

''ஏன்?'' என்று அப்பா கேட்டதற்கு சொன்னாள்.

''ஒண்ணு, மீரா பட்ட அனுபவம் எனக்கு வேண்டாம். இன்னொண்ணு அப்பா பெரிய பணக்காரங்களா போனோம்னா அவங்களுக்கு நாம கை கட்டிட்டு நிற்கணும். நீங்க யாருக்கும் அப்படியெல்லாம் பணிஞ்சு நிற்க வேண்டாம். நமக்கு சமமானவங்களா இருந்தா போதும்!'' என்றாள் தாரா.

''சரிம்மா!'' என்று அப்பா அப்போதைக்கு உறுதி சொல்லியிருந்தார்.

மறுநாளே அவர்கள் கிளம்பி விட்டார்கள்.

வரும்பொழுது கல்யாண ராமன் அவர்களோடு வரவில்லை.

இரண்டு நாட்கள் தங்கி விட்டு வருவதாக சொல்லி விட்டான்.

''பரவாயில்லை, நீ எதிர்பார்த்த மாதிரி குடும்பம்தான்'' என்றார் அப்பா தாராவிடம்.

கஸ்தூரிதான் ''போங்க. பெரிய பொண்ணை நல்ல வசதியான இடத்துல கொடுத்துட்டு. சின்னவளை சாதாரண இடத்துல கொடுக்கணுமாக்கும்'' என்று முணுமுணுத்தாள்.

அப்பொழுது காளமேகத்தின் கண்களில் ஏதோ செய்தி இருந்தாற்போலத் தோன்றியது.

கஸ்தூரிக்கு அன்றைக்கு அது புரியவில்லை. ஓரிரு நாட்களில்

புரிந்தது.

தாரா மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தாள்.

தான் எதிர்பார்த்தது போலவே இந்த இரண்டு நிபந்தனைகளையும் கல்யாணராமன் ஏற்றுக் கொண்டான் என்பது அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது.

''இந்தக் காலத்துல யாரும்மா சொத்து வேண்டாம்னு சொல்லுவாங்க? அந்தத் தம்பி சொல்லுதே'' என்று பாராட்டிக் கொண்டார் காளமேகம்.

''ஆமாம்பா, சொத்துன்னு நினைச்சாங்கன்னா எனக்கு மதிப்பு இல்லை. என்னை எனக்காக ஏத்துக்கணும். அதுதான் என்னுடைய விருப்பம்'' என்றாள்.

''சரிம்மா, உன்னை உனக்காகவே ஏத்துக்கறாங்க. போதுமா?'' என்றார் காளமேகம்.

''சரிம்மா! தம்பி போன் பண்ணுச்சுன்னா பேசு. இந்தக் காலத்துல அதெல்லாம் சகஜமா போச்சு'' என்று சொல்லி விட்டு அவர் கடைக்குப் போனார்.

அன்றிரவு ஒன்பது மணி வாக்கில் கல்யாண ராமனிடம் இருந்து போன் வந்தது.

''எப்படியோ ஏமாத்திட்டே?'' என்றான் அவன்.

''நாணா? என்ன ஏமாத்திட்டேன்'' என்றாள் அவள் கவலையுடன்.

''எங்கூட வந்து டூயட் பாடுறேன்னு சொன்னே. நீ வரவே இல்லை'' என்றான் அவன்.

''அந்த வாழைத் தோப்புல சேறுஞ் சகதியிலயும் காலை வச்சுட்டு டூயட் பாடணுமாக்கும்?'' என்றாள் அவள்.

''அதைப் பத்தி நமக்கென்ன? நாம தான் உலகத்தையே மறந்துடுவோமில்லே'' என்றான் கல்யாண ராமன்.

''ஐயா, உலகம் மறந்தவரே! பிசினஸ் இருக்கு இங்கே. எப்ப வருவீங்க கோயம்புத்தூருக்கு?'' என்றாள்.

அவன் மகிழ்ச்சியாகச் சிரித்தான்.

''அப்பாடா, இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சம் புரியுது'', என்றான்.

''என்ன புரியுது?'' என்றாள்.

''இல்லை, என்னைப் பார்க்கணும்னு தோணுதுல்லே. அதானே கேட்டே?'' என்றான்.

''ஐயே! அதுக்கு ஒண்ணும் கேட்கலை. தண்ணி பிடிச்சு வைக்கறதுக்குக் கேட்டேன்'' என்றாள் அவள்.

''தண்ணி பிடிச்சு வைக்கிறேன்னு அப்படின்னு ஆளையே பிடிச்சிட்டே?'' என்றான் அவன்.

''இதெல்லாம் இங்க வேண்டாம். நாங்களா வந்து உங்களை பிடிச்சோம். சத்தி வளைச்சு கிருஷ்ண பிரசாத் அத்தானை பிடிச்சு கண்ணி வச்சு...!'' என்று இழுத்தாள்.

''ஹேய், ஹேய். கண்ணி எல்லாம் வேண்டாம். நான் என்ன வேடனா? நீ என்ன வேட்டையாடற பொருளா? நீ என் ஆருயிர் கண்ணம்மா. நீ என்னில் ஒரு பாதி'' என்றான்.

''அது சரி, இப்படி வசனம் வேற ஆரம்பிச்சிடுவீங்களா? நான் உங்கள்ள ரொம்ப நல்ல பையன்னு நினைச்சுட்டேன்'' என்றாள் அவள்.

''ஊர் உலகத்துக்கெல்லாம் நல்ல பையன் தான். உங்கிட்ட பேசும்பொழுது மட்டும் அது வேற மாதிரி இருக்குமில்லம்மா. இங்கயும் சாமியாராட்டம் பேச முடியுமா?'' என்றான் அவன்.

''இன்னும் லைசென்ஸ் கிடைக்கலை. ஞாபகம் இருக்கட்டும்.'' என்றவள்,

''சரி, சரி, நாளைக்குப் பேசலாம். ரொம்ப நேரம் பேசினா அம்மா, அப்பா ஏதாவது நினைத்துக் கொள்ளப்போறாங்க'' என்று தனது வெட்கத்தை மறைத்துக் கொண்டு ''ஃபோனை வைக்கட்டுமா?'' என்றாள்.

''நீ ஆனா நல்லா ஏமாத்திட்டே!'' என்றான் அவன்.

''சும்மா இதையே சொல்லாதீங்க'' என்றாள் அவள்.

''சரி கல்யாணத்துக்கு அப்புறமாவது அப்படிப் பாடிடலாமா?''

என்றான்.

''பார்க்கலாம்'' என்று ஃபோனை வைத்தாள். ஆனால், அப்பொழுது அவளுக்குத் தெரிய வில்லை உண்மையில் ஏமாற்றப் பட்டிருப்பது தான் தான் என்று.

## 9

''ஆரத்தி. ஆரத்தி எடுக்கறதுக்கு எல்லாம் தயாரா?'' என்று யாரோ குரல் கொடுத்தார்கள்.

இரண்டு பெரிய பஸ்களில் எல்லாரும் வந்திருந்தார்கள்.

தாராவுக்கும் கல்யாண ராமனுக்கும் திருமணம் முடிந்து விட்டது.

அசமந்தம் என்று மீராவால் எப்பொழுதோ குறிப்பிடப்பட்ட கல்யாண ராமன் வெகு ஸ்மார்ட்டாக உடை உடுத்திக் கொண்டான்.

ஏனோ இந்த திருமணம் முடிவானதற்குப் பிறகு அவனிடத்திலே ஒரு பெரிய மாற்றம் இருப்பது போல தாரா உணர்ந்தாள்.

அவள் மட்டும் அல்ல. மற்ற எல்லோருமே தாராவுடனான திருமணப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு அவன் உற்சாகமாகி இருப்பதாக எண்ணிக் கொண்டார்கள்.

திருமணம் நடுத்தர அளவிலே நடைபெற்றது. திருமண செலவு குறைவாகத்தான் இருக்க வேண்டும் என்று கல்யாண ராமனும் சொல்லி விட்டான்.

. தாராவும் அதிலே பிடிவாதமாக நின்றாள். அதனால் ஒரு கோவிலிலே வைத்து திருமணத்தை முடித்துக் கொண்டு மாலையிலே ஒரு ரிஸப்ஷன் மட்டும் வைத்திருந்தார்கள்.

ரிஸப்ஷனுக்கே ஓரளவுக்கு கூட்டம் வந்திருந்தது.

அதெல்லாம் முடித்ததற்குப் பிறகு, அடுத்த நாள் பெண்ணையும் மாப்பிள்ளையையும் மாப்பிள்ளையின் ஊருக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள்.



கல்யாண ராமன், தடபுடலாக இரண்டு பஸ்களில் ஆட்களை அழைத்து வந்திருந்தான்.

உறவினர்கள் எல்லோரும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

பெண்ணும் மாப்பிள்ளையும் ஆரத்திக்காக இப்பொழுது நின்று கொண்டிருக்கிறார்கள்.

ஆரத்தி எடுத்தார்கள்.

தாரா சுற்றிலும் கண்ணை ஓட்டினாள்.

அன்றைக்குப் பார்த்த சிறிய வீடு வேறாக இருந்தது. இன்றைக்குப் பார்க்கிற வீடு மிகவும் பெரியதாக இருக்கிறது.

''இதுவா உங்க வீடு?'' என்றாள்.

''ஆமாம்,'' என்றான் அவனும்.

''இவ்வளவு பெரிசா இருக்கு!'' என்றாள்.

''தாத்தா காலத்து வீடு! தலைமுறையா அப்படியே வந்துட்டு இருக்கு!'' என்றான் அவன்.

வீட்டுக்குள்ளே அழைத்துப் போனார்கள்.

வெளியே பார்ப்பதற்கு ஓட்டு வீடாக இருந்தாலும், ஒவ்வொரு அறையும் எல்லா வசதிகளோடும் இருந்ததை கோயம்புத்தூர்க்காரர்கள் கவனித்து ''பரவாயில்லை, நல்ல இடம் போலத்தான் இருக்கு'' என்று பேசிக் கொண்டார்கள்.

வந்திருந்தவர்கள் அத்தனை பேரும் தங்குவதற்கு அங்கேயே போதுமான இடம் இருந்தது. அந்த இரண்டு பக்கத்துக் கூடம் முழுவதிலும் சேர்கள் நிரம்பி இருந்தது. எல்லோரும் அமர்ந்து கொண்டார்கள்.

இரண்டு கட்டு வீடாக மட்டும் இல்லாமல் மாடியும் அதே போல இருந்தது.

தாராவிற்கும் கல்யாண ராமனுக்கும் மாடியிலே அறை.

முதல் கட்டின் பின் பகுதியிலே இருந்து படி சென்றது.

''வா, நம்ம ரூம் மேல இருக்கு'' என்று அழைத்துக் கொண்டு போனான் கல்யாண ராமன்.

''போய் கொஞ்ச நேரத்துல தயாராகி வந்துடணும். சாப்பாடு எல்லாருக்கும் ரெடியாக இருக்கு'' என்று யாரோ குரல் கொடுத்தார்கள்.

கூட்டம் நிறைய இருந்ததால் குரல்கள் மட்டும் அங்கங்கே இருந்து வந்து கொண்டிருந்தன.

கல்யாண ராமனுக்கும் தனக்கும் தனிமை கிடைத்த வுடனே தாரா கேட்டாள். ''இவ்வளவு பெரிய வீடு இருக்குன்னு நீங்க சொல்லவே இல்லையே?'' என்றாள்.

''இது என்னம்மா வம்பாப் போச்சு. கிராமங்களிலெல்லாம் இப்படித்தான் இருக்கும். சாதாரண குடும்பங்களிலே இருக்கும்'' என்றான் அவன்.

அவள் அரை மனதாகத் தலையாட்டினாள்.

''ரொம்பப் போட்டுத் தலையை உடைச்சுக்காதே. சீக்கிரம் ஃபிரஷ் ஆயிட்டு வா. நான் அந்த பாத்ரூம்ல போய் ரெடி பண்ணிட்டு வரேன்'' என்று எதிரிலே இருந்த அறைக்கு ஓடி விட்டான் கல்யாண ராமன்.

ஏனோ அவன் மழுப்பலாக பதில் சொல்வது போலவும், தன்னிடம் இருந்து தப்பிப்பதற்கே முயற்சிப்பது போலவும் அவளுக்கு தோன்றியது.

ஏதோ வித்தியாசமாக இருக்கிறது என்பது தாராவுக்கு புரிந்தது. ஆனால், எதைக் கேட்பது எப்படிக் கேட்பது என்பதுதான் அவளுக்கு புரியவில்லை.

மறுபடியும் காலை உணவு, உற்றார் உறவினர்களிடம் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது என்று பொழுது ஓடியது.

அன்று ஒரு நாள் மட்டும் அவர்கள் வீட்டில் இருப்பார்களாம்.

அடுத்த நாள் அவர்கள் கிளம்பி விடுவார்களாம்.

பெண்ணும் மாப்பிள்ளையும் இங்கே பத்து நாள் இருந்து விட்டுத்தான் கோயம்புத்தூருக்குப் போவார்களாம். அதுவரையிலும் கிருஷ்ணா பிரசாத் - மீரா கம்பெனியைக் கவனித்துக் காள்வார்களாம். அப்படியே கோயம்புத்தூர் போனாலும் அங்கே ஒரு பத்து நாள் இருந்து விட்டு மீண்டும் தாரா இங்கே வந்து விடுவாளாம். இதெல்லாம்



பஸ்ஸில் வரும் பொழுது கல்யாண ராமன் துண்டு துண்டாக அவளிடத்திலே சொன்ன விஷயங்கள்.

பகல் உணவிற்குப் பிறகு எல்லாரும் ஒரு பக்கமாக அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

தாரா ''எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு!'' என்றாள்.

''சரி, இதோ அந்த ரூம்ல போய் படுத்துக்கயேன்'' என்றார் கல்யாண ராமனின் அம்மா.

''சரி!'' என்று தாரா உள்ளே போய் படுத்துக் கொண்டாள்.

கல்யாண ராமன் ஊருக்குள் இருந்து வந்த நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தான்.

தாராவுக்கு உறக்கம் வரவில்லை. சோர்வாகவும் இருந்தது.

மெல்ல கண் மூடிப் படுத்துக் கொண்டாள்.

கூடத்தில் யாரோ தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

''கல்யாண ராமன் இந்தப் பொண்ணை ரொம்ப பிடிச்சுப் போய் கல்யாணம் பண்ணிட்டு வந்திருக்கானாம். அவங்களுக்கும் வசதி இருக்காம். ஆனா, 'இவங்க அளவுக்கு இல்லையாம்'' என்றாள் ஒரு பெண்மணி.

''ஆமா பின்னே, இங்க நூறு ஏக்கரா அங்க நூறு ஏக்கரான்னு கிடக்குது. அது மாதிரியெல்லாம் எதிர்பார்க்க முடியுமா?''

''ஆனா, பொண்ணு ரொம்ப அமைதியா இருக்கா, ரொம்ப அடக்கமா இருக்கா'' என்றார்கள். தாரா திடுக்கிட்டுப் போய் விழித்தாள்.

'இங்கே நூறு ஏக்கர். அங்கே நூறு ஏக்கரா?' அதிர்ந்து போனாள்.

'வசதியுள்ள மாப்பிள்ளை வேண்டாம் என்று அத்தனை முறை சொல்லியும் அம்மாவும் அப்பாவும் ஏமாந்து விட்டார்களா? இல்லை கல்யாண ராமன் ஏமாற்றி விட்டாரா?' என்று அவள் மனசுக்குள் பெரியதொரு வருத்தம் தோன்றியது.

ஒருவேளை சொத்து நிறைய இருக்கிறது என்று அம்மாவும், அப்பாவும் ஏமாந்து விட்டார்களோ என்று எண்ணிக் கொண்டாள்.

முகம் வாடி விட்டது.

நண்பர்களையெல்லாம் அனுப்பி விட்டு சற்று நேரம் கழித்து அறைக்குள் எட்டிப் பார்த்தான் கல்யாண ராமன். பிறகு அவன் தாயிடம் கேட்டான்... ''ஏம்மா... என்ன ஆச்சு?''.

''இல்லைப்பா, அவளுக்கு ஏதோ டயர்டா இருக்குன்னா. சரி போய் ரெஸ்ட் எடுன்னு படுக்கச் சொன்னேன்'' என்றாள் அம்மா.

''சரி, அப்ப நான் வேண்ணா அப்பா கிட்ட பேசிக்கிட்டு...'' என்று அவன் நகர்வதற்கு முன்பாக தாரா சட்டென்று எழுந்தாள்.

எல்லா படுக்கையறையிலும் நகரங்களில் இருக்கிறது போல அட்டாச்ட் பாத்ரூம் இருந்தது. பார்வைக்கு வெளியிலே தொட்டிக் கட்டு வீடாக இருந்தாலும், உள்ளே எல்லா நவீன வசதிகளும் இருந்ததைப் பார்த்து ஏற்கனவே வியந்து இருந்தாள்.

அவசர அவசரமாகப் போய் முகம் கழுவிக் கொண்டு உடை திருத்திக் கொண்டு வந்தாள்.

''என்ன ரெஸ்டா?'' என்றான் அவன்.

அதற்குள் அம்மா நகர்ந்தாள். ''ஏம்மா தாரா! வாம்மா காஃபி கொடுத்து அனுப்பறேன். பலகாரம் கொடுத்தனுப்பறேன்'' என்றார்.

தாரா போய் காஃபியையும் பலகாரத்தையும் வாங்கிக் கொண்டு வந்தாள்.

நேரத்தைப் பார்த்தாள். நாலரை மணி ஆகியிருந்தது. ''இவ்வளவு நேரம் படுத்து விட்டோமா'' என்று லேசாக அவளுக்கு வெட்கம் கூட தோன்றியது.

காஃபியைக் கொண்டு வந்து கணவனிடம் கொடுத்து விட்டு எதிரிலே இருந்து நாற்காலியில் அமர்ந்தாள்.

''என்ன ரொம்ப மூட் அவுட் ஆயிட்டியா?'' என்றான் அவன். ''ஏன்? அம்மா, அப்பாவெல்லாம் நாளைக்குப் போறாங்களேன்னா? நமக்குத்தான் கோயம்புத்தூர்ல ஆஃபீஸ் இருக்கில்லே. எப்ப வேண்ணா இங்க இருக்கலாம். அங்க இருக்கலாம். ஒண்ணும் பிரச்சினை இல்லை'' என்றான் அவன்.



தாரா அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்து விட்டு தலையைக் குனிந்து கொண்டாள்.

''என்ன தாரா? நீ வேண்ணா கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோ, அப்புறம்.. சரியா?'' என்று குறும்பாக சிரித்தான்.

அந்தக் குறும்பை ரசிக்கிற மனநிலையில் அவள் இல்லை.

அவன் அதை பெற்றோர்களை பிரிவதற்கான கவலை என்று எடுத்துக் கொண்டான்.

''ஏன் அங்க ஒண்ணும் சிரிப்பைக் காணோம்?'' என்றான் அவன்.

''இல்லை... டயர்டா இருக்கு'' என்றாள்.

''நிறைய உறவுக்காரங்க. ரொம்ப தொந்தரவு. ஏம்பா?'' என்றான்.

''இல்லை, இல்லை, அப்படியில்லை'' என்றாள்.

இதே மாதிரி ஒற்றைச் சொற்களாகவே அவள் அவர்கள் தனிமை நேரம் வரைக்கும் பதில் சொல்வதை லேசாக புருவத்தைத் தூக்கிக் கொண்டு பார்த்தான் கல்யாணராமன்.

அவனுக்குப் புரிந்தது - தாராவின் மனதிலே ஏதோ இருக்கிறது. இன்றைக்குப் பெரிய அளவிலே ஒரு புயல் கிளம்பப் போகிறது என்பது அவனுக்கு புரிந்தது.

அவனும் தயாராகத்தான் அவர்கள் தனியறைக்கு அன்றிரவு வந்தான்.

தாரா கோபத்துடன் ஜன்னலுக்கு வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

கண்ணுக்கு எட்டின வரை வயல் வெளி தெரிந்தது.

பார்ப்பதற்கு அந்த நேரத்தில் மிகவும் ரம்மியமாக இருந்தது. இன்னும் ஓரிரண்டு நாட்களில் அநேகமாக பௌர்ணமி போல தெரிந்தது. அதனால் அந்தக் காட்சியை அவள் மிகவும் ரசித்துத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தன் மன வருத்தத்தையும் மீறி அவள் ரசனை குணம் மேலோங்கி இருந்தது.

கணவன் வருகிற அரவம் கேட்டுகூட அவள் திரும்பிப்

பார்க்கவில்லை. கோபமாகவே இருந்தாள்.

கல்யாண ராமன் அறைக் கதவைச் சாத்தி விட்டு மெல்ல அவள் அருகிலே வந்தான். அவள் தோளைத் தொட்டான். திரும்பவில்லை தாரா.

''ஏய், என்ன ஆச்சு?'' என்றான் அவன்.

அவள் திரும்பி அவனைப் பார்த்தாள். ''நீங்க என்னை ஏமாத்திட்டீங்களோ?'' என்றாள். ''என்ன ஏமாத்தினேன்?'' என்றான் அவன்.

''உங்களுக்கு ஒண்ணும் வசதி இல்லைங்கற மாதிரிதானே சொன்னீங்க!'' என்றாள்.

''நான் யாருகிட்ட எப்ப சொன்னேன்?'' என்றான் அவன்.

அதானே? அவன் யாரிடமும் அப்படிச் சொல்லவில்லை என்பது அவளுக்குப் புரிந்தது. ஆனால், ''நான் உங்ககிட்ட எனக்கு கல்யாணத்துக்கு இரண்டு நிபந்தனை இருக்கு. முதல் நிபந்தனை மாப்பிள்ளை நடுத்தரக் குடும்பத்தை விட கீழே இருக்கணும் அப்படின்னு'' என்றாள்.

''பொதுவா சொன்னே: நீங்க அப்படித்தானான்னு எங்கிட்ட கேட்டியா?''

முகத்தில் கோபம் பொங்கியது.

''மிஸ்டர் கல்யாண ராமன்...!''

''எங்கே... எங்கே... இன்னொரு தடவை சொல்லு.'' என்றான் அவன் ஆசையாக.

அவள் அவன் கையை விலக்கி விட்டு ''இதோ பாருங்க, நீங்க எதையோ எங்கிட்ட மறைச்சிருக்கீங்க'' என்றாள்.

''எதை மறைச்சேன்னு சொல்லும்மா'' என்றான் அவன்.

''நூறு ஏக்கர் நிலம் இங்க இருக்கு, அங்க இருக்கு, எங்கெங்கோ இருக்குன்னு இவங்க எல்லாம் பேசிகிட்டாங்க. ஆனா, போன தடவை வந்தப்ப ஒரு சின்ன வீடு தான் காண்பிச்சீங்க'' என்றாள்.

''என்னடா இது வம்பாப் போச்சு. அப்ப ஊருக்குள்ள வர்றதுக்கு



எதுக்கு தோட்டத்து வீட்டைக் காட்டுவானேன்னு அந்த வீட்டுல இருந்தோம். நான் ஏதோ திட்டமிட்டு உங்கிட்ட மறைக்கலை தாரா'' என்றான்.

அவளுக்குப் பேசுவதற்கு எதுவும் இருக்கவில்லை.

''நீயேன் கவலைப் படறே? இதுல எல்லாத்துலயும் உனக்கும் சரி பங்கு இருக்கு தெரியுமா?'' என்றான்.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதுனால எனக்கு பங்கு வந்துடுச்சுங்கறீங்களா?'' என்றாள்.

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். பிறகு ''உண்மை என்ன தெரியுமா? நீ என்னைக் கல்யாணம் பண்ணியிருக்கலைன்னாலும் இந்த சொத்துல பெரும் பங்கு உனக்கு இருக்கு. சரி பாதி இருக்கு'' என்றான் அவன்.

அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள். ''என்னங்க சொல்றீங்க?'' என்றாள்.

''ஆமா தாரா, உனக்குத் தெரியாத ஒரு கதை இருக்கு!'' என்று அவன் அந்தக் கதையை விவரிக்க ஆரம்பித்தான்.

பெரிய படம் போல, ஒரு பெரிய மர்ம நாவல் போல விரிந்த அந்தக் கதையை அவள் முழுவதுமாகக் கேட்டு விட்டு திகைத்துப் போய் நின்றாள்.

## 10

அப்படி ஒரு அமைதி நிலவியது அங்கே.

தன்னைச். சுற்றிலும் அமர்ந்திருப்பவர்களைப் பார்த்தாள் தாரா.

கலசலிங்கம் தாத்தா, காமாட்சிப் பாட்டி, கல்யாண ராமனின் பெற்றோர்கள் காசிநாத், மரகதம், அவளுடைய பெற்றோர்கள் கஸ்தூரி, கானமேகம் இவர்கள் தவிர மீராவும்

அங்கே இருந்தாள்.

கல்யாண ராமன் ஒரு பார்வையாளரைப் போல ஒதுங்கி அமர்ந்திருந்தான். ஆனால், எல்லோருடைய பார்வையும் அவள் மீது தான் நிலைத்திருந்தது.

ஒரு வாழ்க்கைக் கதை முழுவதையும், அவளிடத்திலே ஒரு மணி நேரத்திலே சொல்லி முடித்து விட்டார்கள்.

தான் எதிர்பார்த்ததற்கு மேலாக கல்யாண ராமன் வசதி படைத்தவன் என்ற எண்ணம் அவளுக்குள் அதிர்ச்சி ஏற்படுத்தியது என்றால், அவன் அதற்கு சொன்ன விளக்கம் இன்னும் கொஞ்சம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த சொத்தில் உனக்கும் பங்குண்டு என்று அவன் சொல்லியிருந்தான்.

தன்னைத் திருமணம் செய்து கொண்டதால் தனக்கும் சரிபாதி என்று நினைத்து பதில் சொன்னாள். ஆனால், அவன் அதற்கும் மேலாக, 'திருமணம் இல்லாவிட்டாலும், உனக்கும் பங்கு உண்டு' என்று சொன்னவுடனேயே அவள் அதிர்ச்சியாகிப் போனாள்.

கல்யாண ராமன் ''இது நாம மட்டும் பேச வேண்டிய விஷயம் இல்லை. வா!'' என்று அவள் கையைப் பிடித்து வெளியே இழுத்துக் கொண்டு வந்தான்.

அதே முதல் மாடியிலேயே இன்னொரு அறையில் விச்ராந்தியாக அமர்ந்திருந்த தாத்தா, பாட்டியிடம் போனான்.

''தாத்தா, பாட்டி, உங்க பேத்தி விளக்கம் கேட்கறா. சொல்றதுக்கு நேரம் வந்தாச்சு. எல்லாரும் வருவீங்களாம்'' என்றான்.

கலசலிங்கம் காமாட்சியைத் திரும்பிப் பார்த்தார்.

''சரி, சொல்லிடுவோம்'' என்று எழுந்தார்.

அதே அறைக்கு கல்யாண ராமனின் பெற்றோர்களும், தாராவின் பெற்றோர்களும் வரவழைக்கப்பட்டார்கள்.

வேலை ஆளிடம் சொல்லி கொஞ்ச நேரத்திற்கு மேலே யாரும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆணையிடப்பட்டது.



கஸ்தூரியும், காளமேகமும் அதிர்ச்சியோடு வருவார்கள் என்று நினைத்தாள். அவர்களும் எங்களுக்கும் இது தெரியும் என்பது போலத்தான் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

தாரா எல்லோரையும் மலங்க மலங்கப் பார்த்தாள். அப்பொழுது மரகதமே ஆரம்பித்தார்.

''அம்மா, நானே சொல்லிடறேன்'' என்று ஆரம்பிக்க ''நீ இரு மரகதம். நீ எமோஷனல் ஆயிடுவே'' என்று ஆரம்பித்தார் காசிநாத்.

''தாரா, இது இப்பத்தைய கதை இல்லம்மா. நீ பொறக்கறதுக்கு முன்னாடி நடந்த கதை. ஏன்... இந்தக் கதை பொறந்ததுனாலதான் நீயே பொறந்தே.''

என்று காசிநாத் ஆரம்பித்தார்.

தாரா தயாரானாள். முழுவதுமாகத் தயாரானாள்.

'எது வந்தாலும் சரி. தாங்கிக் கொள்ளுவோம்' என்பது போல்த் தயாரானாள்.

ஏற்கனவே ஒரு சில உண்மைகள் அவளுக்கும் தெரிந்திருந்தன. எல்லாமும் சேர்ந்து இப்பொழுது விடுகதைக்கு விடை கிடைக்கப்போகிறது என்ற எண்ணத்தோடு அவள் கேட்கத் தயாரானாள்.

கதை சொல்லப்பட்டது.

இந்த ஊரும் அல்லாமல், கோயம்புத்தூரும் அல்லாமல் ஈரோட்டிலே தான் அந்தக் கதை நடந்திருந்தது.

எப்போதே அம்மா தனக்கு நெருங்கிய உறவினர்கள் ஈரோட்டில் இருப்பதாக சொல்லியிருப்பது இப்போது நினைவுக்கு வந்தது. காசிநாத் கதையைத் தொடங்கினார்.

''அம்மா, உங்கம்மா கஸ்தூரி, இந்த மரகதம் இருக்காளே இவளோட அண்ணன் கார்த்திகேயன் - இவங்களுக்கெல்லாம் ஒரு சம்மந்தம் உண்டு. எப்படின்னா கஸ்தூரிக்கு ஒண்ணு விட்ட சிஸ்டர். ஒண்ணு விட்ட சிஸ்டர்னா அவங்க அம்மாவும் இவங்க அம்மாவும் ரொம்ப நெருங்கின சொந்தக் காரங்க.நீங்க கூட சின்ன வயசுல ஈரோட்டுக்குப்

போயிருக்கணும். லீவுக்குப் போயிருப்பீங்க'' என்றார்.

தாரா ''ஆமாம்'' என்பது போல தலையாட்டினாள். ''அங்கதாம்மா இந்தக் கதை' நடந்துச்சு.இங்கதாம்மா மனச திடப்படுத்திக்கணும். உங்க அம்மா கஸ்தூரி இல்லை'' என்றார். தாரா அதிர்ந்து போய் அம்மாவைப் பார்த்தாள்.

கஸ்தூரியின் கண்கள் கலங்கின. பல்லைக் கடித்துக் கொண்டு ஆமாம் என்பது போல் தலையாட்டினாள்.

''தப்பா சொல்லிட்டேம்மா. கண்டிப்பா உங்க அம்மா கஸ்தூரிதான். ஆனால் வளர்த்த தாய். பெத்த தாய்க்கு மேலதான் உன்னை வளர்த்திருக்காங்க'' என்றார் காசிநாத்.

தாரா அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''உங்க அம்மா பேரு தெய்வானை. ரொம்ப அருமையான பொண்ணு. அப்படிப் பொண்ணு கிடைச்சும் கூட வச்சு வாழறதுக்கு வழியில்லாம போனான் என் மச்சான் கார்த்திகேயன்'' என்றார்.

மெதுவாக கதை தாராவுக்கு பிடிபடத் தொடங்கியது. ''அதுக்காக உங்க அம்மாவை தப்பா நினைச்சுராதம்மா. கழுத்துல தாலி வாங்கிட்டுத் தான் தொட விடுவேன்னு சொல்லிட்டா. இரண்டு பேரும் காதலிச்சிருக்காங்க. அந்தக் காலத்துல காதல்னா தெரியும்ல இப்ப மாதிரி எல்லாம் பதிவுத் திருமணம், அரசாங்க ஆதரவு இதெல்லாம் கிடையாது.

அவன் ஈரோட்டுக்கு வியாபார விஷயமா போனான். அங்க போய் ஒரு வருஷம் இருந்தான். அடுத்த தெருவுல இவங்க குடியிருந்திருக்காங்க. எப்படியோ தெய்வானைக்கும் கார்த்திகேயனுக்கும் பழக்கம் ஆயிடுச்சு. ஈரோட்டுல இருக்குற அம்மன் கோயில்ல வச்சுதான் தாலி கட்டியிருக்கான். தாலி கட்டி அங்க தனிக் குடித்தனம் வச்சிருக்கான்.

ஒரு ஆறு மாசம் போயிருக்கும். அதுக்குள்ள எங்க மாமனார் இருக்காரே கலசலிங்கம். இவங்க இங்கே வர வச்சுட்டாங்க. அந்த சமயத்துல எங்க மாமனாருக்கு ரொம்ப உடம்பு சரியில்லை. நீ கல்யாணம் பண்ணித்தான் ஆகணும் அப்படின்னு சொல்லிட்டாரு.''



''.......................................''

''என் மச்சான் பையன் தனக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆகி மனைவி இருக்கிறதை சொல்லலை. சொல்லியிருந்தான்னா கொஞ்ச நாளைக்கு ரகளை நடந்திருக்கும். அப்புறம் சரியாப்போயிருக்கும். கோழைப்பய. அப்பாவுக்குப் பயந்தவன். சொல்லாமல் விட்டு இங்க ஒரு கல்யாணத்தைப் பண்ணிகிட்டான். அதுக்கப்புறம் ஈரோட்டுப் பக்கம் போகவே இல்லை. அப்புறம் என்ன பண்றது. நீ வயித்துல உண்டாயாச்சு. அப்ப கஸ்தூரி தான் தெய்வானையை கூட்டிட்டுப் போய் தன்னோட பொறுப்புல வச்சிருந்து வீட்டுக்காரர் கிட்ட பேசி தங்களுக்கு பொறந்த பொண்ணு மாதிரி நாடகம் பண்ணி கூட்டிக்கிட்டு போயிட்டாங்க.

அதுக்கப்புறம் உன்னைப் பிரிஞ்சு இருக்க முடியாத தெய்வானை மனசுல அதை இதை நினைச்சு உடம்பு சரியில்லாம - போய் சேர்ந்துட்டா. நீ இரண்டு வயசுக் குழந்தையா இருக்கும்போதே போய் சேர்ந்துட்டா. அதெல்லாம் இப்பொழுது இவங்க சொல்லித்தான் தெரியும்.''

அந்த நேரத்தில் அவருக்குமே குரல் தழுதழுக்கவும், காமாட்சி பாட்டி தொடர்ந்தார்.

''பாவிப்பய, எங்ககிட்ட சொல்லியிருக்கலாம்மா. ஆனா கல்யாணத்தைப் பண்ணினானே ஒழிய அந்தப் பொண்ணுக்கு அவன் ஒண்ணும் துரோகம் பண்ணலை. நல்லாத்தான் வச்சிருந்தான்.

இருந்தாலும், எப்பவும் தனியா உட்கார்ந்து யோசிச்சுட்டே இருப்பான். மனசுக்குள்ளே வச்சு அழுத்தம் தாங்காம ஐம்பது வயசுக்குள்ள போய் சேர்ந்துட்டான். அதுக்கப்புறம் ஒரு இரண்டு வருஷத்துக்குள்ள அவன் பொண்டாட்டி போய் சேர்ந்துட்டா.

உயிர் போறதுக்கு ஒரு நாலு மணி நேரத்துக்கு முன்னாடிதான் அப்பாகிட்ட நடந்த கதையெல்லாம் சொன்னான்.அப்புறம் ஒரு வாக்குறுதி வாங்கிட்டான். 'என் மகளை இந்தக் குடும்பத்தில கொண்டு வந்து சேர்த்துடணும். முடிஞ்சா மரகதத்துப் பையனுக்கு கல்யாணம் பண்ணி வைங்க' அப்படின்னு வாக்குறுதி வாங்கிட்டான்'' என்றார்.

தாராவுக்கு இப்பொழுது துண்டு துண்டாக இருந்த விஷயங்கள் புரிந்தது.

''என்னடா... அதிர்ச்சியா இருக்குதா?'' என்றார் காளமேகம்.

இதுவரை அமைதியாக இருந்த தாரா தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

சட்டென்று எழுந்த கல்யாண ராமன் அவளைத் தோளில் சாய்த்துக் கொண்டான்.

''என்ன ஆச்சு இப்போ? உனக்கு ஒரு குறையும் இல்லை. அம்மா அப்பா நல்லாத்தான் வளர்த்தாங்க உன்னை. ஏண்டா, நாங்க உனக்கு ஏதாவது குறை வச்சோமாடா?'' என்றார் காளமேகம்.

''இல்லை!'' என்று அவள் தலையாட்டினாள்.

தலையாட்டி விட்டு ''அந்த அதிர்ஷ்டத்தை நினைச்சுத்தான் அழறேன். இதை எங்கிட்ட சொல்லாமலே இருந்திருக்கலாம். நீங்களே என்னோட அம்மா அப்பாவா இருந்திருக்கலாம்'' என்றாள் அவள்.

''அது எப்படிம்மா முடியும்? சொல்லத்தானேடா வேணும்?'' என்றார் கலசலிங்கம்.

''கார்த்திகேயனோட சொந்தக்கார பையன்தான் கல்யாணராமன்னு தெரியாதும்மா! ஏன்... இந்தக் கல்யாணம் முடிவாகிற வரைக்கும் கூட தெரியாது. கல்யாணம் முடிவானதுக்குப் பிறகும் தெரியாது. கல்யாணத்துக்கு இரண்டு நாளைக்கு முன்னாடி தான் தம்பி எல்லா விவரத்தையும் சொன்னாரு.''

''நாம இங்க மாப்பிள்ளை வீட்டுக்குன்னு பார்க்க வந்தோமில்லே. அதுக்கு முன்னாடிதான் எல்லா விவரத்தையும் சொன்னாரு. சொல்லிட்டு இந்த மாதிரி உங்க மக வசதியான இடம்னா கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு எங்கிட்ட சொல்லியிருக்கா. அதனால இப்போதைக்கு நாங்க ரொம்ப சாதாரண குடும்பம் மாதிரி நாடகம் போடறோம், நீங்களும் அதுக்கு ஒத்துழைக்கணும்னு கேட்டுக்கிட்டாரு.உரிய இடத்துக்கு வந்து சேரணும். உனக்கு உள்ள மரியாதை கிடைக்கணும்னா நாங்க அதுக்கு ஒத்துக்கத்தானேம்மா



வேணும்'' என்றார் காளமேகம்.

''உனக்கு கிடைக்க வேண்டிய நியாயம் கிடைக்கணும் இல்லடா!'' என்றார் கஸ்தூரி.

தேம்பித் தேம்பி அழுதபடி அப்பாவின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

கல்யாண ராமன் கொஞ்சம் ஒதுங்கிக் கொண்டான்.

அவள் அழட்டும் என்று எல்லோரும் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். பிறகு கலசலிங்கம் சொன்னார் ''நீ எதுக்கும்மா கவலைப்படறே? சுத்திப் பாரு. இத்தனை பேரு உனக்காக இருக்கோம். ம்... நீ ஏன் கவலைப்படறே?'' என்றார்.

பிறகு தொடர்ந்து ''இந்த ஒரு காலத்துக்காகத்தாம்மா நான் காத்துக்கிட்டிருந்தேன். கல்யாண ராமன் கிட்ட சொல்லி இந்த ஏற்பாடெல்லாம் பண்ணி காத்துக்கிட்டு இருந்தேன் - ஒரு பக்குவமான நேரம் வரணுங்கறதுக்காக!'' என்றார்.

மெல்லக் கண்களைத் துடைத்தவள் ''இதுல கொஞ்சம் மட்டும் எனக்குத் தெரியும்!'' என்றாள். எல்லோரும் திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தார்கள்.

''கொஞ்சம்னா?'' என்றார் அப்பா.

''எனக்கு இரண்டு வருஷத்துக்கு முன்னாடியே நான் நீங்க பெத்த பொண்ணு இல்லைங்கறது மட்டும் எனக்குத் தெரியும்'' என்றாள்.

இப்போது திடுக்கிட்டுப் போவது காளமேகத்தின் முறையாயிற்று. ''ஆமாம்பா. ஒரு நாள் மீராக்கா வெளிய போய் இருந்தா. நான் வீட்டுல இல்லைன்னு நினைச்சுட்டு நீங்களும் அம்மாவும் பேசிட்டு இருந்தீங்க. நான் தூங்கி எழுந்திருச்சு வரும்பொழுது 'நாம பெத்ததை விட, வளர்த்ததுதான் உண்மையா நம்மளுக்கு காவலா இருக்கும் போல இருக்கு' அப்படின்னு நீங்க பேசிட்டு இருந்தீங்க. அப்ப நீங்க இரண்டு பேரும் பேசிட்டு இருந்ததை வச்சு நான் உங்களோட வளர்ப்பு மகள்னு புரிஞ்சுக்கிட்டேன்.''

கஸ்தூரி இப்போது கண் கலங்கினார்.

''ஓஹோ, இதை மனசல வச்சுக்கிட்டுத்தான் நீ மீரா என்ன மிரட்டு மிரட்டினாலும் தாங்கிகிட்டு பதில் சொல்லாம இருந்தியா?'' என்றார்.

தாரா தலையசைத்தாள். ''அட அசடே எங்களுக்கு நீங்க ரெண்டு பேரும் ஒண்ணுதான். நீ வேற யாருடி? எங்க அக்கா பெத்த புள்ளைதானே? உன்னை எப்படி நாங்க கை விடுவோம்'' என்று அணைத்துக் கொண்டார் கஸ்தூரி.

காளமேகம் மீராவைப் பார்த்தார்.

மீரா சட்டென்று எழுந்து வந்து தாராவை அணைத்துக் கொண்டாள். ''யாருடி சொன்னா நீ எங்க வீட்டுப் பொண்ணு இல்லைன்னு. நீ எப்பவும் எங்க வீட்டுப் பொண்ணுதான். இதுதான்டி இடையில வந்த உறவு!'' என்றாள்.

தாராவும் மீராவும் ஒருவரை ஒருவர் அணைத்துக்கொண்டார்கள்.

''தாரா இந்த அக்கா பண்ணின அசட்டுத்தனத்தையெல்லாம் மன்னிச்சிடுவியாடி!'' என்றாள் மீரா அழுகையுடன்.

''நீ எந்த அசட்டுத்தனமும் பண்ணலை அக்கா. நீ ஒரு உண்மையான அக்காவா நடந்துக்கிட்டே. எல்லா வீட்டுலயும் அக்கா தங்கைகள்னா இப்படித்தான் நடந்துக்குவாங்க. செல்லச் சண்டை போட்டுக்குவாங்க'' என்று தாரா அவளை அணைத்துக் கொண்டாள்.

''சரி, சரி... அங்க ஒருத்தன் காத்துக்கிட்டிருக்கான்!'' என்றார் கலசலிங்கம்.

மேலும் சற்று நேரம் அவர்கள் எல்லோரும் பேசிக் கொண்டிருந்து விட்டு நகர்ந்தார்கள்.

''அப்புறம் இப்ப கவனிக்கறது!'' என்றான் கல்யாண ராமன்.

அவள் சட்டென்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டு அவன் மார்பில் இரண்டு கைகளாலும் குத்தினாள். ''சரியான ஸ்கீமர் நீங்க. இத்தனை எல்லாம் மனசல வச்சுட்டு திட்டம் போட்டு எங்க வீட்டுக்கு வந்து இருந்ததும் இல்லாம அப்பாவி வேஷம் வேற போட்டீங்களா?'' என்று பொய்க் கோபத்துடன் கேட்டாள்.

அவன் கலகலவென்று சிரித்தான்.



''நாளைக்கு நாம அங்க பக்கத்துல இருக்கற நம்ம வயல்ல இருக்கிற கெஸ்ட் ஹவுஸுக்குப் போறோம். அங்க வச்சு நான் அப்பாவி இல்லைன்னு உனக்கு நிரூபிக்கிறேன்'' என்றான்.

அவள் வெட்கத்துடன் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

## 11

தனிமையும், இனிமையும் நிறைந்த அந்த இரவுப் பொழுதில் கல்யாண ராமன் கைகளுக்குள் அடங்கி இருந்தாள் தாரா.

''பெரிய ஸ்கீமராக்கும் நீங்க!'' என்றாள். அவன் சிரித்தான்.

''கதை, வசனம், டைரக்‌ஷன் எல்லாம் கலசலிங்கம் அவர்கள். எக்ஸ்கியூஷன் மட்டும்தான் நம்மளுது அம்மணி'' என்றான்.

''ஏங்க, எங்க அப்பா எப்ப இறந்தாரு?'' என்று கேட்டாள்.

''அது இருக்கும் ஒரு நாலு வருஷம்'' என்றான்.

''கொஞ்சம் முன்னாடி சொல்லியிருந்தா ஒருவேளை நான் அவரைப் பார்த்திருப்பேனோ?'' என்று கேட்டாள் தாரா.

''அவருகூட அப்போ சித்தி இருந்தாங்க. சித்தியோட மனசு நொந்து போயிரக் கூடாதே - அப்படின்னுதான் அம்மா அப்பாகிட்ட தனியாதான் சொன்னாங்க'' என்றான்.

''பாவம். வாயில்லாப் பிராணியா இருந்திருப்பாரோ?'' என்றாள் தாரா.

கல்யாண ராமன் ஒரு பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னான். ''என்னால அதை ஒத்துக்க முடியலை தாரா. அப்பாகிட்ட சொல்றதுக்கு பயமா இருந்தா எழுதிக் கொடுத்திருக்கலாம். ஒரு பொண்ணுக்கு வாழ்க்கை கொடுத்துட்டு அதை சொல்றதுக்கு தைரியம்

இல்லைன்னா அது எப்படி?அதை என்னால ஏத்துக்க முடியலை'' என்றான்.

''ஒஹோ! அதனாலதான் பரிதாபப்பட்டு நீங்க இப்படியெல்லாம் திட்டம் போட்டீங்களோ?'' என்றாள் அவள்.

''இல்லை தாரா! தாத்தா, அப்பா எல்லாரும் திட்டத்துல உன்னையும் என்னையும் இணைக்கணும்னு பிரியப்பட்டாங்க. ஆனா நான் ஒரு கண்டிஷன் போட்டேன்'' என்றான்.

அவள் ஆர்வமாக முகத்தைப் பார்த்தாள். ''பொண்ணு எனக்குப் பிடிக்கணும். நகரத்துல வளர்ந்த பொண்ணு. ஆடம்பரமா இருப்பாளோ நாகரீகமா இருப்பாளோ அப்படிங்கற கவலையெல்லாம் எனக்கு இருந்தது. என்னா இந்த கிராமத்துல நமக்கு நிறைய சொத்துக்கள் இருக்குது. இதை விட்டுட்டு நகரத்துப் பக்கம் போக முடியாது. ஆனா, வர்றபொண்ணு இந்த வாழ்க்கைக்கு ஒத்துப் போறவளா இருக்கணும். எல்லாத்தையும் யோசிச்சுத்தான் நான் ஸ்டெப் எடுக்கவேண்டியிருந்தது. அதனால நான் அம்மா அப்பாகிட்ட சொல்லிட்டேன். பொண்ணு எனக்குப் பிடிக்கணும் - அப்பத்தான் கல்யாணம் பண்ணிப்பேன். இல்லைன்னா வேற நல்ல மாப்பிள்ளையாப் பார்த்து கல்யாணம் பண்ணி வச்சிடலாம் அப்படின்னு சொன்னேன்.''

அவள் முறைத்தாள். ''ரொம்ப நினைப்புத்தான்'' என்றாள்.

''எனக்கு அப்பத் தெரியலை. இப்படி அதிதேவதையா ஒரு பொண்ணு என் கண்ணுல படுவா. அவ என்னை வேற எந்த வேலையும் செய்ய முடியாதபடிக்கு கட்டிப்போடுவா அப்படின்னெல்லாம் எனக்குத் தெரியலையே?'' என்றான்.

''ஹலோ, இதென்ன காம்ப்ளிமெண்ட்டா - இல்லை கம்ப்ளெய்ண்ட்டா?'' என்றாள். ''காம்ப்ளிமெண்ட்டான கம்ப்ளெய்ண்ட்னு வச்சுக்கயேன்'' என்றான்.

''விவரம்தான். அப்படியில்லைன்னா வந்த ஆறு மாசத்துக்குள்ளே இரண்டு வேலை முடிச்சிருப்பீங்களா?'' என்றாள்.



''எந்த ரெண்டு வேலை?'' என்றான்.

''ஒரு பக்கம் என்னை மடக்கறது. இன்னொரு பக்கம் பெரிய பிசினஸை மடக்கறது - ரெண்டையும் மடக்கிட்டீங்களே?'' என்றாள் அவள்.

அவன் சிரித்தான்.

''ஆக்சுவலா நான் அங்க வரும்பொழுது பெரிய அளவுல பிசினஸ் பண்ணனுங்கற ஐடியாவுல வரலை. ஆனா உங்க அம்மா அப்பா உன் மேல வச்சிருந்த பாசத்தைப் பார்த்துட்டு ஒரேயடியா உன்னை அவங்ககிட்ட இருந்து பிரிச்சு கூட்டிட்டு வர முடியாதே. அப்பப்ப போயிட்டு வந்துட்டுதான் இருக்கணும் அப்படிங்கறது எனக்குப் புரிஞ்சது. அதனால தான் நான் அங்க ஒரு பிசினஸ் செட் பண்ணினேன். தகுந்த மாதிரி கிருஷ்ண பிரசாதுக்கும் ஒரு தேவை வந்தது. எல்லாம் ஆண்டவனுடைய திட்டம். என்னோட திட்டம் இல்லை.அவரையும் உட்கார வச்சுட்டேன். இப்போ அங்கயும் போகலாம். இங்கயும் இருக்கலாம்'' என்றான் அரன்.

''ரொம்ப தாங்க்ஸ்ங்க. ஆனா, நான் ஒருவகையில அதிர்ஷ்டசாலிதாங்க'' என்றாள்.

''அம்மாவுக்கு இவ்வளவு பெரிய கொடுமை நடந்திருக்கு. ஆனாலும், இந்தக் கவலை எதுவுமே தெரியாம அம்மா அப்பா என்னை வளர்த்தாங்க. எனக்கு ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி அரசல் புரசலா இது தெரிஞ்சவுடனே அதை ஜீரணம் பண்ணிக்கறதுக்கு ரொம்ப கஷ்டப் பட்டேன். ஆனா அப்புறமா மனசை தேத்திக்கிட்டேன்.''

அவன் சற்றே உணர்ச்சிவசப்பட்டவனாய் அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

''ஒவ்வொரு நேரத்துக்கு என்னைப் பெத்தவங்க யாருன்னு கேட்க தோணும். ஆனா, அப்படிக் கேட்டா அவங்க எவ்வளவு சங்கடப்படுவாங்க அப்படிங்கறதாலே நான் கேட்கலை'' என்றாள்.

''உனக்கு இன்னொரு விஷயம் தெரியுமா?'' என்றான் கல்யாண

ராமன்.

''என்ன விஷயம்?'' என்றாள் அவள்.

''எங்க வீட்டுல இருந்து பொண்ணு கேட்டு வந்த உடனேயே உங்க அம்மாவும் அப்பாவும் வந்து என்னை பார்த்தாங்க. பார்த்துட்டு நீ அவங்களோட குழந்தை இல்லைங்கறதை சொன்னாங்க. அதுக்கப்புறம் தான் நானும் நான் யாருங்கறதை சொன்னேன். உடனே அவங்களுக்கு ரொம்ப சந்தோஷம். அதனால தான் இந்த ஏழை வேஷத்துக்கெல்லாம் ஒத்துழைச்சாங்க'' என்றாகன்.

''சரியான திருடனாக்கும் நீங்க!'' என்று செல்லம் கொஞ்சினாள் அவள்.

''பின்னே அவனவன் என்னென்னமோ சாகசமெல்லாம் செய்யறான். நான் என்ன சின்னதா ஒரு பொய் சொன்னேன்''

''சின்ன பொய்யா? பெரிய பொய். நான் போட்ட ரெண்டு கண்டிஷனையும் உடைச்சுட்டீங்கள்லே?'' என்றாள் அவள்.

''என்ன பெரிய கண்டிஷன்? வசதியில்லாதவனா இருக்கணும். இங்க பாரு. வாழ்க்கைக்கு வசதி வேணும்தான். எப்படா யாரு பணம் கொடுப்பாங்கன்னு அலைஞ்சிட்டு இருக்க முடியுமா?'' என்றான் கல்யாண ராமன் காட்டமாக.

''பேசுவீங்க ,பேசுவீங்க. நீங்கள்ளெல்லாம் பெரிய ஆளுங்கல்லே?'' என்றாள்.

''அது என்ன இன்னொரு கண்டிஷனை நான் உடைக்கலையே?'' என்றான் அவன். ''இவ்வளவு வெவரமா ப்ளான் பண்ணி உங்க சொத்தையும், என் சொத்தையும் நம்ம சொத்தா பண்ணிட்டிங்கள்னே?'' என்றாள் அவள்.

அவன் சிரித்தான். ''இது என்னோட திட்டம் இல்லை, பெரியவங்களோட திட்டம். இன்னொண்ணு தெரிஞ்சுக்க. சொத்துக்காக நான் இதுக்கு ஒத்துக்கலை. தாரா அப்படிங்கற ஒரு அழகான பெண் என் உள்ளத்தை கொள்ளை கொண்டு விட்டாள். அதனால் ஒத்துக்கிட்டேன்'' என்றான்.



''ஜஸ் ஜஸ்'' என்றாள் அவள்.

''ஆமா. இப்படி ஒரு பௌர்ணமி நில்வு நேரத்துலே....!'' என்று எட்டிப் பார்த்தான்.

அவர்கள் அமர்ந்திருந்த பின் கட்டு ஜன்னல் வழியே பசுமை பூத்துக் கிடந்தது.

வயல்வெளிகள் எல்லாம் கண்ணுக்குத் தெரிந்தன. நெற்பயிர்கள் அசைந்தாடிக் கொண்டிருக்கும்பொழுது அதைக் காட்டிய படியே அவன் சொன்னான். ''பௌர்ணமிக்குன்னு ரெண்டு மூணு நாள் இருக்கற இந்த நிலைமையில இப்படி ஒரு இடத்துல உட்கார்ந்து ஐஸ் வைக்கலைன்னு வை...! அப்புறம்...'' என்று தன் ஆள்காட்டி விரலால் தன்னுடைய தோளைத் தட்டிக் கொண்டு ''ஆண்பிள்ளை இல்லைன்னு அர்த்தம்''என்றான்.

''அது தெரிஞ்ச விஷயமாச்சே! இது வேற நீங்க இப்படியெல்லாம் காட்டணுமா?'' என்றாள் அவள்.

''ஏய் தார்ா, நீ இப்படியெல்லாம் வாயடிப்பியா'' என்று அவன் மெல்ல விலகப் பார்த்த அவளை அருகிலே இழுத்துக் கொண்டான்.

''அது ஏன் தாரா இப்படி நடக்குது?'' என்றான்.

அவள் புரியாமல் பார்த்தாள்.

''ஒண்ணு வேணும் வேணும்னு அலையறவங்களுக்கு கிடைக்க மாட்டேங்குது. ஆனா நீ வேணாம் வேணாம்னு சொன்னே. எல்லாமே உன்க்கு வந்து சேர்ந்துடுச்சு'' என்றான்.

''கூடவே இந்த திருகு வலியும் வந்திருக்கே'' என்றாள்.

''திருகு வலியா? நானா? இப்படி ஒரு பட்டம் கொடுத்ததுக்கு உனக்கு சரியான தண்டனை கொடுத்துத்தான் ஆகணும்'' என்றான்.

அவள் அவனுக்கு வாகாக இழைந்து கொடுத்துக்கொண்டு ''என்ன தண்டனை கொடுப்பீங்க? குடுத்துத்தான் பாருங்களேன்'' என்றாள்.

''கொடுக்கட்டுமா? கொடுக்கட்டுமா?'' என்று அவன் தண்டனைகளை வாரி வழங்கினான்.

அவளும் வெட்கத்துடன் அதையெல்லாம் வாங்கிக் கொண்டாள்.

''அது சரி, உங்க அக்கா மாதிரி உனக்கும் மேக்கப் கிட்டெல்லாம் நிறைய வாங்க வேண்டியிருக்குமா?'' என்றான்.

அவள் சிரித்தாள்.

''அவ பாவங்க. அவளுக்கு இந்த மேக்கப்புக்கெல்லாம் அர்த்தம் என்னன்னு தெரியலை?''

''என்னவாம் அர்த்தம்?'' என்றான்.

அவள் வெட்கத்துடன் சிரித்தாள். ''சைக்காலஜிஸ்ட்ஸ் இதை என்ன தெரியுமா சொல்றாங்க? ஒரு விதமான அழைப்பு அப்படின்னு சொல்றாங்க.இப்படி அளவு மீறி மேக்கப் செய்யறவங்களுக்கெல்லாம் உள்ளூர ஒரு காம்ப்ளக்ஸ் இருக்குமாம். தங்களை யாரும் கவனிக்க மாட்டாங்களோ? அதுக்கேத்த திறமைகள் எதுவும் நம்ம கிட்ட இல்லையோ அப்படிங்கற ஒரு காம்ப்ளக்ஸ் இருக்கும்'' என்றாள்.

''அப்படி எந்த காம்ப்ளக்ஸும் உங்கிட்ட இல்லையா?'' என்றான் அவன்.

''எனக்கு எதுக்கு காம்ப்ளக்ஸ்? நான் எப்பவுமே சிம்பிள் தான். என்னோட திறமைகள் என்னன்னு எனக்குத் தெரியும்'' என்றான்.

''என்ன திறமை?'' என்றான். ''இப்போதைக்கு உங்களை கட்டிப் போடற திறமை எனக்கு இருக்கு.''

அது மட்டுமா? இன்னொரு விஷயம் உனக்குப் புரியவே இல்லை. உனக்கு மேக்கப்பே தேவையில்லை. நீ மேக்கப் போட்டுத்தான் என்னை அட்ராக்ட் பண்ணனும்னு அவசியம் இல்லை. இந்த அழகான பூனைக் கண்ணால ஓரமா ஒரு பார்வை பார்த்து அப்படி வெட்கமா நின்னாலே போதும் ஐயா சரண்டர் தான்'' என்றான்.

உடனே அவள் சிலிர்த்துக். கொண்டு அவனைப் பார்த்தாள். ''வெட்கமாக இருக்கணுமா. எப்பவும் பெண்கள் வெட்கமா இருக்கணுமா? பாரதியார் என்ன தெரியுமா சொல்றாரு? வெட்கப் படக் கூடாது அப்படின்னு சொல்றாரு. நாணம், அச்சம் நாய்களுக்குத்தான்



வேணும்'' அப்படிங்கறாரு என்றாள்.

''பாரதியார் பேரையா சப்போர்ட்டுக்கு நேரம் பார்த்துக் கூப்பிட்ற?''

''இல்லைங்க. வெட்கப் படறதுங்கூட ஒரு தலைமுறை பழக்கம் தான் போல இருக்கு.''

அவன் உடனே இரண்டு கைகளையும் மேலே தூக்கி ''தாயே சரணம். நீ வெட்கமே பட வேண்டாம். ஏன்னா நீ எனக்கு எப்பவும் ஈக்குவல்.''

அவள் சிரித்தாள் அது.

''ஆனால், உண்மையிலே ஆண்களும் சில நேரத்துல வெட்கப் படணும். நீங்ககூட மணவறையில வெட்கப் பட்டீங்க'' என்றாள்.

''ஆமா, அந்தப் பசங்கஎல்லாம் சுத்தியும் நின்னுகிட்டு ஒரே கலாட்டா பண்ணிட்டு இருந்தாங்க. எக்கச்சக்கமா பேசறாங்க. அப்புறம் வெட்கப் படாம என்ன பண்றது?''

''தெரியுதா அப்ப நாணம் பெண்களுக்கு மட்டும் இல்லை. ஆண்களுக்கும் வரும். இந்த மாதிரி விஷயங்கள்ல ரெண்டு பக்கமும்தான் வரும்'' என்றாள் தாரா.

''அம்மணி இவ்வளவு இன்டலிஜண்டாவும் பேசுவீங்களா?'' என்றான் அவன்.

''பேசுவோம் பேசுவோம்'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கையிலே,

பேசுவதற்கு இனி நேரம் இல்லை அம்மணி என்று அவன் கைகளுக்குள் அணைத்துக் கொண்டான்.

அவளும் இழைந்து கொடுத்தாள்.

நிறைய பேசணும்னு நினைச்சேன்'' என்றாள்.

''போதும். வாழ்க்கை முழுக்க பேசலாம். இப்ப முக்கியமான விஷயங்களுக்கு தெளிவு கிடைச்சாச்சா இல்லையா?''

''நீங்களும் இந்த ஊருக்கும், இந்த வீட்டுக்கும், இந்த சொத்துக்கும், முழு அதிகாரமுடையவர். சரியா? அது மட்டும் இல்லை. இந்த அடிமை மேலும் முழு அதிகாரம் உடைய மகாராணி நீங்க'' என்றான் அவன்.

அவள் செல்லமாக அவன் மூக்கைப் பிடித்து ஆட்டினாள். ''இதுவும் தான் வேண்டும்'' என்றாள்.

''எதுவும்?'' என்றான் அவன் குழைந்து போன குரலில்.

''நானும் அடிமை இல்லை. நீங்களும் அடிமை இல்லை. ரெண்டு பேரும் அன்பா ஈக்குவலா இருப்போம்'' என்றாள்.

''சரி. ஆண்டான் அடிமையே வேண்டாம். நாம இரண்டு பேரும் இந்நாட்டு மன்னர்கள். சரியா?'' என்றான் அவன்.

''அது சரி'' என்றாள் அவள்.

''உனக்கு நான் ஒரு பரிசு வச்சிருக்கேன். காட்டட்டுமா?'' என்றான்.

''காட்டுங்க'' என்றாள் அவள்.

அவன் பீரோவில் இருந்து ஒரு போட்டோவை எடுத்தான். அந்த போட்டோவைப் பார்த்தவுடனேயே அவளுக்குப் புரிந்தது. அது அவளுடைய தாய் தந்தை இரண்டு பேரும் இணைந்து எடுத்துக் கொண்ட போட்டோ.

''இதை கடைசி கடைசியா மாமா எங்க அப்பாகிட்ட கொடுத்திருக்காரு. நான் அதை வாங்கி பத்திரமா வச்சிருந்தேன் - உனக்கு அதை பரிசா கொடுக்கணும் அப்படின்னு.''

அவள் அந்தப் படத்தைக் கையில் வாங்கிக் கொண்டாள்.

கண்களில் கண்ணீர் நிறைய தாய் தந்தை படத்திற்கு அழுந்த இரண்டு முத்தங்கள் கொடுத்தாள். கொடுத்து விட்டு திரும்ப கல்யாண ராமனிடத்திலேயே கொடுத்து விட்டாள்.

''இருக்கட்டுங்க. இவங்க அந்த பீரோவிலேயே இருக்கட்டும். இந்த மாதிரி எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாம வளர்த்தாங்களே அவங்கதான் எனக்கு அம்மா. அப்பா. இவங்களை நான் நேசிக்கிறேன்.



ஆனா, அவங்களைத்தான் நான் மதிக்கிறேன்'' என்றாள்.

''வெரி குட். நீ இப்படித்தான் சொல்லுவேன்னு எனக்குத்தெரியும் என்றான் கல்யாணராமன்.''

''ஆனா, இந்த அம்மா அப்பாவுக்கு நான் நன்றி சொல்றேன்'' என்றாள் அவள்.

''எதுக்கு?'' என்றான்.

''அவங்க தானே உங்களை என்கிட்ட சேர்த்திருக்காங்க. அதுக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கேன்'' என்றாள்.

''அந்த நன்றிக்கடனை எப்படிச் செலுத்துவியாம்'' என்றான்.

''எப்படி? நீங்க கேட்கறதையெல்லாம் கொடுத்துத்தான்.''

''அப்ப நான் லிஸ்ட் போடட்டுமா?'' என்றான் அவன்.

''ஆனா, எல்லாம் தவணை முறையில தான்'' என்றாள் அவள்.

''மளிகைக் கடைக்காரர் மகள்னு காமிச்சிட்டியே'' என்றான் அவன்.

''ஆமாங்க.''

''சரி சரி சரக்கு முறுக்கா இருந்தா சரி.'' என்று அவன் சிரித்துக் கொண்டே அவளைத் தன் கைகளுக்குள் இழுத்துக் கொண்டு ''போதும் பேச்சு போதும்'' என்றான்.

''ஆமாம். இனிமேல் எல்லாம் அனுபவங்கள்தான்'' என்று சொல்லிக் கொண்டே காதருகிலே கிசுகிசுத்தான். ''நான் தேடி வந்த கவிதை நீ. எனக்கு பொக்கிஷமாக கிடைச்ச கவிதை நீ. என்னுள் கலந்த கவிதை'' என்றான்.

''இப்படியெல்லாம் வேற உளறுவீங்களாக்கும்'' என்றாள் அவள்.

''மேல் பார் நிலா. கையில பாரு நிலா. நிலான்னா உடனே எனக்கு ஒரு பாட்டு ஞாபகத்துக்கு வருது. பாரதி ராஜா படத்துல அந்த பாட்டு முதல் முதல்ல கேட்ட வுடனே நான் நினைச்சேன் - அந்த நிலாவத்தான் நான் கையில புடிச்சேன். அப்படிங்கற பாட்டு.

அந்தபாட்டு கேட்டவுடனே எங்கே நான் பார்க்கறேன் அப்படின்னு அந்த கதாநாயகி கேட்கறா. அப்ப எப்படி காட்டுவான். அப்படிங்கற யோசனையோட நான் நிக்கறேன். கண்ணை மூடு. நான் கட்டறேன்னு சொல்றான் பாரு. அந்த இடத்துல கவிஞன் ஜெயிச்சான்'',என்றான் கல்யாண ராமன்.

''கவி ரசனையும் இருக்குதா?'' என்றாள்.

''இருக்குது நீ அப்படியே கண்ணை மூடுவியாம். நான் நிலாவை காட்டுவேனாம்'' என்றான்.

அவள் சிரித்தாள்.

அவள் அவனிடம் அடைக்கலம் ஆனாள்.

**க**டந்த சில நாட்களுக்குள்ளாக அவள் வாழ்க்கையை புரட்டிப் போட்ட சம்பவங்கள் நிகழ்ந்த போதும் அவற்றுக்கெல்லாம் நிறைவாக கல்யாண ராமனைக் கொண்டு வந்து காலம் அவளோடு சேர்த்தது.

இரண்டு பேரும் கை கோர்த்துக் கொண்டு எதிர்காலத்தை எதிர்கொள்ள அவர்கள் முழுமையாக தயாரானார்கள்.

கல்யாண ராமனுடைய பார்வை மெல்ல வெளியே நோக்கியது. வெளியிலே நெற்கதிர்கள் எல்லாம் நிலவொளியில் பட்டுப் போல் மின்னிக் கொண்டு அசைந்தாடி அவர்களுக்கு ஆசையை வரச் செய்தது.

அவன் ஏதோ சொல்ல - அவள் கலகலவென சிரிக்கலானாள்.

அந்தச் சிரிப்பில் அவனும் இணைந்து கொண்டான்.



Kudumba Novel

Owner, Publisher and Printer G. Asokan Published at 352, Triplicane High Road, Triplicane, Chennai - 600 005. Printed at Geeye Publications (PRINTERS) 352, Triplicane High Road, Triplicane, Chennai - 600 005. Editor: G.Asokan

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.